

# நாடகமும் அரங்கியலும்

## (Drama & Theatre)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சை
1997-2007 வரையான
கடந்தகால வினாத்தாள்களும் விடைகளும்

---

**க. திலகநாதன்**

# நாடகமும் அரங்கியலும்

## (Drama & Theatre)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சை
1997 - 2007 வரையான
கடந்தகால வினாத்தாள்களும் விடைகளும்

தொகுப்பு
**க. திலகநாதன்**
விரிவுரையாளர் (நாடகமும் அரங்கியலும்)
தேசியக் கல்விக் கல்லூரி
யாழ்ப்பாணம்

ஜனனி வெளியீட்டகம்

தலைப்பு : **நாடகமும் அரங்கியலும்** - கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சை 1997 - 2007 வரையான கடந்தகால வினாத்தாள்களும் விடைகளும்

தொகுப்பு : க. திலகநாதன்

பதிப்பு : ஐப்பசி 2007

வெளியீடு : ஜனனி வெளியீட்டகம்
புதுவளவு , பொலிகண்டி
வல்வெட்டித்துறை

அச்சு : குமரன் அச்சகம்
- 361, 1/2 டாம் வீதி, கொழும்பு - 12 தொ.பே. 241388

Title : Drama & Theatre - A/L Past Papers with Answers
Author : K. Thilakanathan
Edition : October 2007
Published by : Janani Publishers
Printed at : Kumaran Press (Pvt) Ltd.
- 361,1/2 Dam Street, Colombo -12

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சை (புதிய பாடத்திட்டம்)

*1997 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் நடத்தப்படவுள்ள பரீட்சைகளுக்கான மதிப்பீட்டு முறையும் முன்மாதிரி வினாக்களும்.*

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)

---

இப்பாடத்துக்கான பரீட்சை மூன்று வினாத்தாள்களைக் கொண்டது. மூன்றும் எழுத்துமுறைப் பரீட்சை அடிப்படையில் அமைந்தவை. அவை ஒவ்வொன்றினதும் பாடப்பரப்பு பின்வருமாறு.

**வினாப்பத்திரம் - I**

**நாடகவியல் - எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும்**

புதிய பாடத்திட்டத்தில் வரும் அலகு 1 : 1 முதல் 1 : 6 வரையுள்ள விடயங்கள் பற்றியதாக இவ்வினாத்தாள் அமையும். இதில் நாடகம், அரங்கு பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள், நடைமுறைகள் பற்றிய வினாக்கள் இடம்பெறும்.

**வினாப்பத்திரம் - II**

**தேசிய நாடக அரங்கும் உலக நாடக அரங்கும்.**

புதிய பாடத்திட்டத்தில் வரும் அலகு 2 முதல் 3 : 7 வரையான பகுதி இவ்வினாப்பத்திரத்தில் இடம்பெறும். இலங்கை நாடக வளர்ச்சியும் பிற பிரதான அந்நிய பண்பாடுகளில் நாடகம் பெற்ற இடமும் இவ்வினாத்தாளில் இடம்பெறும்.

**வினாப்பத்திரம் - III**

**நாடகவாக்கம், இரசனை - நெறியாள்கை, நடிப்பு**

(காண்பியங்கள் பற்றியும் நாடக இரசனை பற்றியும்)

புதிய பாடத்திட்டத்தில் வரும் அலகுகள் 4, 5, 6 பற்றியதாக இவ்வினாத்தாள் இடம்பெறும் விதிக்கப்பட்ட நாடகப் பாடங்களிலிருந்தும் வினாக்கள் இடம்பெறும்.

## நாடகமும் அரங்கியலும் - I (Drama & Theatre- I)

நேரம் : மூன்று மணித்தியாலங்கள்

### பகுதி - I

இது கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டியது. இப்பகுதியில் இருபது வினாக்கள் இடம்பெறும். அவை பின்வரும் முறைகளில் அமையும் .

**உதாரணம் - 1**

சரியான விடைக்கு குறியிடுக

அரிஸ்ரோற்றில் கூறும் "கதாசிஸ்" (வெளிக்கொணர்கை) என்பது,

(1) கருத்தை வெளிக்கொணர்தல்

(2) நடித்துக்காட்டப் பெறுவதைக் கண்டு பார்ப்பவரின் உணர்ச்சிகள் வெளிக்கொணரப்படுகை

(3) நடிகர் தன் உணர்ச்சிகளை வெளிக்கொணர்கை.

**உதாரணம் - 2**

(1) வேத்தியல் பொதுவியல் எனும் வகைப்பாடு எந்த நூலிலே குறிப்பிடப் பெறுகிறது?

(2) இவ்வகைப்பாட்டின் அடிப்படை யாது?

**உதாரணம் -3**

கீறிட்ட இடத்தை நிரப்புக

தமிழ் நாடகத்தை ..............................................................என்றும் கொள்வர்.

**உதாரணம் - 4**

பின்வரும் கூற்றுக்கள் சரியானவையா அல்லது பிழையானவையா என்பதை √/ X குறியிட்டுக் காட்டுக.

"நிருத்த" என்பது நடிப்பைக் குறிக்கும் (...........)

வேட உடுப்பும் காண்பியங்களில் ஒன்றே (...........)



### பகுதி - II

இப்பகுதியில் எட்டு வினாக்கள் தரப்படும். அவற்றுள் நான்கினுக்கு விடையெழுதல் வேண்டும். இவ்வினாக்களுக்கான விடைகள் கட்டுரை வடிவிலேயே அமையும். வினாக்களின் அமைப்பு வேறுபடலாம்.

**உதாரணம் - 1**

(அ) நுண்கலைகள் என்பவை யாவை? அவை ஏன் அப்பெயர் பெற்றன?

(ஆ) நுண்கலைகளுள் "ஆற்றுகைக் கலைகள்" எவ்வாறு இடம் பெறும்? ஆற்றுகைக் கலைகள் யாவை?

(இ) நாடகம் என்னும் ஆற்றுகைக் கலையின் சிறப்புப் பண்புகள் யாவை?

**உதாரணம் - 2**

பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) ரஸக் கொள்கை (ஆ) போலச் செய்தல்

(இ) தொலைப்படுத்தல் உத்தி (ஈ) ஸ்ரனிஸ்லங்ஸ்கியின் "முறைமை"

**உதாரணம் - 3**

நாடகப் பொருளின் அடிப்படையில் நாடகங்கள் எவ்வாறு வகுக்கப்படுகின்றன என்பதை விளக்குக.

**உதாரணம் - 4**

சடங்கு எப்பொழுது நாடகம் ஆகிறது?

## நாடகமும் அரங்கியலும் - II (Drama & Theatre- II)

நேரம் : மூன்று மணித்தியாலங்கள்

### பகுதி - I

இப்பகுதி கட்டாயமானதாகும். இதில் இருபது வினாக்கள் தரப்படும். வினாக்களின் அமைப்பு வேறுபடும். நேரடி வினாக்களுக்கு மிகமிகச் சுருக்கமான விடை தரப்படல் வேண்டும்.

**உதாரணம் - 1**

இலங்கையில் காமன்கூத்து பிரதானமாக இடம்பெறும் இடம் யாது?

**உதாரணம் - 2**

"வாசப்பு" எந்தப் பிரதேச நாடக மரபில் இடம் பெறுகிறது?

கிரேக்கத் திறெஜடி உருவாக்கத்தில் சம்பந்தப்படும் கடவுளின் பெயர் யாது?

**உதாரணம் -3**

பின்வருவனவற்றுள் எது பொருந்தாது என்பதைக் கீறிடுக.

ஷேக்ஸ்பியரின் மகிழ்நெறி நாடகங்கள்

(அ) விரும்பிய விதமே

(ஆ) நடுவேனிற் கனவு

(இ) ஒதெல்லோ ஆகும்.

## பகுதி - II

இப்பகுதியில் வரும் எட்டு வினாக்களுள் நான்கு (04) வினாக்களுக்கே விடையளித்தல் வேண்டும். இவை தரப்படும் வினாக்களுக்கு அமைய கட்டுரை வடிவிலோ, சுருக்க முறையிலோ எழுதப்படுபவையாக இருத்தல் வேண்டும்.

வினாக்கள் பின்வரும் முறைமையில் அமையலாம்.

**உதாரணம் - 1**

சடங்குக்கும் நாடகத்துக்குமுள்ள உறவை இன்னும் காட்டி நிற்கும் இலங்கைத் தமிழ் நாடகங்கள் யாவை? விளக்குக.

**உதாரணம் - 2**

பின்வருவனவற்றுள் மூன்று பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) கபுக்கி (ஆ) உப - ரூபகம்

(இ) வேத்தியல் / பொதுவியல் (ஈ) சரச்சந்திரவின் நாடகப் பங்களிப்பு

(உ) மத்திய கால கிறிஸ்தவ மறைஞான நாடகங்கள்

**உதாரணம் - 3**

மட்டக்களப்பு நாட்டுக்கூத்து தமிழ் நாடகப் பாரம்பரியத்தில் முக்கியமானது என்று கூறப்படுகிறது.

(அ) அதன் பிரதான வகை யாது?

(ஆ) அவை ஒவ்வொன்றினதும் பண்புகள் யாவை?

(இ) இக்கூத்து மரபில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் யாவை?



# நாடகமும் அரங்கியலும் - III (Drama & Theatre- III)

நேரம் : மூன்று மணித்தியாலங்கள்

---

## பகுதி - I

இது கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டியது ஆகும். இதில் 20 வினாக்கள் இடம்பெறும். அவை நெறியாள்கை, நடிப்பு, அரங்கக் காண்பியங்கள், இசை, அரங்கரசனை விமர்சனம் பற்றியனவாக அமையும். இவ்வினாக்கள் ஏற்கெனவே கூறிய முறையில் குறுவிடை, சரி/ பிழை கூறல், சரியானதைத் தெரிந்து எடுத்தல் போன்ற வகைகளில் அமையும்.

**உதாரணம் - 1**

சரியானதற்கு அடிக்கோடிடுக.

நாடகத்துக்கான இசை,

(1) காட்சியின் உணர்ச்சி நிலையைச் சுட்டுவதாக

(2) வரன் முறையான இசையமைப்புடையதாக

(3) பாடல்களாக அமைதல் வேண்டும்.

**உதாரணம் - 2**

ஊமம என்பது ..........................................................................................

புத்தாக்கம் என்பது .....................................................................................

## பகுதி - II

இப்பகுதி நான்கு பாகங்களாகப் பிரிக்கப்படும்.

(1) நெறியாள்கை

(2) நடிப்பு

(3) அரங்கக் காண்பியங்களும் இசையும்

(4) ரசனையும் விமர்சனமும்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் மூன்று வினாக்கள் தரப்படும். இப்பகுதியில் விதிக்கப்பட்ட பாடப் புத்தகங்கள் பற்றிய வினாக்கள் வரும்.

**உதாரணங்கள் :**

**பாகம் - 1**

(1) "நெறியாளன் இன்றேல் நாடகம் இல்லை" விளக்குக.

(2) "மாணிக்கமாலை" யை நீர் எவ்வாறு நெறிப்படுத்துவீர்?

**பாகம் - 2**

(1) நடிகருக்கு வேண்டிய பயிற்சிகள் யாவை?

(2) இப்சனுடைய நாடகத்தில் வரும் நோறா அன்றேல் அவளது கணவனது பாத்திரத்தை நீர் எவ்வாறு சித்திரிப்பீர் என்பதை விளக்குக.

**பாகம் - 3**

(1) வேட உடுப்புத் தீர்மானித்தல், ஒப்பனை ஆகியவற்றின் பொழுது எவ்வெவ் அம்சங்கள் முக்கியமாகின்றன.

(2) ஈடிப்பஸ் மன்னனுக்கு தயாரிப்புக்கான வேட உடுப்புகளையும் இசையையும் எடுத்துக் கூறுக.

**பாகம் - 4**

(1) நீர், அண்மையில் பார்த்த ஒரு நாடகத்தினை விமர்சிக்குக. குறிப்பாக அந்நாடகத்தின் எழுத்துரு பற்றிய உமது மதிப்பீட்டைத் தருக.

(2) செகோவின் "செறித்தோட்டம்" நாடகத்தினை மதிப்பிடுக.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தரப்) பரீட்சை 1997 ஓகஸ்ட் (புதிய பாடத்திட்டம்)

## நாடகமும் அரங்கியலும்- I (Drama & Theatre) I

மூன்று மணித்தியாலங்கள்

---

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. நாடகம் என்பது ஒரு தனித்துவமான கலை என்பர்
   (i) இதன் பிரதான பண்புகள் யாவை?
   (ii) அது இசையை எவ்வாறு பயன்படுத்துகிறது?
   (iii) ஓவியத்தை எவ்வாறு பயன்படுத்துகிறது?
   (iv) இலக்கியத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

2. சினிமாவும் நாடகமும் சில அடிப்படைகளிலே வேறுபடுகின்றனவேயெனினும் இன்று நாடகம் எழுதும் பல அறிஞர்கள் சினிமாவையும் அரங்கினுள் உருவாவதாகவே கருதுகின்றனர். இவ்வாறு கருதுவதற்கான காரணங்கள் யாவை?

3. எழுத்துருவாக்கம் என்பது யாது?
   (i) அது நாடகத்துக்கு எவ்வாறு முக்கியமானதாகின்றது?
   (ii) எழுத்துருவாக்கத்தில் இடம்பெறவேண்டிய அத்தியாவசிய அம்சங்கள் எவை?

4. பரதா கூறும் ரஸக் கோட்பாடு என்பது யாது?
   (i) ரஸங்கள் எத்தனை வகைப்படும்?
   (ii) ஒரு குறிப்பிட்ட ரஸம் எவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்றது?
   (iii) இந்த ரஸம் எவ்வாறு பார்வையாளரிடத்து ஏற்படுத்தப்படுகின்றது?

5. அரங்கில் "யதார்த்த வாதம்" என்பது யாது? அது ஏன் முக்கியமாகிறது? அது எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது? யதார்த்த வாதம் எப்பொழுதும் ஒரு முக்கிய கோட்பாடாகக் கருதப்படுகின்றதா?

6. நாடகத்துக்கு நெறியாள்கை அவசியமானதென்று கருதப்படுகின்றது.
   (i) ஒரு நெறியாளருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் யாவை?
   (ii) ஒரு நாடகத்தின் வெற்றி தோல்வியை அவர் மாத்திரம் நிச்சயிக்கிறாரா?

7. நாடகம் ஏன் சமூகத்துக்கு வேண்டிய ஒரு கலைப் பயில்வாக உள்ளது?
   (i) அது எவ்வெவ்வகையில் சமூக நல் இயக்கத்துக்கு உதவுகிறது?
   (ii) நாடகம் பற்றிக் கூடாத அபிப்பிராயம் சமூகத்தில் ஏற்பட்டமைக்கான காரணங்கள் யாவை?
   (iii) இப்பொழுதும் அந்த நிலைமை உள்ளதா?

8. மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கினுக்கு சிறு குறிப்புகள் எழுதுக.
   (i) கலைக்கும் விஞ்ஞானத்துக்குமுள்ள அடிப்படை வேறுபாடுகள்
   (ii) குழந்தைகளுக்கான நாடகங்கள்
   (iii) நாடக பாடமும் ஆற்றுகைப் பாடமும்
   (iv) வானொலி நாடகத்தின் பிரதான பண்புகள்
   (v) தொலைக்காட்சி நாடகத்தின் பிரதான பண்புகள்.

## நாடகமும் அரங்கியலும்- II (Drama & Theatre) II

மூன்று மணித்தியாலங்கள்

---

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. (i) தமிழ்நாட்டு அரங்க வளர்ச்சியை எத்தனை காலகட்டங்களாக வகுக்கலாம்?
   (ii) அவ்வாறு வகுப்பதற்கான காரணம் யாது?
   (iii) இக்காலகட்டம் ஒவ்வொன்றினதும் மிகப் பிரதான பண்பைச் சுருக்கமாகக் கூறுக

2. பாரம்பரிய இலங்கைத் தமிழ் நாடகம் பிரதேச நிலைப்பட்டது என்பர்
   (i) அந்தப் பிரதேசங்கள் யாவை?
   (ii) அவை ஒவ்வொன்றினதும் தனித்துவமான பண்புகள் யாவை?



   (iii) இப்பிரதேசப் பாரம்பரியங்களிடையே ஒருமைப்பாடு இல்லையா?
   (iv) இப்பிரதேச நாடக வடிவங்களின் இன்றைய நிலை யாது?

3. இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றில் பேராசிரியர் வித்தியானந்தன் மேற்கொண்ட கூத்து மரபின் மீள் கண்டுபிடிப்பு ஒரு பிரதான திருப்புமுனை என்பர்.
   (i) கூத்தின் மீள்கண்டுபிடிப்புக்கு முன்னர் நிலவிய பிரதான நாடகச் செல்நெறிகள் யாவை?
   (ii) கூத்து மீள்கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் வரும் வளர்ச்சிகளுடன் இம் மீள்கண்டுபிடிப்பு எவ்வகையில் தொடர்பு கொண்டிருக்கின்றது?

4. (i) 1960 - 1990க் காலப்பகுதியில் இலங்கைத் தமிழ்நாடக அரங்கில் நீர்காணும் பிறமொழி அரங்கச் செல்வாக்குகள் யாவை?
   (ii) இலங்கைத் தமிழ்நாடகத்தின் செம்மையான வளர்ச்சிக்கு அவை எவ்வாறு உதவியுள்ளன?

5. சிங்கள மக்களிடையே நிலவும் பாரம்பரிய அரங்கு பெரும்பாலும் சடங்கு அரங்காகவே உள்ளது என்பர்.
   (i) அந்தச் சடங்குகள் யாவை?
   (ii) அவை எவ்வாறு நாடகமாக அமைகின்றன?
   (iii) இச்சடங்கு மரபுகளுக்கும் தமிழ்நாடக மரபுகளுக்கும் உறவு உண்டா?

6. கிரேக்கர் காலம் முதல் ஷேக்ஸ்பியர் காலம் வரை மேனாட்டு அரங்கக் கட்டட அமைப்பு முறைமையில் (Theatre Architecture) ஏற்பட்ட முக்கிய மாற்றங்களை விளக்குக.

7. மேனாட்டு அரங்க வளர்ச்சியின் பிரதான மைல்கற்களாக அமையும் நாடகாசிரியர்களாக நீர் யார் யாரைக் கொள்வீர் - உமது தெரிவிற்கான காரணங்களைக் கூறுக.

8. உலகின் முக்கியமான அரங்குகளிற் சீன - யப்பானிய அரங்குகளும் இடம்பெறுகின்றன.
   (i) சீன அரங்கின் பிரதான நாடக வடிவங்கள் யாவை?
   (ii) யப்பானிய அரங்கின் பிரதான நாடக வடிவங்கள் யாவை?
   (iii) இவ் அரங்குகளுக்கு மேல் மட்டத்தில் ஏற்பட்ட மதிப்புக்கான காரணங்கள் யாவை?

# நாடகமும் அரங்கியலும்- III (Drama & Theatre) III

மூன்று மணித்தியாலங்கள்

## பிரிவு I - அரங்க நெறியாள்கை

இப்பிரிவில் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

01. உமது பாடசாலையில் ஒரு நாடகத்தை நீர் நெறியாள்கை செய்ய வேண்டுமென்று கேட்கப்படுகிறது.

(i) நாடகத்தைத் தெரிவு செய்வதற்கு நீர் முக்கியமானவையாகக் கருதும் மூன்று அம்சங்களைத் தருக.

(ii) நடிபாகமளித்தலுக்கு (Casting) நீர் கைக்கொள்ள விரும்பும் முறை யாது?

(iii) ஒத்திசையின் போது நீர் பேணவிரும்பும் சூழல் எத்தகையது.

(iv) ஆற்றுகையின் பின்னர் (Post performance) நீர் மேற்கொள்ள விரும்பும் நடவடிக்கைகள் யாவை?

02. "நெறியாள்கை என்பவர் படிமங்களை (Images ) தோற்றுவிப்பவர்" என்று கூறப்படுகின்றது.

(i) இதிலிருந்து நீர் என்ன விளங்குகிறீர்?

(ii) படிம உருவாக்கம் எவ்வாறு ஏற்படுகிறது?

(iii) "உமது வீடு" எனும் பொழுது உமது மனதிலே கிளம்பும் படிமங்களைத் தருக.

(iv) "உமது வீடு" பற்றிய படிமங்களை எத்தகைய பார்வையாளர் முன் ஆற்றுகை செய்ய விரும்புவீர்?

03. சொஃபொக்ளிஸிசின் இடிப்பஸ் நாடக பாடத்திற் பின்வரும் அம்சங்களைப் பகுப்பாய்வு செய்க.

(i) நாடகக் கதையின்படி நாடகம் ஆரம்பிக்கும் பொழுதுள்ள சூழ்நிலை.

(ii) நாடகத்தின் செயல்நிலைகள் (dramatic actions) மூன்று

(iii) மேற்கூறிய செயல்நிலைகளிலிருந்து மேற்கிளம்பும் பாத்திரப் பண்புகள்

(iv) மேற்கூறிய செயல்நிலைகள் சுட்டும் மனநிலைகள்



## பிரிவு II - நடிப்பு

இப்பிரிவில் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

04. (i) நடிக்கும் போது நடிகர் "தன்னை" மறக்கிறாரா?

(ii) உமது நடிப்பனுபவங்களில், நீர் மனநிறைவு பெற்ற ஒரு சந்தர்ப்பத்தை எடுத்துக் கூறுக.

(iii) மனநிறைவுக்கான காரணம் யாது?

(iv) அந்த நடிப்பை எவ்வாறு உம்மால் செய்ய முடிந்தது? விளக்கிக் கூறுக.

05. ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோ நாடகத்தில் வரும் ஏதாவதொரு பாத்திரத்தின்

(i) உடலியல் பண்புகள்

(ii) உளவியல் பண்புகள்

(iii) சமூக ஊடாட்டப் பண்புகள் யாவை?

(iv) நாடக பாடத்திலிருந்து மேற்படி பண்புகளை எவ்வாறு கண்டு கொண்டீர்?

06. (i) "நடிப்பின் மூலம் பார்வையாளரின் ஐம்புலன்களுக்கும் விருந்தளிக்க முடியும்." ஒவ்வொரு புலனுக்குமான உதாரணங்கள் ஒவ்வொன்று தருக.

(ii) நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் பார்வையாளர் எவ்வெத் துலங்கல்களில் (Responses) ஈடுபடக்கூடிய சாத்தியங்கள் உண்டு? இத் துலங்கல்கள் நடிப்பில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்கள் யாவை?

## பிரிவு III - அரங்க நிர்மாணம்

இப்பிரிவில் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

07. (i) உமக்குப் பெரிதும் விருப்பமான ஒரு இடத்திற்குச் செல்லும் போதுள்ள உமது மனநிலையைப் பிரதிபலிக்கக்கூடிய படிமங்கள் சில வரைக. நீர் செல்லும் இடம் யாது என்பதனைக் குறிப்பிடுக. அவற்றை ஆற்றுகை செய்ய உகந்த

(ii) காட்சி அமைப்பு (Scenery)

(iii) ஒளியூட்டு (Lighting) என்பவற்றைத் திட்டமிடுக.

(iv) மேற்படி படிமங்கள் எவ்வாறு உம்மைப் பிரதிபலிக்கின்றன என்பதை விளக்குக.

08. குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "மாதொரு பாகம்" நாடகத்திற்கான
   (i) காட்சி அமைப்பு (Scenery)
   (ii) தட்டுமுட்டுகள் (Properties)
   (iii) ஒளியூட்டு
   (iv) வேடமுகம் (Mask) என்பவற்றைத் திட்டமிடுக.

09. வட்ட அரங்கிலும் படச்சட்ட அரங்கிலும் பின்வருவன வேறுபடுமாற்றை ஒப்பிடுக.
   (i) நடிகர் வரவு
   (ii) காட்சி அமைப்பு
   (iii) ஒளியூட்டு
   (iv) நடிகர் - பார்வையாளர் உறவு

### பிரிவு IV - நாடக இரசனையும் மதிப்பீடும்

இப்பிரிவில் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

10. இராமாயணம் அல்லது மகாபாரதத்தில் வரும் யாதேனும் ஒரு சம்பவத்தை உமது கண்ணோட்டத்தில் எடுத்துக் கூறுக.

11. நடிகர் ஒருவர் பல்வேறு ஆற்றுகைகளைச் செய்தாலும் அவர்களது ஒரு சில ஆற்றுகைகளே மறக்க முடியாத அநுபவங்களாக அமைகின்றன. இது எவ்வாறு ஏற்படுகிறது? சிவாஜி கணேசன் அல்லது கமலஹாசன் நடித்தனவற்றுள் யாதேனும் ஒரு கட்டத்தை உதாரணமாகக் கொண்டு இவ்விடயத்தை ஆராய்க.

12. "மாணிக்கமாலை"யில் பாத்திர வார்ப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதை விளக்குக.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சை 1998 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

## நாடகமும் அரங்கியலும் I (Drama & Theatre - I)

ஒரு மணித்தியாலம்

முதலாம் பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக. முதலாம் பகுதியில் வரும் வினாக்களுக்கு ஏற்ப விடைகளை மிகச் சுருக்கமாக எழுதவும் இரண்டாம் பகுதியிலுள்ள வினாக்களுக்கு விடை எழுதும்பொழுது தேவையான விளக்கச் சித்திரங்களை வரையின் மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

---

### பகுதி 1

☞ கீழ்வரும் கூற்றுக்கள் சரியானவையா அன்றேல் பிழையானவையா என்பதைக் √/x குறியிட்டுக் காட்டுக. ( √ சரி x பிழை)

1.
   (i) நாடகம் ஒரு கட்புலக் கலையே. (.......)
   (ii) நாடகத்துக்கு இசை இன்றியமையாதது. (.......)
   (iii) நாடகத்துக்குக் காலமும் இடமும் வேண்டியதில்லை. (.......)
   (iv) நாடகத்தில், பார்ப்போரின் கற்பனைக்கு எதையும் விடுதல் கூடாது. (.......)
   (v) மற்றைய கலைகளைப்போல நாடகமும் மதத்திலிருந்து தோன்றியது. (.......)
   (vi) பண்பாட்டின் கையளிப்புக்கு நாடகம் உதவுகிறது. (.......)

☞ கீழே தரப்பட்டிருக்கும் வினாக்களுக்குத் தரப்பட்ட விடைகளுள் சரியான விடையின் இலக்கத்தைக் குறிப்பிடுக .

(vii) நாடகம் பற்றி கற்கை வழியாகக் கிடைக்கும் பிரதான பலன்

(1) மனித சுபாவங்களைப் புரிந்துகொள்ளல்

(2) மனிதர்களை நல்வழிப்படுத்தல்

(3) கலைகளை ரசித்தல் ஆகும் (.......)

(viii) அரிஸ்ரோற்றில் தமது கவிதை இயலில் (Poetics) நாடகத்தின் முதன்மை அம்சம் எனக்கொண்டது.

(1) மொழிநயம்

(2) கதைப் பின்னல்

(3) பெருங்காட்சி ஆகும் (.......)

(ix) திறஜெடியின் பிரதான அம்சம்

(1) கோரஸைப் பயன்படுத்தல்

(2) அற்புதச் சுவையுள்ள கதைகள்

(3) பிரதான கதாநாயகரின் வீழ்ச்சி ஆகும் (.......)

☞ கீறிட்ட இடத்தை அடைப்புக் குறிக்குள் உள்ளனவற்றுள் பொருத்தமான சொல் / சொற்றொடர் கொண்டு நிரப்புக.

(x) "லோகதர்மி" "நாட்டிய தர்மி" எனப் பரதர் எடுத்துக் கூறியது .................................. யை ஆகும்.

(xi) ஒப்பறா (Opera) வகை நாடகத்துக்குப் பாடல் எவ்வாறு முக்கியமோ அவ்வாறு பலே (Ballet) க்கு ............................................. முக்கியமாகும்

(xii) மட்டக்களப்பு நாட்டுக்கூத்தின் இரு பிரதான வகைகள் ........................................... ஆகும்.

(xiii) நாட்டிய சாஸ்திரத்தின்படி, நாடகத்தின் கதைப்பின்னல் ஐந்து பகுதிகளைக் கொண்டது. அவையாவன ஆரம்ப, யத்ன, .......................................... நேதாப்ய .................................... ஆகும்.

(xiv) நாடகம் பற்றிய மேனாட்டுக் கோட்பாட்டின்படி பின்வருவனவற்றில் ஒருமைப்பாடு இருத்தல் வேண்டும். அவை காலம் ........................................................ ஆகும்.



☞ கீழ்வரும் வினாக்களுக்கு மிகச்சுருக்கமான விடைகள் தருக.

(xv) செந்நெறிக்காலக் கிரேக்க நாடகத்தில், ஒளியமைப்பு இல்லாததற்கான இரண்டு காரணங்கள் தருக.

1. ...................................................... 2. ......................................................

(xvi) தெருவெளி அரங்கு (Street theatre) மேடை நாடகத்திலிருந்து எவ்வெப்பண்புகளில் வேறுபடுகின்றது?

1. ........................................................................................................

2. ........................................................................................................

(xvii) வானொலி நடிகரும் மேடை நடிகரும் தத்தம் ஊடகங்களைப் பயன்படுத்தும் முறையில் வேறுபடுகின்றனர். எவ்வாறு?

1. ........................................................................................................

2. ........................................................................................................

(xviii) நாடக வகைகளைப் பிரித்தறிவதில் அவ்வந்நாடகங்களிலே உள்ள மொழிக்கையாளுகையும் ஒன்றாகும். இதற்கான காரணங்கள் இரண்டு தருக.

1. ........................................................................................................

2. ........................................................................................................

(xix) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(1) இன்னொருவராகச் செய்தல் (Impersonation)

(2) காட்சியமைப்புக் குறிப்புக்கள்

(3) மோதுகை

(4) சிக்கற்பாடு

1. ........................................................................................................

2. ........................................................................................................

(xx) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டு பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(1) விதூஷக

(2) சூத்ரதார

(3) ஷிற்றே (Shite)

(4) வக்கி (Waki)

1. ........................................................................................................

2. ........................................................................................................

## நாடகமும் அரங்கியலும்- I (Drama & Theatre) I

ஒரு மணித்தியாலம்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி II

(1) இந்தியச் செந்நெறி அரங்கினை விளங்கிக்கொள்வதற்கான பிரதான நூல் "நாட்டியசாஸ்திர" ஆகும்.

(i) நிருத்த, நிருத்திய, நாட்டிய என்பனவற்றை அது எவ்வாறு வேறுபடுத்துகிறது.

(ii) அபிநயங்களை அது எவ்வாறு விளக்குகிறது.

(2) அரிஸ்ரோற்றலின் கவிதையியல்" (Poetics) நாடகத்தின் கூறுகளை ஆறு அம்சங்களாகக் கூறும்.

(i) அவை யாவை?

(ii) அவை ஒவ்வொன்றினதும் பயன்பாட்டைச் சுருக்கமாக விளக்குக.

(3) நாடகத்துக்கும் இலக்கியத்துக்குமுள்ள உறவினை விளக்குக.

(4) நாடகத்தை ஆராய்கின்றபொழுதும் விமர்சிக்கின்றபொழுதும் நாடகத்தின் பல்வேறு வகைகள் பற்றிக் கவனம் செலுத்தப்படுகின்றது. இத்தகைய வகைபாடு நாடகக்கலையை விளங்கிக் கொள்வதற்கு எவ்வாறு உதவுகிறது.

(5) அரங்கு, மற்றைய ஆற்றுகைக் கலைகளிலிருந்து பல்வேறுவகையில் வேறுபடுகின்றது.அவற்றுள் இரண்டை இனங்கண்டு அவற்றை விளக்குக.

(6) மேடை விதானிப்பு (Stage Decor)ப் பற்றிய பிரதான அம்சங்களை விளக்குக.

(7) ஒரு நாடக ஆற்றுகையின் வெற்றிக்கு செயல்முனைப்புள்ள பார்ப்போர் பங்குகொளல் (Audience Participation) அத்தியாவசியமானது என்பர். இக் கூற்றினை ஆராய்க.

(8) நாடகத்தின் பிரதான இயல்பு "ரச" த்தைத் தோற்றுவிப்பதே என்பர்.

(i) "ரச" எவ்வாறு தோற்றுவிக்கப்படுகிறது?

(ii) "ரச" எத்தனை வகைப்படும் ? அவை எவ்வெவற்றைக் குறிக்கும்.



## நாடகமும் அரங்கியலும்- II (Drama & Theatre) II

ஒரு மணித்தியாலம்

முதலாம் பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக. முதலாம் பகுதியில் வரும் வினாக்களுக்கு ஏற்ப விடைகளை மிகச் சுருக்கமாக எழுதவும். இரண்டாம் பகுதியிலுள்ள வினாக்களுக்கு விடை எழுதும்பொழுது தேவையான விளக்கச் சித்திரங்களை வரையின் மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

### பகுதி I

☞ கீழ்வரும் கூற்றுக்கள் சரியானவையா அன்றேல் பிழையானவையா என்பதைக் √/x குறியிட்டுக் காட்டுக. (√ சரி x பிழை )

1.

(i) வடபாங்கு, தென்பாங்கு என்னும் வகைபாடு மன்னாருக்குரியது. (.......)

(ii) காமன்கூத்து ஆவணி மாதத்தில் நடைபெறும். (.......)

(iii) பார்சி மரபில் வந்த "ஸ்பெஷல் நாடக"த்தையே சிலர் இசைநாடகம் என்கின்றனர். (.......)

(iv) கிரேக்கத் திறஜெடி ஆரம்பத்தில் மூன்று நாடகங்களின் தொகுதியாக இருந்தது. (.......)

(v) கிரேக்கத்தின் நாடகங்களில் "வேடமுகம்" (Mask) பயன்படுத்தப்படவில்லை. (.......)

(vi) ஆரம்பநிலையில் கிறிஸ்தவ நாடகங்கள் தேவாலயத்துக்குள்ளேயே நடைபெற்றன. (.......)

(vii) நாடகம எனும் சிங்கள நாடகவகை கிறிஸ்தவம் பற்றியது. (.......)

☞ கீழே வரும் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையின் இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

(viii) பண்டைய தமிழ் நாட்டிலிருந்த கூத்தர்குழாத்தின் பெயர்
(1) பாணர்
(2) கோடியர்
(3) விறலியர் ஆகும். (.......)

(ix) பண்டைய தமிழ் நாடகத்தின் அமைப்போடு தொடர்புடைய பாவகை

(1) வெண்பா

(2) ஆசிரியப்பா

(3) கலிப்பா ஆகும் (.......)

(x) சிங்கள அரங்கில் பிரசித்திபெற்ற "வெஸ்ஸந்தர" எனும் நாடகம்

(1) கோலம்

(2) நுர்த்தி

(3) நாடகம் ஆகும் (.......)

(xi) பிரபல அபத்த நெறி (Absurd) நாடகாசிரியர்

(1) பெக்கற்

(2) பின்ற்றர்

(3) இப்சன் ஆவர் (.......)

(xii) கீழ்வரும் அமெரிக்கக் கலைஞர்களுள் பிரசித்தி பெற்ற நாடகாசிரியராக விளங்கியவர்

(1) ரெனசி வில்லியம்ஸ்

(2) போல் றோப்சன்

(3) ஃபிராங்க் சினாத்ரா (.......)

(xiii) ஒடுக்கப்பட்டோர் அரங்கு எனப்படும் அரங்கினைத் தொடங்கியவர்

(1) மக்சிம் கோர்க்கி

(2) பிறெஃற்

(3) ஒகஸ்ராபோல் (.......)

☞ கீறிட்ட இடத்தை, அடைப்புக் குறிக்குள் உள்ளனவற்றுள் பொருத்தமான சொல் - சொற்றொடர் கொண்டு நிரப்புக.

(xiv) இலங்கையில் காத்தவராயன் கூத்துப் பெரும்பாலும் நடைபெறும் இடம் .............................. (புத்தளம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்)

(xv) பேராசிரியர் இ.எஃப்.சி., லுடோவைக்குடன் பேராதனையில் ஆங்கில நாடகப்பணி ஆற்றியவர் ...................................... (லயனல் வென்ற், நுமான் ஜுபால், டேவிட் லீன்)

(xvi) "திருக்குற்றாலக்குறவஞ்சி" எனும் நாடக இலக்கியத்தை எழுதியவர் .................................. (திருகூடராஜப்பக் கவிராயர், குமரகுருபரர், அருணகிரிநாதர்)

(xvii) ஸ்பெஸல் நாடக அரங்கிற் பொன்னாலை கிருஷ்ணபிள்ளைக்குப் பெயரீட்டிய பாத்திரம் (ஸ்திரிபார்ட், ராஜபார்ட், பபூன்) ...........................................



(xviii) ஷேக்ஸ்பியர் அரங்கு பெரும்பான்மையும் ........................................... நடைபெறும். (பகலில், மாலையில், இரவில் )

(xix) யப்பானிய சனரஞ்சக மகிழ்வளிப்பு மரபுடன் சம்பந்தப்பட்ட நாடகவகை .............................. (நொஹ், கபுக்கி, புன்றக்கு)

(xx) மிருச்சகடிகம் எனும் நாடகத்தை எழுதியவர் ........................... ........................... (பலுர், காளிதாசர், சூத்ரகா)

## நாடகமும் அரங்கியலும்- II (Drama & Theatre) II

இரண்டு மணித்தியாலங்கள்

---

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

### பகுதி II

**1.** தமிழ்நாட்டு அரங்கின் வளர்ச்சியில் முக்கியமாக அமைவது, ஒரு பெண் பல பாத்திரங்களைச் சித்திரிக்கும் "நாட்டிய" மரபாகும்.

(i) இதன் தோற்றம் கலித்தொகையிற் காணப்படும் முறையினை விளக்குக.

(ii) இப்பண்பின் சிகரமாக மாதவி அமையும் தன்மையை விளக்குக.

(iii) கோயிற் பண்பாட்டுக் காலத்தில் (கி.பி 600 - 1300) இது அமைந்த முறையைச் சுருக்கமாக குறிப்பிடுக.

(iv) இன்றைய பரதநாட்டியத்தில் இப்பண்பு காணப்படும் முறையைச் சுட்டிக்காட்டுக.

**2.** மட்டக்களப்பு, இலங்கையின் தமிழ்மரபுவழி நாடகங்களின் களஞ்சியம் என்று போற்றப்படுவது.

(i) மட்டக்களப்பின் மரபுவழிக் கூத்து வடிவங்கள் யாவை?

(ii) அண்மைக்காலத்தில் இந்த மரபுவழி நாடகத்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவை?

**3.** இலங்கை அரங்க வரலாற்றின் சமூக - அரசியல் விமர்சன நாடகங்களை எழுதியவர் என்ற ஒரு பெருமை, பேராசிரியர் க.கணபதிப்பிள்ளைக்கு உண்டு.

(i) அவர் எழுதிய சமூகவிமர்சன நாடகங்கள் யாவை? அவற்றின் பொதுவான பண்புகள் யாவை?

(ii) அவர் எழுதிய அரசியல் நாடகங்கள் யாவை? அவற்றின் பொதுவான பண்புகள் யாவை?

4.
- (i) 1960 - 1990 இலங்கைத் தமிழ் அரங்கின் வளர்ச்சியிற் காணப்படும் அம்சங்கள் யாவை?
- (ii) இவ்வளர்ச்சிகள் அரங்கின் சமூகப்பயன்பாட்டை எந்த அளவுக்கு வளர்த்துள்ளன?
- (iii) இவ்வளர்ச்சிக்குக் காரணர்களாக இருந்தவர்கள் யாவர்?
- (iv) இவர்களில் யாரேனும் ஒருவரின் பங்களிப்பினை ஆராய்க.

5. சிங்கள அரங்கு, 1956 முதல் சிங்கள மக்களின் கலை, பண்பாட்டுச் செழுமைக்குப் பெரிதும் உதவியுள்ளது என்பர்.
- (i) 1956 க்கு முன்னர் நிலவிய சிங்கள அரங்கின் தன்மை யாது?
- (ii) சரச்சந்திரவின் "மனமே" யும் சிங்கபாகுவும் ஏற்படுத்திய பிரதான அரங்கியல் மாற்றங்கள் யாவை?

6. "திறஜெடி" மேனாட்டு நாடக வகைகளுள் முக்கியமானதான ஒன்றாக இருந்து வந்துள்ளது.
- (i) கிரேக்கச் செந்நெறி மரபில் அது எவ்வாறு அளிக்கப்பெற்றது?
- (ii) கிரேக்கத் திறஜெடியின் பிரதான விடயம் (Theme) யாது?
- (iii) ஷேக்ஸ்பியருடைய திறஜெடி நாடகங்கள் எவ்வாறு அளிக்கப்பெற்றன?
- (iv) ஷேக்ஸ்பியர் திறஜெடிகளிற் காணப்பட்ட பிரதான "மோதுகை" (conflict) யாது?

7. "பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஐரோப்பிய அரங்கில் இடம்பெற்ற இயல்பு வாதம் (Naturalism) நாடக எழுத்திலும் அளிக்கையிலும் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது" விளக்குக.

8. மேனாட்டு அரங்கும் கீழைத்தேய அரங்கும் ஒருங்கிணைந்தமை, இருபதாம் நூற்றாண்டின் முக்கிய அரங்கப் பண்புகளில் ஒன்றாகும்.
- (i) இன்றைய தமிழ் நாடகத்திற் காணப்படும் மேனாட்டு அரங்க அம்சங்கள் யாவை?
- (ii) சீன, யப்பானிய அரங்குகள் மேனாட்டு அரங்கை எவ்வகையிற் பாதித்துள்ளன?



## நாடகமும் அரங்கியலும்- III (Drama & Theatre) III

ஒரு மணித்தியாலம்

---

முதலாம் பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக. முதலாம் பகுதியில் வரும் வினாக்களுக்கு ஏற்ப விடைகளை மிகச் சுருக்கமாக எழுதவும் இரண்டாம் பகுதியிலுள்ள வினாக்களுக்கு விடை எழுதும்பொழுது தேவையான விளக்கச் சித்திரங்களை வரையின் மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

### பகுதி I

☞ கீழ்வரும் கூற்றுக்கள் சரியானவையா அன்றேல் பிழையானவையா என்பதைக் குறியிட்டுக் √/x காட்டுக. (√ சரி x பிழை )

1.
- (i) அரங்கவெளி என்பது நெகிழ்ச்சியுடையது. (.......)
- (ii) நாடகம் நாம் வாழுகின்ற உலகத்தை அப்படியே எடுத்துக்காட்டுகிறது. (.......)
- (iii) நடிகர் என்பவர் மனித நடத்தை உணர்வுகளைப் புரிந்து கொள்பவரும் வெளிப்படுத்துபவரும் ஆவர். (.......)
- (iv) இராம நாடகம் என்பது தென்மோடிக் கூத்து (.......)
- (v) அரங்கில் காட்சியும் "பேசும்" (.......)
- (vi) ஒத்திகைகளிலும் பார்வையாளர் இருப்பதாகவே கொள்ளப்படுகிறது. (.......)
- (vii) நாடகம் என்பது ஒரு கலையும் கைவினையுமாகும். (.......)

☞ பின்வரும் வினாக்களின் சரியான விடையின் இலக்கத்தைக் குறிப்பிடுக.

(viii) ஜொகஸ்டரா நாடக இறுதியில்
- (1) கொலை செய்யப்படுகிறாள்
- (2) தற்கொலை செய்கிறாள்
- (3) தன் கண்களைக் குருடாக்குகிறாள் (.......)

(ix) நோறா கடன் வாங்குவது
- (1) தகப்பனிடமிருந்து
- (2) ஹெல்மரிடமிருந்து
- (3) குறொக்ஸராட்டிடமிருந்து (.......)

(x) வெனிஸ் வணிகன் என்பது
(1) ஷைலொக்கை
(2) அன்ரோனியோவை
(3) பகானியோவைக் குறிக்கும். (.......)

(xi) டெஸ்டிமோனா இறப்பது
(1) வெனிசில்
(2) வெறொனாவில்
(3) சைப்பிரசில் (.......)

(xii) ஜப்பானிய அரங்கில் "மியே" என்னும் ஆட்டவேளை
(1) நொஹ்வில்
(2) புன்றக்குவில்
(3) கபுக்கியில் வரும் (.......)

☞ பின்வரும் வாக்கியங்களில் கீறிட்ட இடங்களை உரிய சொல் / சொற்றொடர் கொண்டு நிரப்புக.

(xiii) நடிகருக்கான ........................................ யின் பொழுது புதிதளித்தல் (Improvisation) ஒரு நடைமுறையாகும்.

(xiv) ஸ்ரனிஸ்லோவ்ஸ்கி தொடக்கி வடிவமைத்த நடிப்புமுறையை பேற்றோல்ட் பிறெஂற். ........................................

(xv) ஐரோப்பிய, மத்தியகால மத நாடகங்கள் நகரங்களிற் காட்டப்பட்ட பொழுது ........................................ வகை மேடை பயன்படுத்தப்பட்டது.

(xvi) கோலம் என்னும் சிங்கள நாடகத்தில் பிரதானமாக ........................................ பயன்படுத்தப்படுகின்றது.

☞ பின்வருவனவற்றிற்கு குறுவிடை தருக.

(xvii) ஒளியூட்டியின் பொழுது பயன்படுத்தப்படும் மிக முக்கியமான ஒளி விளக்கின் பெயர் யாது?

..........................................................................................

(xviii) தற்காலத்தில் முகத்துக்கான வேட ஒப்பனைக்குப் பயன்படுத்தப்படும் பூச்சு யாது?

..........................................................................................

(xix) மேடை நாடகத்தில் "பின் நோக்கிய பார்வை" (Flash Back) எப்படிக் காட்டப்படும்?

..........................................................................................

(xx) மேடை முகாமையாளரின் (Stage manager) பிரதான பணி யாது?

..........................................................................................



# நாடகமும் அரங்கியலும்- III (Drama & Theatre) III

இரண்டு மணித்தியாலங்கள்

---

## பகுதி II

ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு வினாவுக்கு மாத்திரமே விடையளிக்குக. பொருத்தமான இடங்களில் வரிப்படங்கள் மூலம் விளக்குக.

### பிரிவு I - தயாரிப்பு / நெறியாள்கை

☞ இப்பிரிவில் ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

1. நெறியாளரின் பிரதான பணி எடுத்துக்கொண்ட நாடக எழுத்துருவுக்கு ஒரு தெளிவான வியாக்கியானம் கொடுப்பதே. ஆராய்க.

2. ஒரு நாடகத்தின் தயாரிப்பின்பொழுது அதன் இறுதி ஒத்திகை வரையுள்ள பல்வேறு கட்டங்கள் யாவை?

3. ஒரு நாடகத் தயாரிப்பின்பொழுது இசை எவ்வெவற்றுக்குப் பயன்படுத்தப்படலாம்? விளக்குக.

### பிரிவு II - நடிப்பு

4. ஒரு நாடகத் தயாரிப்பின் வெற்றியை நிர்ணயிப்பதில் முக்கிய இடம்பெறுவது பாத்திரச் சித்திரிப்பு ஆகும். ஒரு பாத்திரத்தை சித்திரிக்க ஒரு நடிகர் எவ்வாறு தயார் செய்து கொள்ளல் வேண்டும் என்பதை விளக்குக.

5. குறிப்பிட்ட ஒரு பாத்திரத்துக்கென ஒரு நடிகரை நிச்சயிக்கும் பொழுது மனதிற் கொள்ளப்பட வேண்டியவை யாவை?

6. நடிப்பில் உன்னதத்தை அடைய, நன்கு அமைக்கப்பெற்ற, வரன்முறையான ஒத்திகை எவ்வாறு உதவுகின்றது என்பதை விளக்குக.

### பிரிவு III - அரங்க நிர்மாணம்

7. ஒளியூட்டு (Lighting) என்பது மேடையிலுள்ளவற்றைப் பார்ப்போர் காணவைப்பது மாத்திரமல்ல, அதற்குப் பல்வேறு முக்கிய பயன்பாடுகள் உள்ளன. உதாரணம் தந்து விளக்குக.

8. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் "மாணிக்கமாலை"க்கு அல்லது மௌனகுருவின் "நம்மைப் பிடித்த பிசாசு"களுக்கான

(i) அமைப்பு (Sets)
(ii) வேட உடை (Costume)
எவ்வாறு அமையவேண்டும் என்பதை விளக்குக.

9. நாடகம் எந்தப்பாணியில் அமைந்தாலும் வேட ஒப்பனை (Make Up) இல்லாது நாடகம் இல்லை. விளக்குக.

## பிரிவு IV - நாடக இரசனையும் மதிப்பீடும்.

10. "ஒரு மொழிபெயர்ப்பு அல்லது ஒரு தழுவல் நாடகத்தை மதிப்பிடும்பொழுது அந் நாடகத்தின் விடயம் (Theme) எந்த அளவுக்கு ஆற்றப்படும் சமூகத்துக்குப் பொருத்தமானது என்பதை மதிப்பிடுதல் அவசியமாகும்". உதாரணம் தந்து விளக்குக.

11. செந்நெறி (Classical) நாடகங்களையும் நவீன (Modern) நாடகங்களையும் மதிப்பிடுவதற்கு ஒரே அளவுகோல் பயன்படும் என்று நீர் கருதுகின்றீரா?
உமது பாடத்தில் விதிக்கப்பட்டுள்ள நாடக நூல்களில் இதற்குப் பொருத்தமான இரண்டை மனதிற் கொண்டு இக் கூற்றை விளக்குக.

12. நல்லதொரு அரங்க ஆற்றுகை, இது பார்க்கப்பட்டதன் பின்னரும் நீண்ட நாள்கள் நினைவில் நிற்கும் உமது அனுபவத்தைக் கொண்டு இக்கூற்றை விளக்குக.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தரப்) பரீட்சை, 1999 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) I

ஒரு மணித்தியாலம்

பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

☞ கீழ்வரும் கூற்றுக்கள் சரியானவையா அன்றேல் பிழையானவையா என்பதை √/x க் குறியிட்டுக் காட்டுக. ( √ சரி x பிழை )

1.

(i) "போலச் செய்தலை" அடிப்படையாகக் கொண்ட கலை நாடகமாகும். (.......)

(ii) ஒரு நாடகம் வெற்றியடையப் பார்வையாளர்களின் பங்களிப்பு அவசியம் அன்று. (.......)

(iii) நாடகம் ஒரே நேரத்தில் இலக்கியமாகவும் அவைக்காற்று கலையாகவும் உள்ளது. (.......)

(iv) நாடகத்தின் தோற்றத்தைச் சடங்குகளில் தேட முடியும். (.......)

☞ சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

(v) ஒரு சமஸ்கிருத நாடகத்தின் குறிப்பிடத்தக்க இயல்பு
(1) மகிழ்ச்சியான முடிவைக் கொண்டிருத்தல் (இன்பியல் முடிவு)
(2) துயரமான முடிவைக் கொண்டிருத்தல் (துன்பியல் முடிவு)
(3) கதாநாயகனுக்கும் எதிரிக்கும் இடையில் போராட்டம் (.......)

(vi) நடிப்பை விட இசையும் பாடலும் மேலோங்கி இருப்பது
(1) கபுகி நாடகத்தில்
(2) கிரேக்க மகிழ்நெறி (Comedy) நாடகத்தில்
(3) பேஜிங் (பீக்கிங்) ஒபேரா (Opera) வில் (.......)

(vii) பெண் பாத்திரங்களைப் பெண்களே தாங்கி நடிக்கும் புராதன செந்நெறி மரபு
(1) கிரேக்க நாடகமாகும்
(2) சமஸ்கிருத நாடகமாகும்
(3) எலிசபெத் கால நாடகமாகும். (.......)

☞ பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

(viii) நாடக ஆசிரியரின் உணர்வினைப் பார்வையாளருடன் தொடர்புபடுத்துவதில் பிரதானமானவர்
(1) நடிகர்
(2) நெறியாளர்
(3) இசையமைப்பாளர் (.......)

(ix) கிரேக்க சற்றர் (Satyre) நாடகம்
(1) சற்றர் (Satyre) இனால் இயற்றப்பட்ட கோரஸை (Chorus) உடையது.
(2) நகைச்சுவையைப் பார்வையாளருக்கு வழங்குகிறது.
(3) நாடகப் போட்டிகளில் பங்கு கொள்ளாதது. (.......)

(x) "பேற்றோல் பிறெஃற்" (Bertold Brecht) இன் அரங்கின் குணாதிசயம் அறியப்பட்டது.
(1) பராதீனப்படுத்தலினால்
(2) காவிய தத்துவத் தன்மையினால்
(3) அடையாளப்படுத்துதலினால் (.......)

☞ பொருத்தமான விடைகளை எழுதிக் கீறிட்ட இடங்களை நிரப்புக.

(xi) லோக தர்மி, நாட்டிய தர்மி எனும் அவைக்காற்றுகைப் பாணிகளை முதலில் குறிப்பிடும் நூல் ..............................................................

(xii) கபுகி நாடகத்தில் பெண் வேடம் தாங்கி நடிக்கும் நடிகர்கள் ........................................................ எனப் பெயர் பெறுவர்.



(xiii) கிரேக்க திறஜெடி (Tragedy) திடகங்களுக்கான கரு கிரேக்க காவியங்களான ........................... இலிருந்தும் ........................................ இலிருந்தும் பெறப்பட்டவையாகும்.

(xiv) ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் பரந்த அளவில் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை ................................................ உம் ................................................ உம் ஆகும்.

(xv) நூர்த்தி யுகத்திற்கும் சரத்சந்திர யுகத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் குறிப்பிடத்தக்க சிறப்பு மிக்க நாடக ஆசிரியர்கள் இருவர் .................................. உம் .................................... உம் ஆவார். அல்லது 1970 ஆம் ஆண்டுக்கும் 1990 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கைத் தமிழ் நாடக உலகின் தனித்துவமான நாடக எழுத்துரு ஆசிரியர்கள் இருவர் ...................................................... உம் ...................................................... உம் ஆவர்.

☞ பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

(xvi) சமஸ்கிருத நாடகங்களின் வகைகளான "நாடக"வுக்கும் "பிரகரண"வுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினை எடுத்துக் கூறுக.
1. ..............................................................................................
2. ..............................................................................................

(xvii) மேடையின் போதாத நிலையினை (bareness) ஷேக்ஸ்பியர் ஈடுசெய்யும் முறை ஒன்று தருக.
..............................................................................................
..............................................................................................

(xviii) நாட்டிய சாஸ்திரம் கூறும் ரசங்கள் எத்தனை? அவற்றின் பெயர்களைத் தருக.
..............................................................................................
..............................................................................................

(xix) கிரேக்க நாடகங்களில் பார்வையாளர்களின் முன்னால் ஒருபோதும் "இறப்பு" க் காட்டப்படுவதில்லை. இதற்கான காரணங்கள் இரண்டு தருக.
1. ..............................................................................................
2. ..............................................................................................

(xx) நாட்டுக் கூத்து மரபுடன் இணைந்த இரண்டு தமிழ் நாடக வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
1. ..............................................................................................
2. ..............................................................................................

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) I

ஒரு மணித்தியாலம்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. ஒவ்வொரு விடைக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.

---

### பகுதி II

1. லோக தர்மி (Naturalistic), நாட்டிய தர்மி (Stylized) என்ற பதங்களின் சிறப்பியல்புகளை வரைவிலக்கணப்படுத்தி இந்த இரு சம்பிரதாயங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை நீங்கள் கற்ற நாடகங்களைத் துணையாகக் கொண்டு விளக்குக.
2. கிரேக்க நாடக தத்துவங்களில் காணப்படும் மும்மை (Three Unities) என்ற எண்ணக்கருவினை விளக்கி, நீங்கள் கற்ற நாடகங்களிலிருந்து பெற்ற விளக்கங்களை உபயோகித்து அவ்வெண்ணக்கருவை விவரிக்குக.
3. ஒரு நாடகத்தின் வெற்றிக்கு மேடை விதானிப்பு (Stage decor) அவசியமென நீர் கருதுகின்றீரா? உமது விடைக்குக் காரணங்கள் தருக.
4. நாட்டிய சாஸ்திரத்தில் பரத முனிவர் கூறும் அபிநயங்கள் (Modes of representation) என்பதற்குரிய வரைவிலக்கணத்தைத் தந்து, ஒரு நாடகப் பிரதி எவ்வாறு அபிநயங்கள் மூலம் ஒரு அரங்க அளிக்கையாக உருப்பெறுகிறது என விளக்குக.
5. சடங்குகளில் (Rituals) காணப்படும் அடிப்படை மூலக்கூறுகளை விளக்குக. சடங்குகளிலிருந்து நாடகத்தை எவ்வாறு நீர் வேறுபடுத்துவீர்?
6. நாடகக் கலையானது கதை கூறும் (Narrative Art) கலையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என ஆராய்க.
7. ஏதாவதொரு நாடக மரபினைத் தெரிந்து, கிராமிய நாடகம் அம்மரபிற்கு ஆற்றிய பங்கினைத் தருக.
8. அரிஸ்ரோட்டிலின் கூற்றின்படி திறஜடியில் (Tragedy) இடம் பெறவேண்டிய அத்தியாவசியமான பண்புகளை ஆராய்க.
9. தமிழ்நாட்டு நாடகங்களில் மேனாட்டாரின் வருகையின் பின் பலமாற்றங்கள் நிகழ்ந்தன.
   (i) மேனாட்டாரின் வருகையின் முன் நிலவிய நாடக மரபினைச் சுருக்கமாகத் தருக.
   (ii) மேனாட்டாரின் வருகையின் விளைவால் ஏற்பட்ட மாற்றங்களை விவரிக்குக.



## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

ஒரு மணித்தியாலம்

பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

☞ எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.
பின்வரும் கூற்றுக்கள் சரியா √ பிழையா X என்பதனைக் குறிப்பிட்டுக் காட்டுக. (√ சரி X பிழை)

1\.

(i) கோலம் நாடகம் வேட முகம் இன்றி அவைக்காற்றும் ஒரு கிராமிய நாடகமாகும். அல்லது காத்தவராயன் நாடகம் வேட முகத்தோடு (Mask) அவைக்காற்றும் ஒரு கிராமிய நாடகமாகும். (.......)

(ii) பார்வையாளர்களின் பொழுதுபோக்குக்காக மட்டுமே நிகழ்த்தப்படுவது கழிப்புச்சடங்கு தகட்ட சன்னிய ஆகும். (.......)

(iii) சமஸ்கிருத நாடகங்கள், நாடக அரங்குகளில் அவைக்காற்றுவதற்காக எழுதப்பட்டவையாகும். (.......)

(iv) சிங்கள நாடகமவின் இசை வட இந்திய செந்நெறி இசையை ஆதாரமாகக் கொண்டது. அல்லது இசை நாடகத்தின் (ஸ்பெசல் நாடகம்) இசை தென்னிந்திய கர்னாடக இசையை ஆதாரமாகக் கொண்டது. (.......)

(v) சப்பிரமுகவ நடன மரபுகளின் பிரதான நடனக் கிரியை கொஹம்ப கங்காரியர் ஆகும். (.......)

(vi) கிரேக்க செந்நெறி நாடகங்கள் எல்லாம் முற்றாகப் பாடல்களால் ஆனவை. (.......)

(vii) மட்டக்களப்பு கிராமிய மக்களிடையே பிரபலமான நாடக வகைகளுள் ஒன்று காமன் கூத்து. (.......)

☞ சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

(viii) ஜோன் த சில்வாவின் அதிகமான நாடகங்களின் இசையமைப்பாளர்
(1) இம்ரான் கான்
(2) விஸ்வநாத் லெளஜி
(3) மொஹமட் கவுஸ்

அல்லது

கொழும்பிலிருந்து இலங்கை சுபோத சபா போல மட்டக்களப்பில் இருந்த சபா
(1) சரஸ்வதி சபா
(2) சுகுணவிலாச சபா
(3) சுகிர்தவிலாச சபா (.......)

(ix) புராதன கிரீஸில் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டது.
(1) பகல் நேரங்களில்
(2) மாலை நேரங்களில்
(3) இரவு நேரங்களில் (.......)

(x) மோடிமைப்படுத்தப்பட்ட பண்பு (Stylized form) மிக வெளிப்படையாகக் காணப்படும் மேடை நாடகம்
(1) நரி பேன நாடகம்
(2) கடவுனு பொரந்துவ
(3) திரியமவ சஹ அகே தறுவோ (.......)

அல்லது

(1) பொறுத்தது போதும்
(2) மத மாற்றம்
(3) கண்ணாடி வார்ப்புகள் (.......)

(xi) காளிதாசரால் எழுதப்பட்ட நாடகங்களுள் ஒன்று
(1) முத்ரராக்ஷா
(2) விக்கரமோர்வசிய
(3) ஸ்வப்னவாசவதத்தா (.......)

(xii) "கோவே கணு பராதாய்" என்ற அரங்கப் பாடலுக்கு இசை அமைத்தவர்
(1) நவாப் கான்
(2) மொஹமட் கவுஸ்
(3) ஷெல்டன் பிரேமரத்ன

அல்லது

"சிறுநண்டு மணல் மீது படமொன்று கீறும்" என்ற அரங்கப்பாடலை இயற்றியவர்
(1) மகாகவி
(2) முருகையன்
(3) நுஃமான் (.......)

(xiii) "ஜன்னலே" எனும் நாடகத்தைத் தயாரித்தவர்
(1) தம்ம ஜாகொட
(2) ஹென்றி ஜெயசேன
(3) சுகதபால தி சில்வா

அல்லது

"விழிப்பு" எனும் நாடகத்தைத் தயாரித்தவர்
(1) சுஹைர் ஹமீட்
(2) என். சுந்தரலிங்கம்
(3) அன்ரனி ஜீவா (.......)

(xiv) 1956 இன் பின் சிங்கள நவீன இயற்பண்பு அரங்கின் முன்னோடி
(1) ஹென்றி ஜயசேன
(2) குணசேன கலப்பத்தி
(3) சுகதபால தி சில்வா

அல்லது

(1) குழந்தை சண்முகலிங்கம்
(2) மாத்தளை கார்த்திகேசு
(3) பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை (.......)

☞ மிகப்பொருத்தமான சொல் / சொற்றொடரை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

(xv) தெனஸி வில்லியம்ஸின் A street named desire என்ற நாடகம் .................................................. பெயரில் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டது. அல்லது தெனஸி வில்லியம்ஸின் The Glass managerries எனும் நாடகம் .................................................. பெயரில் தமிழில் தயாரிக்கப்பட்டது.

(xvi) மை பெயர்லேடி (My fair lady) என்ற பெயரில் படமான பிரபல்யம் மிக்க ஆங்கில நாடகத்தின் தழுவலாக அமைந்த. "றன்கந்த" என்ற சிங்கள நாடகத்தைத் தயாரித்தவர் ................................................... அல்லது ஓர் இரவு என்ற பெயரில் திரைப்படமான பிரபலமான மேடை நாடகத்தின் ஆசிரியர் ...................................................

(xvii) சாமுவேல் பெக்கட்.................................................... அரங்கின் முன்னோடியாகக் கருதப்படுகிறார்.

(xviii) சரத்சந்திராவின் லோமஹன்சாவினுக்கான இசையை அமைத்தவர்........................ அல்லது பாலேந்திராவின் யுகதர்மத்திற்கான இசையை அமைத்தவர் .......................................................

(xix) 20 ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் அரங்கில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய ரஷ்ய நடிகர் / இயக்குநர் ..................................................................

(xx) ஜப்பானிய சமூக வாழ்க்கையோடு தொடர்புடைய கபுகி நாடகத்தின் வகை .................................................. எனப் பெயர் பெறும்.

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

இரண்டு மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.

---

### பகுதி II

1. சிங்கள கிராமிய நாடகமான சொக்கறியில் அல்லது தமிழ் கிராமிய நாடகமான மகிடியில் காணப்படும் மோடிமைப்படுத்தப்பட்ட (Stylized) இயல்புகளை அளவீடு செய்க.

2. "கரையோரச் சிங்கள நடன மரபுகளில் செழுமைவாய்ந்த நாடகக் கூறுகள் உள்ளன" கருத்துரைக்க. அல்லது "வடமோடி / தென்மோடிக் கூத்துகளில் செழுமைவாய்ந்த நாடகக் கூறுகள் உள்ளன" கருத்துரைக்க.

3. 1960 -1970 காலப்பகுதியில் இலங்கையின் தமிழ் மரபுவழி நாடகங்களின் புத்தெழுச்சிக்கான காரணங்களை ஆராய்க. அல்லது 20 ஆம் நூற்றாண்டின் முதல் காலாண்டுகளில் சிங்கள நாடகம் வீழ்ச்சியுற்றதற்கான காரணங்களை ஆராய்க.



4. 1980 - 1990 காலப்பகுதியில் இலங்கையின் தமிழ் அரங்கப் போக்குப் பற்றி ஆராய்க. அல்லது நாடகமவின் வீழ்ச்சியிலிருந்து 1956 வரை சிங்கள அரங்கின் வரலாற்றினை அளவிடுக.

5. சரத்சந்திராவின் மணமே நாடகம் சிங்கள நாடகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை ஆராய்க. அல்லது 1990இன் பின் இலங்கைத் தமிழ்நாடக அரங்கப் போக்குகளை ஆராய்க.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றி சிறுகுறிப்புகள் எழுதுக.

   (i) இன்னிசய அல்லது சபை விருத்தம்
   (ii) ருக்மணிதேவி அல்லது திரவியம் இராமச்சந்திரன்
   (iii) வெஸ் ஆட்டம்
   (iv) பயிற்சிப் பட்டறை நடிகர்கள் (The workshop players)
   (v) அவைக்காற்று கலைக்கழகம்
   (vi) சபேவிதான அல்லது கட்டியகாரன்
   (vii) கறலிய அல்லது கூத்துக் களரி
   (viii) இந்து தர்மசேன

7. இலங்கையரினால் ஆங்கில மொழியில் பிறிதொன்றை மூலமாகக் கொள்ளாத நாடகங்கள் தயாரித்தல் குறைவாக இருப்பதற்கான காரணங்களை விளக்குக.

8. இலங்கைத் தமிழரினது மரபுவழி நாடக அரங்கிற்கும் சிங்களவரினது மரபுவழி அரங்குக்கும் இடையில் காணப்படும் ஒற்றுமைகளை விளக்குக.

9. பாடசாலை நாடகப் போட்டிகள் கீழ் வருவனவற்றுள் ஏதாவது ஒன்றின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு யாது?

   (i) தமிழ் நாடகம்
   (ii) சிங்கள நாடகம்
   (iii) ஆங்கில நாடகம்

# நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) III

ஒரு மணித்தியாலம்

பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா (√) பிழையா (X) என்பதனைக் குறிப்பிட்டுக் காட்டுக. (√சரி X பிழை)

1.

(i) மனிதனின் உடன் பிறந்த இயல்பான "போலச்செய்தல்" நாட்டமே நாடகத்துக்கு அடிப்படையாகும். (.......)

(ii) ஒரு தனிக் கலைஞனின் ஆக்கமே நாடகம் ஆகும். (.......)

(iii) பல்வேறு வாதங்களை உடைய பேச்சுவழக்குகளை (Dialects) ஒரு சமஸ்கிருத நாடக நூல் கொண்டிருக்கும் (.......)

(iv) கபுகி நாடகத்தில் பெண் பாத்திரங்கள் ஆண் நடிகர்களால் மாற்றாகச் செய்யப்படும். (.......)

(v) அரிஸ்டோபன்ஸின் மகிழ்நெறி நாடகத்தில் இருந்து உருவாக்கப்பட்டது றெஹன்டா ஆகும். அல்லது அரிஸ்டோபன்ஸின் மகிழ்நெறி நாட்கத்திலிருந்து உருவாக்கப்பட்டது "அபசுரம்" (.......)

(vi) ஒரு கதையை நாடகமாக மாற்றும்போது நிகழ்ச்சித் தொடர்பினை மாற்றும் சுதந்திரம் எழுத்தாளருக்கு உண்டு. (.......)

(vii) புராதன கிரேக்க நாடகத்தில் நடிகருக்கான ஒப்பனை முக்கியமானதாகக் கருதப்பட்டது. (.......)

☞ சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

(viii) வெனிஸ் நகர வணிகனில் வெனிஸ் நகர வணிகன்
(1) ஷைலொக்
(2) அன்டோனியோ
(3) வெனிஸ் பிரபு (.......)



(ix) ஷேக்ஸ்பியரின் எல்லா நாடகங்களும் கொண்டிருப்பது
(1) ஏழு அங்கங்கள்
(2) ஐந்து அங்கங்கள்
(3) நான்கு அங்கங்கள் (.......)

(x) ஈடிப்பஸ் அரசன் ஆட்சி செய்தது
(1) தேபஸிலிருந்து
(2) கொரிந்திலிருந்து
(3) ஏதென்ஸிலிருந்து (.......)

(xi) பொம்மை வீடு (Doll's house) நாடகத்தில் நோரா வீட்டை விட்டு வெளியேறுவது
(1) ஹெல்மருடன் சண்டையிட்ட பின்
(2) ஒரு தொழிலைப் புரிவதற்கு
(3) தனித்துவத்தை விருத்தி செய்யும் நம்பிக்கையினால் (.......)

(xii) ஒகினா எனப் பெயரிட்ட முன் நாடக இலக்கம் (Pre play number) காணப்படக்கூடியது
(1) கபுக்கி அரங்கில்
(2) நோ (NOH) அரங்கில்
(3) புன்றகு (Bunraku) எனப்படும் பொம்மலாட்ட அரங்கில் (.......)

☞ மிகப்பொருத்தமான விடையை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

(xiii) அன்ரன் செக்கோவின் நாடகமான செறித் தோட்டத்தில் செறி மரத்தை வெட்டுதல் குறிப்பது.
........................................................................................ ஆகும்.

(xiv) சிங்கபாகுவில் சிங்கசீவலி சிங்கபாகுவின் ................................ ..............................................ஆவார்.

(xv) ரத்னாவலியில் உதயனவையும் சாகரிகவையும் இணைக்கும் கதைப் பின்னலை உருவாக்கியவர். .............................................. ..........................................
அல்லது ஈடிபஸில் வரும் குருடர் இருவர்
1. ..................................................................
2. ..................................................................

(xvi) மேடையின் பின்னணியில் பைன் மரம் நிரந்தரமாகக் கீறப்பட்டிருப்பது .............................................. நாடகத்தில் ஆகும்.

சுருக்கமான விடைகள் தருக.

(xvii) சுழலும் மேடையின் (revolving stage) அனுகூலங்கள் இரண்டு குறிப்பிடுக.
1. ..........
2. ..........

(xviii) நாடகத்துக்கான மேடை (decor) விதானிப்பு நாடகத்திற்கு அனுகூல முடிவுகளைத் தருவது போல பிரதிகூலமான முடிவுகளையும் தரும். பிரதிகூலங்கள் இரண்டினை இனம் காண்க.
1. ..........
2. ..........

(xix) மேடை ஒளியமைப்பில் பயன்படுத்தப்படும் இருவகை மின் விளக்குகளின் பெயர் தருக.
1. ..........
2. ..........

(xx) ஆஹார்ய அபிநயம் கொண்டுள்ள இரண்டு முக்கிய அம்சங்கள்.
1. ..........
2. ..........

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) III

இரண்டு மணித்தியாலங்கள்

---

### பகுதி II

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிவு செய்து, நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

### பிரிவு I- அரங்குத் தயாரிப்பு நெறியாள்கை (Production Direction)

1. நாடக நெறியாளரின் பணிகளை விளக்குக.
2. வெற்றிகரமான நாடகத்தின் தயாரிப்புக்கு மேடை முகாமையாளர் (Stage Manager) ஏன் அவசியம்?
3. ஒரு நாடகத்துக்கு இசையை வழங்கும் இசை அமைப்பாளர் ஒருவர் கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகளை ஆராய்க.



### பிரிவு II- அரங்க நடிப்பு

4. "நாடகத்தில் மிகப் பிரதான பணியாற்றுகை நடிகனுக்கே உரியது" ஆராய்க.
5. மேடை நாடகத்தில் நடிகர்கள் பயன்படுத்தும் வெவ்வேறுபட்ட வெளிப்பாட்டு (delivery forms) வடிவங்களை விளக்குக.
6. சாத்வீக அபிநயம் என்பதை வரைவிலக்கணப்படுத்தி சாத்வீக அபிநயங்களை வெளப்படுத்துவதில் நடிகர் ஒருவருக்கு ஏன் முழுமையான திறன் வேண்டுமென ஆராய்க.

### பிரிவு III- அரங்க நிர்மாணம்

7. ஆஹார்ய அபிநய என்ற பதத்தின் முக்கியத்துவம் பற்றி விரிவாக விளக்கி, நடிகருக்கு ஆஹார்ய அபிநய ஏன் அவசியமென விளக்குக?
8. நவீன மேடை நாடகங்களுக்கு மேடை ஒளியமைப்பின் பயன்பாடுகள் பற்றி விளக்குக.
9. அரங்க அளிக்கையின் போது மேடைக்குப் புறத்தே செவிப்புல தாக்கங்களை ஏற்படுத்தப் பயன்படுத்தப்படும் கருவிகள், உபாயங்கள் தொடர்பாக ஒரு விரிவான விளக்கம் தருக.

### பிரிவு IV-நாடக இரசனையும் மதிப்பீடும்

10. ஒரு நாடகத்தின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்யும் காரணிகள் யாவை? உமது அனுபவத்தைக் கொண்டு உதாரணங்கள் காட்டி விளக்கு.
11. "ஈடிபனின் பாத்திரம் மனிதன் விதியுடன் நடத்தும் வெற்றியடைய முடியாத போராட்டத்தை வெளிப்படுத்துவது" ஆராய்க.
12. "ஒரு நாடகத்தின் பிரதான இலக்கு பார்வையாளர்களின் கலை இரசனையே" ஆராய்க.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சை 2000 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி அ

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா (√) பிழையா(X) என்பதனைக் குறிப்பிட்டுக் காட்டுக. (√சரி X பிழை)

1. நாடகம் என்பது செவிப்புலன் - கட்புலனுக்குரிய ஒரு கலை வடிவம். (.......)
2. கிரேக்கத் திறஜெடி நாடகம் பிரதான பாத்திரத்தின் மரணத்துடனேயே முடிவுறும் (.......)
3. "பலே" (Ballet) ஆட்டத்தின் பிரதான வெளிப்பாடு சொல் ஆகும். (.......)
4. சமஸ்கிருதநாடகமரபில் நாடகாசிரியரும் நெறியாளரும் வெவ்வேறு ஆட்களாகவிருப்பர். (.......)

☞ சரியான விடையைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

5. உலகின் மிகப் பழைய நாடக இலக்கியம்
   1. கிரீசை 2. இந்தியாவை 3. யப்பானைச் சேர்ந்தவை ஆகும். (.......)



6. நவீன அரங்க மரபில், ஆற்றுகைக்கு, விசேட பாடல் பயிற்சி அவசியமானது
   1. யதார்த்த நாடகத்துக்கு 2. பலே (Ballet) க்கு
   3. ஒப்பேறா (Opera) வுக்கு ஆகும். (.......)
7. கலை என்பது
   1. இயற்கையின் கொடை 2. தெய்வத்தின் கொடை
   3. மனிதனால் தோற்றுவிக்கப்படுவது ஆகும். (.......)

☞ பொருத்தமற்ற விடையைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

8. அரங்கு என்பது அடிப்படையில் ஒரு
   1. கூட்டுக்கலை 2. வாழும் கலை 3. இலக்கியக் கலை ஆகும் (.......)
9. சமஸ்கிருத மரபில் "நாட்டிய தர்மி" என்பது
   1. யதார்த்த நாடகத்தை 2. யதார்த்த விரோத நாடகத்தை
   3. மோடி நாடகத்தைக் குறிக்கும் ஆகும். (.......)
10. ஹாஸ்ய உணர்ச்சி மிக உள்ள நாடக வகை
   1. பிரகசனம் 2. மஹா நாடகம் 3. கிரேக்கச் சற்றர் நாடகம் ஆகும். (.......)

☞ பொருத்தமான விடைகளை எழுதிக் கீறிட்ட இடங்களை நிரப்புக.

11. சமஸ்கிருத நாடக மரபில் நாடகத்தின் நெருக்கடிக் கட்டத்தை........................................ என்பர்.
12. பாரம்பரிய தமிழ் நாடக வடிவத்தின் பெயர்.................... .................................................... ஆகும்
13. கலை என்பது "போலச் செய்தல்" என்று முதன் முதலில் கூறியவர் ........................................ஆவார்.
14. முற்றிலும் நாடகம் பற்றிய மிகப் பழைய நூல்................................ ........................................ஆகும்.
15. நாடகத்தில் வரும் சம்பவங்களின் கட்டமைப்பு................................ ................................ எனப்படும்.

☞ பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

16. கிரேக்க மகிழ்நெறி நாடகங்கள் இரண்டின் பெயர் தருக.
   1. ...................................................................................
   2. ...................................................................................

17. "கதாசிஸ்" (Catharsis) ஏற்படுவதற்குக் காரணமான இரண்டு உணர்ச்சிகளும் யாவை?
1. ..........
2. ..........

18. அநர்த்த (Absurd) முறைமையில் நாடகம் எழுதிய இருவரின் பெயர்களைத் தருக.
1. ..........
2. ..........

19. சமஸ்கிருத நாடக வகைகளுள் இரண்டின் பெயர் தருக.
1. ..........
2. ..........

20. கிரேக்கத்திறஜெடி நாடகத்தில் நாடக நாயகன் அழிவை நோக்கி இழுத்துச் செல்லப்படுவதற்கான காரணம் யாது?
1. ..........

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) I

இரண்டு மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. ஒவ்வொரு விடைக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.

---

### பகுதி ஆ

1. ஒரு நாடகத்தை உண்மையான சிறந்த நாடகம் ஆக்குவது யாது என நீர் கருதுகின்றீர்?

2. "நாடகத்துக்கான அரங்கக் கட்டட முறைமையும் நாடகத்தின் செய்து காட்டல் (Enantment), அளிக்கை (Presentation) மறை உத்திகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை." இந்தக் கூற்றை வேறுபடும் பண்பாடுகளிலிருந்து உதாரணங்கள் தந்து ஆராய்க.

3. கிரேக்கத் திறஜெடி நாடகத்தின் கதைப் பின்னலை (Plot) செந்நெறிச் சமஸ்கிருத நாடகக் கதைப் பின்னலுடன் ஒப்பிடுக.

4. "நிருத்த" "நிருத்திய" "நாட்டிய" என்பவற்றுக்கான வரைவிலக்கணத்தைத் தந்து. அவை வேறுபடும் தன்மையை விளக்குக.



5. "இரத்தினாவளி" நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு நாடக நிலைகளுக்கும் (அவஸ்தா), நாடக மூலகங்களுக்கும் (அர்த்த பிரகிருதி) உள்ள வேறுபாட்டை ஆராய்க.

6. கீழ்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.
(i) சிகிச்சையாக அரங்கு
(ii) விபாவ
(iii) அரங்க இசை
(iv) அநர்த்த அரங்கு (Absurd Theatre)
(v) மோதுகை (Conflict - Agon)
(vi) பூர்வரங்க
(vii) மூன்றின் ஒருமிப்பு (Three Unities)

7. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களுள் எவரேனும் இருவர் நவீன அரங்கு வளர்ச்சிக்குச் செய்துள்ள பங்களிப்பினை ஆராய்க.
(i) இப்சன்
(ii) ஸ்ரனிஸ்லாவ்ஸ்கி
(iii) மெயர்ஹோல்ட்
(iv) பிறெஃ்ற்

8. இருபதாம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் ஐரோப்பிய அரங்கில் ஏற்பட்ட வளர்ச்சிகளை எடுத்துக் கூறுக.

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி அ

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா √ பிழையா x என்பதனைக் குறியிட்டுக் காட்டுக. (√சரி x பிழை)

1. ஜோன் டி சில்வாவின் எல்லா நாடகங்களும் "ரவர்" மண்டபத்திலேயே நடைபெற்றன. (.......)

அல்லது கூத்து ஆடுவதற்குப் பொருத்தமானது வட்டக்களரியே. (.......)

2. "காமன் கூத்து" என்பது யாழ் குடாநாட்டில் காணப்படும் ஒரு நாடக வடிவமாகும் (.......)

அல்லது "கோலம்" நாடகத்துக்கு வேடமுகம் (Mask) அவசியமில்லை. (.......)

3. "மனமே" என்ற பெயரில் பழைய கவி நாடகம் ஒன்று உள்ளது (.......)

அல்லது "இராவணேசன்" புதிதாக எழுதப் பெற்ற கூத்து ஆகும். (.......)

4. நோராவைப் புரிந்துகொள்ள ஹெல்மர் தவறியமையே அக்குடும்பத்தின் பிளவுக்குக் காரணமாகும். (.......)

5. "கபடா கொள்ளய" " குருகேமாலாவ" என்பவை கீழைப் பிரதேசச் சிங்கள நோய் தீர்ப்புச் சடங்கில் வரும் இரு ஆட்டங்களாகும் (.......)

அல்லது "விலாசம்" ஆட்டக்கூத்து வகையைச் சார்ந்தது. (.......)

6. இலங்கையில் "கூத்து" இந்துக் கோயில் வீதிகளிலோ அன்றேல் அரிவி வெட்டப்பட்ட வயல் வெளிகளிலோ ஆடப் பெறுவதாகும். (.......)

7. "வெனிஸ் நகர வணிகன்" நாடகத்தில் போஷியாவின் காதலன் அன்ரோனியோ என்பவன் ஆவான். (.......)

☞ சரியான விடையைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

8. "செல்லம் லமா" எனும் பாத்திரம் வருவது.
1. நூர்த்தி நாடகத்தில் 2. கோலம் நாடகத்தில்
3. பழைய நாடகமவில் (.......)

அல்லது கூத்தில் சபை விருத்தம் என்பதைப் பாடுபவர்.
1. பக்கப் பாட்டுக்காரர் 2. அண்ணாவியார் 3. சபையோர் ஆவர் (.......)

9. "தன்னோ புதுங்கே" எனும் பாடலுக்கு இசை அமைத்தவர்.
1. முகமது கௌஸ் 2. விஸ்வநாத் லௌசி
3. ஷெல்ற்றன் பிரேமரத்தின (.......)

அல்லது தமிழ் பார்சி மரபு நாடகங்களுக்கான இசை பெரும்பாலும்
1. ஹிந்துஸ்தானி இசையாக 2. கர்நாடக இசையாக
3. நாட்டார் இசையாக இருக்கும். (.......)



10. காத்தவராயன் கூத்து எனும் தமிழ் நாட்டார் கூத்து வகை பெரும்பாலும்
1. மன்னாரில் 2. மட்டக்களப்பில் 3. யாழ்ப்பாணத்தில் ஆடப்பெறுவதாகும். (.......)

11. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆரம்ப காலங்களில் ஆங்கில நாடகங்கள் எழுதியவர்
1. ஈ. எஃப். சி. லுடோவைக் 2. நியூமான் ஜபால்
3. ஈ. ஆர். சரத்சந்திர ஆவார் (.......)

12. நாடக அரங்கக் கல்லூரியைத் தோற்றுவித்தவர்
1. நா. சுந்தரலிங்கம் 2. சு. வித்தியானந்தன்
3. ம.சண்முகலிங்கம் ஆவார் (.......)

☞ பொருத்தமற்ற விடையைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

13. 1. லோகம ஹம்சா 2. நரி பான 3. முஹுது புத்து
4. ஹரிமபடு ஹயக
என்பவை சிங்கள மோடி நாடகங்களாகும். (.......)

அல்லது
1. மூவிராசாக்கள் நாடகம் 2. என்றிக்கு எம்பறேதர் நாடகம்
3. கண்டியரசன் நாடகம் 4. ஞானசௌந்தரி நாடகம்
என்பவை கத்தோலிக்க நாடகங்களாகும். (.......)

14. கீழ்க் காணப்படுபவை கோலம் நாடகத்தில் வரும் வழமையான பாத்திரங்களாகும்.
1. சபா விதான 2. பஹூபூத கலாமா 3. லெஞ்சினா
4. ஆராய்ச்சி றால (.......)

அல்லது
1. சிவன் 2. ரதி 3. பிரம்மா 4. அருச்சுனன்
ஆகியோர் காமன் கூத்தில் வரும் பாத்திரங்களாகும். (.......)

☞ கீறிட்ட இடங்களுக்கு பொருத்தமான சொற்களை இடுக.

15. மகப்பேறில்லாப் பெண்களுக்குக் கருவளம் வேண்டி ஆடப்பெறும் ஆட்டம் ................................ ஆகும். அல்லது
காத்தவராயன் கூத்து ................................................ அம்மன் வழிபாட்டோடு சம்பந்தப்பட்டது.

16. ஆங்கிலத்தில் Imaginary Invalid என்ற தலைப்புள்ள மோலியேயினுடைய நாடகத்தைச் சிங்களத்தில் "இபே வெட" என்ற பெயருடன் மொழிபெயர்த்தவர் ..............................ஆவார்.

அல்லது

ரெனசிவில்லியம்ஸ் எழுதிய The Glass Menageric என்ற நாடகத்தை ......................................... என்ற பெயரில் பாலேந்திரா தயாரித்தார்.

17. பத்தினி வணக்கத்துடனும் கருவளச் சடங்குகளுடனும் சம்பந்தப்பட்ட சிங்கள நாட்டார் நாடகம் ............................................. ஆகும்.

அல்லது

மலையகத்தினரால் சடங்காக ஆடப்பெறும் மகாபாரதம் சம்பந்தப்பட்ட ஆட்டம் ..................... ஆகும்.

☞ பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

18. சபரகமுவப் பாரம்பரியத்திற்குரிய இரண்டு சடங்கு ஆட்டங்களின் பெயர்கள் தருக.

1. ....................................................................................................

2. ....................................................................................................

அல்லது

சங்க காலத்தில் நிலவிய இரண்டு நாடகச் சடங்குகளின் பெயர்கள் தருக.

1. ....................................................................................................

2. ....................................................................................................

19. கத்தோலிக்க சம்பந்தப்பட்ட இரு நாடகங்களின் பெயர்கள் தருக.

1. ....................................................................................................

2. ....................................................................................................

20. பி. ஏ. டபிள்யு. ஜெயமன்ன எழுதித் தயாரித்த நாடகங்கள் இரண்டின் பெயர் தருக.

1. ....................................................................................................

2. ....................................................................................................



# நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

இரண்டு மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஆகக் குறைந்தது ஒன்றையாவது தெரிந்தெடுத்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி ஆ

### பிரிவு I - உலக அரங்கு

1. ஈடிப்பஸ் மன்னன் என்னும் கிரேக்கத் திறஜெடி விதியினால் துரத்தப்படும் நாயகன் ஒருவனின் அவலமாக அமைந்துள்ளது எனும் கூற்று எத்தனை பொருத்தமானது என்பதை ஆராய்க.
2. இரத்தனாவளியில் வரும் வாசவத்தை சுசாங்கதை ஆகிய பாத்திரங்களை ஆராய்க.
3. மத்திய காலத்து ஐரோப்பிய நாடக வளர்ச்சியை எடுத்துக் கூறுக.
4. ஒதேல்லா, டெஸ்டிமோனா, இயாகோ ஆகிய பாத்திரங்களையும் அவற்றின் ஊடாட்டங்களையும் ஆராய்ந்து ஒதெல்லோ எவ்வாறு ஒரு வன்மைமிக்க திறஜெடியாக அமைந்து விடுகிறது என்பதனை ஆராய்க.

### பிரிவு II - இலங்கை அரங்கு

5. "கொஹொம்ப கங்காரிய" எனும் சடங்கினை மிகச் சுருக்கமாக எடுத்துக் கூறி, இச் சடங்கு ஆட்டத்திலுள்ள நாடக அம்சங்களை விளக்குக.
6. தமிழகத்து நாடக வரலாற்றை எத்தனை கால கட்டங்களாக வகுக்கலாம் என்பதைச் சுருக்கமாக ஆராய்க.
7. "கோலம்" நாடகத்தின் விசேட பண்புகளை ஆராய்க.
8. பார்சி மரபுத் தமிழ் அரங்கின் நாடக, அரங்கியல் பண்புகளை விளக்குக.
9. பின்வரும் விடயங்களை உள்ளடக்கும் வகையில் இலங்கையின் நூர்த்தி நாடக மரபு பற்றி விளக்குக.

   1. தோற்றம் வளர்ச்சி 2. கதைப்பின்னல் 3. அளிக்கை முறைமை
   4. அரங்க உத்திகள். 5. இசை 6. நடிகர்கள்

10. பின்வரும் விடயங்களை உள்ளடக்கும் வகையில் இலங்கையில் தமிழ் மரபு நாடகத்தின் மீட்பு அதன் செல்நெறி தாக்கம் பற்றி ஆராய்க.

    1. வித்தியானந்தன் செய்த மீட்டெடுப்பின் பண்புகள்
    2. அந்த மீட்டெடுப்பு முறையைப் பின்பற்றி வந்த தயாரிப்புகள்

3. கூத்து மரபை ஆட்ட முறையாகக்கொண்ட நவீன கதை அம்சம் கொண்ட நாடகங்கள்
4. இந்த மீட்டெடுப்புக்கும் தமிழகத்துத் தெருக்கூத்து மீட்டெடுப்புக்குமுள்ள ஒற்றுமை, வேற்றுமை

11. கீழ்காணும் அரங்காளர்களில் எவரேனும் இருவர் இலங்கை அரங்குக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.
1. ஹென்றி ஜயசேன
2. எம். வி. கிருஷ்ணாழ்வார்
3. காமினி ஹத்தொட்டுவேகம
4. கலை அரசு சொர்ணலிங்கம்
5. இந்து தர்மசேன
6. க. கணபதிப்பிள்ளை
7. க. பாலேந்திரா
8. ரஞ்சித் தர்மகீர்த்தி

12. இலங்கையின் ஆங்கில அரங்கின் வளர்ச்சி பற்றி விமர்சனபூர்வமான மதிப்பீட்டினைத் தருக.

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) III

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி அ

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா √ பிழையா X என்பதனைக் குறியிட்டுக் காட்டுக. ( √சரி X பிழை)

1. அரங்குமேடை எல்லா வேளைகளிலும் அவசியமில்லை (.......)
2. இயர்புநெறி நாடகங்களிற் பயன்படும் மேடைப்பொருட்கள் எல்லாமே நிஜவாழ்க்கையிற் பயன்படுத்தப்படுவனவாக இருத்தல் வேண்டும். (.......)



3. வேட உடுப்பு, ஒப்பனை என்பன ஆங்கிக அபிநயத்துள் வரும் (.......)
4. "வெனிஸ்நகர வணிகன்" என்பது பம்மல் சம்பந்த முதலியாரால் செய்யப்பட்ட மொழி பெயர்ப்பு ஆகும். (.......)
5. ஸ்ரனிஸ்லாவஸ்கியினால் உருவாக்கப்பட்ட அரங்க நெறிமுறையின் பெயர் " முறைமை" (Systems) ஆகும். (.......)
6. இலங்கையில் ஒரு நாடகத்தை அரங்கேற்றுவதற்குப் பகிரங்க ஆற்றுகைச் சபையின் அங்கீகாரம் அவசியமில்லை. (.......)
7. ஒரு மேடை நாடகத்தின் முதல் மேடையேற்றம் "முகூறத்" எனப்படும். (.......)
அல்லது
தமிழ் நாடக மரபில் பாத்திரத்தின் வருகைக்கான பாட்டு "தரு" எனப்படும். (.......)

☞ சரியான விடையைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

8. அபிநயம் என்பது
1. எழுத்துருவுக்கு 2. நெறியாளருக்கு 3. நடிகருக்கு உரியது (.......)
9. ஒரு நடிகர், பார்ப்போர் விளக்கத்துக்காக தனது பாத்திரத்தின் அந்தரங்க உணர்ச்சிகளைக் கூறும் முறைமை
1. தனிக் கூற்று (Monologue) 2. தற்கிளவி (ஸ்வகத பாஷியை)
3. புறச்சொல் (Aside) எனப்படும். (.......)
10. பரதரின் கருத்துப்படி ரசங்கள்
1. எட்டு 2. ஒன்பது 3. பத்து ஆகும். (.......)
11. தூரதேசத்துக்குச் செல்வதைச் சுட்டுவதற்கு மேடையைச் சுற்றி நடத்தல் எனும் முறை
1. நாட்டிய தர்மியை 2. கூத்து மரபை 3. லோகதர்மியைச் சார்ந்தது. (.......)
12. ஒரு நாடகத்தின் மிக முக்கியமான அம்சம்
1. மேடை 2. நடிகர் 3. எழுத்துரு ஆகும். (.......)

☞ பொருத்தமான விடையை எழுதிக் கீறிட்ட இடங்களை நிரப்புக.

13. கிரேக்கத் திறஜெடியில் பார்ப்போர் பெறும் வெளிக்கொணர்கையைக் கிரேக்க மொழியில் .................................................. என்பர்.
14. மேடையின் பின்புறத்திலுள்ள வெள்ளை வெளி ................................................ எனப்படும்.

15. தனது நாடகவர்க்கத்துக்கான உத்திகளைப் புராதன இந்திய மரபிலிருந்து பெற்றுக்கொண்ட ஜேர்மனிய நாடகாசிரியர் .................................................. ஆவார்.

16. மேடைக்குப் பின்னாலுள்ள திரைக்கு ஒளி பாய்ச்சும் ஒளி விளக்கினை ...................................... என்பர்.

☞ பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

17. ஒளி விதானிப்பில் இரண்டு வகைப் பொட்டுஒளிகளை (Spotlights)க் குறிப்பிடுக.
1. ..........................................................................................................
2. ..........................................................................................................

18. மேடை முகாமையாளரின் (Stage manager) பணிகள் இரண்டு கூறுக.
1. ..........................................................................................................
2. ..........................................................................................................

19. ஒரு நாடகத்தின் இசைநெறியாளரின் பணிகள் இரண்டு கூறுக.
1. ..........................................................................................................
2. ..........................................................................................................

20. நாடகத்துக்கான கூட்டிசை (Orchestra) மேடைக்கு முன்னால் இருப்பதிலுள்ள நன்மைகள் இரண்டு கூறு;க.
1. ..........................................................................................................
2. ..........................................................................................................

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) III

இரண்டு மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஆகக் குறைந்தது ஒன்றையாவது தெரிந்தெடுத்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி ஆ

### பிரிவு I - நெறியாள்கை, தயாரிப்பு

1. "நாடகம் என்பது கலைஞர்களினதும் கைவினையாளர்களினதும் கூட்டு முயற்சியாகும்." நாடகத்தில் தொழிற்படும் இவர்கள் யார் யார் என்பதை எடுத்துக்கூறி அவர்களின் பணிகளை விளக்குக.



2. "நாடக எழுத்துரு என்பது எலும்புக்கூடு போன்றதே . அதற்குத் தசையும் இரத்தமும் வைத்து, உயிரூட்டுபவர் நெறியாளரே" ஆராய்க.

3. அரங்கில் கட்புலனுக்குக் காட்ட முடியாத விவரங்களைப் புலப்படுத்துவதற்குக் கையாளப்படத்தக்க உத்திகள் யாவை?

### பிரிவு II - நடிப்பு

4. ஒரு நடிகருக்கு வேண்டிய அத்தியாவசிய பயிற்சிகள் (Exercise) யாவை?

5. ஒரு நல்ல நடிகனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் யாவை?

6. உலகெங்கும் நாடகங்களில் ஆண் நடிகர்கள் பெண் வேடம் தாங்கி வந்துள்ளமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துக.

### பிரிவு II - மேடைநுட்பம்

(வேட உடுப்பு, ஒப்பனை, இசை, காட்சி விதானிப்பு, ஒளி விதானிப்பு)

7. மேடை நாடகத்தின் தொனி நிலையை (tone of the play) ஏற்படுத்துவதில் ஒளியமைப்பு வகிக்கும் இடத்தினை விளக்குக.

8. "மேடை அலங்காரம் ஒரு நாடகத்தை நல்லதாக்கலாம் அல்லது அழிக்கலாம்" உதாரணம் தந்து விளக்குக.

9. நாடக அளிக்கைக்கு ஒப்பனை ஏன் அவசியமாகின்றது என்பதை விளக்குக.

### பிரிவு III - ரசனையும் விமரிசனமும்

10. "செறித் தோட்டம்" (The Cherry Or2chard ) அல்லது பொம்மை வீட்டை (The Dolls House) ஆதாரமாகக் கொண்டு "நாடகம் சமூகத்தின் கண்ணாடியாக அமையும்." தன்மையை விளக்குக.

11. நாடகத் தயாரிப்புக்களின் இன்றைய நிலையைப் பார்க்கும்பொழுது, நாடகங்களின் உண்மையான வெற்றிக்கு அவை முற்றிலும் யதார்த்தபூர்வமாகவோ அன்றேல் முழுக்க முழுக்க மோடி நிலைப்பட்டதாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. அண்மையில் வெளிவந்த நாடகங்களை ஆதாரமாகக் கொண்டு இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

12. நல்ல நாடக விமர்சகர் ஒருவரிடம் இருக்க வேண்டிய பண்புகள் யாவை?

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தரப்) பரீட்சை
## 2001 ஓகஸ்ட் (புதிய பாடத்திட்டம்)

### நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) I

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி அ

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா √ பிழையா x என்பதனைக் குறியிட்டுக் காட்டுக. (√சரி x பிழை)

1. வசிபாக நடிப்பு என்பது நடனக்கலையில் இயல்பான பண்புகளில் ஒன்று (.......)

2. அர்த்தத்துக்கு அழுத்தம் கொடுக்கவும், உணர்ச்சிநிலையை கூட்டிக் காட்டவும் இசையைப் பயன்படுத்துவது "பலே"(Ballet)யின் இயல்பான பண்புகளில் ஒன்றாகும். (.......)

3. நொஹ அரங்கில் பெண்களே, பெண் பாத்திரங்களை நடிப்பர் (.......)

4. "ஒப்பெறா" வில் பாடல் முக்கிய இடம் பெறும். (.......)

☞ சரியான விடையைத் தெரிந்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

5. நாடகக் கலையின் முதன்மையான நோக்கம்
   1. மக்களுக்கு அறிவுறுத்தல் 2. அறிவு வழங்கல்
   3. பார்ப்போரை அழகியல் முறையில் உணர்திறனுடையவர்களாக்கல் (.......)

6. நாடகக்கலை பற்றிய பரதரின் கூற்று
   1. நாடகம் உலக நடைமுறைகளைப் போலச் செய்து காட்டல் ஆகும்.
   2. நாடகம் இயற்கையைப் பிரதிபலிப்பதாகும்
   3. நாடகம் என்பது சம்பவங்கள் போலச் செய்யப்படுதலாகும். (.......)

7. வலது புறத்திலுள்ள படத்தில் உள்ளது.



   1. ஒப்பறா
   2. ஊமம்
   3. பலே (.......)

8. வலது புறத்திலுள்ள சித்திரம் எதனுடையது?



   1. கபுக்கி மேடை
   2. காட்சி முன்வளைவு (Proscenium Arch)
   3. கிரேக்க அரங்கின் ஸ்கெனே (.......)

9. மேற்கத்திய அரங்கிற் பேசப்படும் "மூன்றன் ஒருங்கியைபு" என்பது
   1. காலம், வெளி, இடம் ஆகும்.
   2. கதைப்பின்னல், கதாநாயகன், முறுக்கு அவிழ் முடிவமைதி (de nouement) ஆகும்
   3. செயற்பாடு, காலம், வெளி ஆகும். (.......)

10. காவிய அரங்கை (Epic Theatre) அறிமுகப்படுத்தியவர்
   1. யுஜீன் இயனஸ்கோ
   2. பேற்றோல் பிறெஃற்
   3. சாமுவேல் பெக்கற் (.......)

☞ பொருந்தாக் குறிப்பைக் கண்டறிந்து அதன் இலக்கத்தைத் தரப்பட்டிருக்கும் கூட்டினுள் எழுதுக.

11. 1. நாடகம் 2. பலே 3. பிரதிமைக்கலை
   4. ஒப்பறா என்பன ஆற்றுக்கலைகளாகும். (.......)

12. 1. தனக்குத் தான் பேசுதல்
   2. மேடைக்காட்சியமைப்பு மூலம் ஒரு விருந்தினர் அறையைச் சுட்டுதல்
   3. கை அசைவுகளைப் பயன்படுத்தல் என்பன நாட்டிய தர்மி (மோடிமை அரங்கு) க்கு உரிய இயல்புகளாகும் (.......)

13. மேடை நாடகம் என்பது
1. நால்வகை அபிநய முறையால் எடுத்துக் கூறப்படுவது
2. ஒரு வாழும் கலை
3. உரைநடைச் சொல்லாடலை இயல்பான பண்பாகக் கொண்டிருப்பது
4. பார்ப்போர் பங்குகொள்ளலை இன்றியமையாததாகக் கொள்வது ஆகும். (.......)

14. 1. கண்டறிந்து கொள்ளல் 2. முறுக்கவிழ் முடிவமைதி
3. சிக்கற்பாடு 4. வெளித்தெரிய வைத்தல்
என்பன அரிஸ்ரோற்றலின் கூற்றுப்படி, கிரேக்கத் திறஜெடியின் கதைப்பின்னல் வளர்ச்சியைக் காட்டுவனவாகும்.

☞ குறுவிடை தருக.

15. மத்தியகால ஐரோப்பாவில் மேற்கிளம்பிய நாடக வகைகள் இரண்டின் பெயர்களைத் தருக.
1. ..........................................................................
2. ..........................................................................

16. கி.பி ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்த, நாடகக் கொள்கை விளக்கத்திற் சிறந்து விளங்கிய இருவர் பெயர் தருக.
1. ..........................................................................
2. ..........................................................................

17. அரிஸ்றோஃபென்சின் புகழ்பூத்த மகிழ்நெறி நாடகங்கள் இரண்டின் பெயர் தருக.
1. ..........................................................................
2. ..........................................................................

18. வாய்மொழிச் சித்திரிப்பு இல்லாத இரண்டு ஆற்றுகைக் கலைகளின் பெயர்கள் தருக.
1. ..........................................................................
2. ..........................................................................

19. வேடமுகத்தைப் பயன்படுத்தலைச் சிறப்புப் பண்பாகக் கொண்டிருந்த புராதன அரங்கப் பாரம்பரியங்கள் இரண்டின் பெயர்கள் தருக.
1. ..........................................................................
2. ..........................................................................



20. வலது புறத்திலுள்ளது புராதன கிரேக்க அரங்கின் தோற்றப்படமாகும். அதில் "பரடொஸ்" (Parados) ஒவ்வொன்றையும் அம்புக்குறியிட்டுக் காட்டுக.



## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) I

இரண்டு மணித்தியாலங்கள்

பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி ஆ

1. கீழ்காணும் கூற்றுக்களை நீர் எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்கிறீர்?
1) "எல்லா வகையான கலைப்படைப்புகளினதும் அடித்தளக் கொள்நெறியாக அமைவது போலச் செய்தலே"
2) நாடகம் என்பது உலக நடைமுறைகளின் போலச் செய்தலே
3) நாடகம் என்பது சூழமைவுகளை (Situations)ப் போலச் செய்தலாகும்.

2. அரிஸ்ரோற்றில் எடுத்துக் கூறிய "கதாசிஸ்" எனும் எண்ணக்கருவை விவரித்து, அது பரதரால் எடுத்துக் கூறப்பட்ட "ரச" எண்ணக்கருவுடன் ஒப்பிடக்கூடியதா என்பதை ஆராய்க.

3. சமஸ்கிருத அல்லது நொஹ அரங்குக்குரிய "யதார்த்தம்" சாரா அம்சங்களை ஆராய்க. இயலக்கூடிய இடங்களில் உதாரணம் தந்து விளக்குக.

4. கிரேக்கத் திறஜெடியானது எந்த அளவுக்கு உண்மையான மனித அவலத்தை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது என்பதைக் கீழே தரப்படும் அம்சங்களை மனதிற்கொண்டு ஆராய்க.
1) கதைப்பின்னல்
2) சம்பவங்களின் ஒழுங்கமைப்பு
3) பாத்திர வார்ப்பு
4) தெய்வத் தலையீடு / சாபம்

5. வில்லியம் ஷேக்ஸ்பியர் எலிசபெத் காலத்தின் மிகச் சிறந்த நாடகாசிரியர் ஆவார். அவர் காலத்தில் நிலவிய நாடகக்கலை பற்றிய எண்ணக்கருவை அவரது "ஒதெல்லோ" "வெனிஸ்நகர வணிகன்" ஆகிய நாடகங்களில் தெரியும் முறைமையினைக்கொண்டு விளக்குக.

6. "யதார்த்த அரங்கு" என்பது யாது என்பதை எடுத்துக்கூறி அதன் பிரதான அம்சங்களையும், பலவீனங்களையும் இயன்ற அளவு உதாரணம் தந்து ஆராய்க.

7. "பேற்றோல் பிறெஃற்றின் அரங்கக் கலை, ஸ்ரானிஸ்லாவஸ்கி எடுத்துக்கூறும் பலவற்றை மறுதலிக்கின்றது" ஆராய்க.

8. கீழ்க் காணப்படுவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

1) குரூர அரங்கு (Theatre of Cruelty)
2) ஸ்தாயிபாவம்
3) நாடிகா
4) கியோஜென்
5) விஸ்கம்பக
6) வறுமை அரங்கு (Poor Theatre)
7) நாடகக் கலை இலக்கியத்திலிருந்து வேறுபடும் முறை
8) வலிமையுள்ள ஒரு தொடர்பாடல் முறையாக அரங்கு

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி அ

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா √ பிழையா x என்பதனைக் குறியிட்டுக் காட்டுக. (√சரி x பிழை)

1. நாடகம் ஆடப்பெற்ற மேடையை முன்னர் "கரலிய" என்றனர் (.......)
அல்லது கூத்து ஆடப்பெறும் இடம் "களரி" எனப்படும் (.......)

2. சமஸ்கிருத நாடகங்கள் உட்கார்ந்து வாசிக்கப்படுவதற்காக எழுதப்பட்டன வேயன்றி அரங்க அளிக்கைக்காக அன்று (.......)



3. நூர்த்தி நாடகங்களின் பிரதான கவர்ச்சி அம்சம் வட இந்திய இசையாகும். (.......)
அல்லது தென் இந்தியப் பார்சி அரங்கு கர்நாடக இசையைப் பயன்படுத்தியது. (.......)

4. "வடிகபட்டுன" என்பது கண்டிய ஆட்ட மரபுக்கு உரிய சடங்கு ஆட்டமாகும்.
அல்லது பறைமேளக்கூத்து சமயச்சடங்கு ஆகும். (.......)

5. கிரேக்க அரங்கின் முதல் நடிகராகக் கருதப்படுபவர் தெஸ்பிஸ் ஆவார். (.......)

☞ சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

6. வலது புறத்திற் காட்டப்பெறும் நடிகர் எந்த அரங்க மரபுக்கு உரியவர்?
1. கிரேக்க திறஜெடி
2. கிரேக்க மகிழ்நெறி
3. யப்பானிய நொஹ் (.......)



7. அபத்த (Absurd Theatre) அரங்கின் முன்னோடியாகக் கருதப்படுபவர்
1. பேற்றோல் பிறெஃற்
2. அல்பேற் கமூ
3. ரெனசி வில்லியம்ஸ் (.......)

8. "லங்கா சுபோத விலாச சபை"
1. க. கணபதிப்பிள்ளையின்
2. நா. சுந்தரலிங்கத்தின்
3. க.சொர்ணலிங்கத்தின் தலைமையில் தொடங்கப்பெற்றது. (.......)

9. மிருச்ச கடிகம் என்னும் சமஸ்கிருத நாடகத்தை எழுதியவர்
1. ஸ்ரீ ஹர்ஷர்
2. சூத்ரகர்
3. ஸ்ரீ பாசர் (.......)

10. வலது புறத்திலுள்ள அரங்கு
   1. நொஹ் அரங்குக்கு
   2. எலிசபெத் அரங்குக்கு
   3. நுர்த்தி அரங்குக்கு உரியது (.......)

☞ பின்வரும் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள நான்கு விடயங்களில் ஒன்று அத்தொகுதிக்குப் பொருத்தமற்றது. அதனைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

11. (1) யுகாசான பண (2) ராம மர்ம (3) ஆலவக்க (4) கவிசி விவர்ண (.......)

அல்லது

(1) பாண்டவர் வனவாசம் (2) வேட்டைத் திருவிழா (3) அருச்சுனன் தபசு (4) காத்தவராயன் கூத்து (.......)

12. (1) கேலிநாடகம் (Farce) (2) மகிழ்நெறி நாடகம் (3) சற்றர் நாடகங்கள் (4) பிரகரண (.......)

13. (1) சூனியம் யாகய (2) தஹ அட்டசன்னிய (3) கொஹம்ப கங்காறிய (4) றட்ட யக்கும (.......)

அல்லது

(1) ஆய்ச்சியர் குரவை (2) வேட்டுவவரி (3) குன்றக் குரவை (4) இராஜஇராஜேஸ்வரன் நாடகம் (.......)

14. (1) சாகரிக (2) சூத்ரதாரி (3) உதயணன் (4) காஞ்சனமாலை (.......)

15. (1) ஜெசிக்கா (2) ஒதேல்லா (3) இயாகோ (4) காசியோ (.......)

☞ குறுவிடை தருக.

16. மலையகப் பிரதேசத்தில் சனரஞ்சகமாகவுள்ள இரு நாடக வகைகள் யாவை?
   1. ........................................................................
   2. ........................................................................

17. சு. வித்தியானந்தன் தயாரித்த இரண்டு நாடகங்களின் பெயர்கள் தருக.
   1. ........................................................................
   2. ........................................................................



☞ கீறிட்ட இடத்தை நிரப்புக.

18. ஹரிம படு ஹயக் என்ற சிங்கள நாடகத்தைத் தயாரித்தவர் ............................................ ஆவார்.

அல்லது

மண் சுமந்த மேனியர் என்ற தமிழ் நாடகத்தை எழுதியவர் ................................................ ஆவார்.

19. நிக்கொலய் கொகல் எழுதிய "திருமணம்" நாடகம் சிங்களத்தில் ........................................................ என்ற பெயருடன் தயாரிக்கப்பட்டது.

அல்லது

ரெனசி வில்லியம் எழுதிய "கிளாஸ் மனேஜறி" (The Glass Menagerie) என்ற நாடகம் தமிழில்............................................................... என்ற பெயரில் தயாரிக்கப்பட்டது.

20. பின்னர் திரைப்பட இயக்குநர்களாகப் பரிணமித்த இரண்டு சிங்கள நாடகக் கலைஞர்கள்
   1. ........................................................................
   2. ........................................................................

அல்லது

வி. வி . வைரமுத்து பிரதான பாத்திரங்களில் நடித்த மிகப் பிரபலமான நாடகங்கள்
   1. ........................................................................
   2. ........................................................................ ஆகும்.

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

இரண்டு மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் இரண்டு வினாக்களைத் தெரிந்தெடுத்து எல்லாமாக நான்கு (4) வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி ஆ

### பிரிவு I - உலக அரங்கு

1. கீழ்க்காணும் அம்சங்களை மனதிற் கொண்டு, இரு வேறு நாடக மரபுகளுக்குரிய இரண்டு மகிழ்நெறி நாடகங்கள் எனும் வகையில் இரத்தினாவலி (மாணிக்க,மாலை) யையும் வெனிஸ் நகர வணிகனையும் (The Merchant of Venice) ஒப்புநோக்கி அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக.

1. கதைப்பின்னல் 2. நாடகச் சூழமைவுகள் 3. மோதுகை
4. பிரதான பாத்திரங்கள் அநுபவிக்கும் அதிர்ஷ்டங்கள், துன்பங்கள்
5. மோதுகைத் தீர்வு

2. மேனாட்டு நாடகவரலாற்றில் ஹென்றிக் இப்சனுடைய (பொம்மை வீடு) (Dolls House) ஒரு முக்கிய கட்டக் குறியீடாகக் கொள்ளப்படுவது ஏன் என்பதை விளக்குக.

3. பேர்ரோல்ட் பிறெஃற்றின் பின்னர் மேனாட்டு அரங்கில் ஏற்பட்ட முக்கிய வளர்ச்சிகள் யாவை?

4. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

1. கிரேக்க அரங்கின் "கோரஸ்" 2. சமஸ்கிருத நாடகத்தின் பிரஸ்தாவனம்
3. "தேசி" நாடக மரபு 4. பிஜிங் ஒப்பறா
5. மெயர் ஹோல்ட் 6. ஒக்கினா
7. பாதல் சர்க்காரின் மூன்றாவது அரங்கு 8.வானொலி நாடகம்

## பிரிவு II - இலங்கை அரங்கு

5. வடமோடி, தென்மோடி மகுடி என்பவை ஒன்றிலிருந்து மற்றது வேறுபடும் முறையினை விளக்குக.

6. தஹ அட்ட சன்னியையோ அன்றேல் வேட்டைத் திருவிழாவையோ எந்த அளவுக்கு "நாடகம்" எனக் கொள்ளலாம்.

1. வேடம் பூணல் 2. மோதுகை 3. இசை ஆகிய அம்சங்களை மனதிற் கொண்டு ஆராய்க.

7. 1. "நாடகம" வின் பிரதான அம்சங்கள் யாவை?

2. நுர்த்தியின் வருகையுடன் "நாடகம" கீழ்நிலைப்பட்டதற்கான காரணங்களை ஆராய்க. அன்றேல்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையுள்ள காலப்பகுதியில் தென்னிந்தியத் தமிழ் நாடகம், இலங்கைத் தமிழ் நாடகத்தை எவ்வாறு பாதித்தது என்பதை ஆராய்க.

8. இருபதாம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் சிங்கள நாடகத்துறையில் அன்றேல் இலங்கைத் தமிழ் நாடகத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகளை எடுத்துக் கூறுக.

9. இலங்கையின் ஆங்கில நாடக வளர்ச்சிக்குப் பணிபுரிந்த அரங்கவியலாளர் இருவர் பெயரைத் தந்து அவர்களின் முக்கியத்துவத்தை விளக்குக.



# நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) III

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி அ

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

☞ எல்லா விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

1. ஒரு நாடகத்தின் மிக அத்தியாவசியமான அம்சம்
1. மேடை 2. பார்ப்போர் 3. மேடை ஒளியமைப்பு ஆகும். (.......)

2. தனியொரு நடிகர், மேடை முழுவதையும் தனதாக்கிக் கொண்டு பார்ப்போரை நோக்கிப் பேசுவது
1. தற்கிளத்தல் (Self talk)
2. ஆகாயக் கிளத்தல் (Sky - talk)
3. தனிச் சொல் (Monologue) (.......)

☞ பொருந்தாக் குறிப்பைக் கண்டறிந்து அதன் இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

3.
1. நல்ல எழுத்துருவிலிருந்து ஒரு நல்ல நாடகம் தயாரிக்கப்படலாம்.
2. கூடாத எழுத்துருவிலிருந்து ஒரு நல்ல நாடகம் தயாரிக்கப்படலாம்.
3. கூடாத எழுத்துருவிலிருந்து ஒரு கூடாத நாடகம் தயாரிக்கப் படலாம்.
4. நல்ல எழுத்துருவிலிருந்து ஒரு கூடாத நாடகம் தயாரிக்கப்படலாம். (.......)

4. நாடகம் நடந்து கொண்டிருக்கும்பொழுது, மேடையில் நின்று கடமையாற்றுவோர்,
1. மேடை முகாமையாளர்
2. வேட உடுப்புப் பொறுப்பாளர்

3. எடுத்துச் சொல்லி (Prompter)
4. ஒளிப் பொறுப்பாளர். (.......)

5. ஒரு நாடகம் பொது ஆற்றுகைச் சபையினால் தடைசெய்யப் படுவதற்கான காரணங்கள்
   1. அரசின் பாதுகாப்புக்குப் பயமுறுத்தலாக அமையக்கூடியவை இடம்பெற்றிருத்தல்.
   2. பொது மரியாதை முறைகளை மீறும் காட்சிகளை உடையதாயிருத்தல்.
   3. நாடகத் தரமில்லாத மோசமான காட்சிகளை உடையதாயிருத்தல்.
   4. மத அல்லது இன உணர்வுகளைப் பாதிக்கக்கூடிய விடயங்களை சேர்க்கப்பட்டிருத்தல்.

6. வலது புறத்திலுள்ள படம் ஒரு மேடை அரங்கு சாதாரணமாகப் பிரிக்கப்படும் பகுதிகளைக் காட்டுகின்றது. அப்பகுதிகள் ஒவ்வொன்றின் பெயரையும் தருக.

(1). .................................... (2). ....................................
(3). .................................... (4). ....................................
(5). .................................... (6). ....................................
(7). .................................... (8). ....................................
(9). ....................................

☞ குறு விடைகள் எழுதுக.

7. மேடை நடிகர்களின் முகத்துக்கு வர்ணம் பூசுவதற்குப் பயன்படுத்தப்படும் இரண்டு அடிப்படைப் பொருட்கள்
(1) ....................................
(2) .................................... ஆகும்.

8. வலது புறத்தில் உள்ள ஒளிவிளக்கின் பெயரைத் தருக.
....................................



9. மேடை நாடகங்களின்பொழுது, ஒலிவிளைவை (Sound effects) ஏற்படுத்துவதற்கான இரண்டு உபகரணங்களின் படங்கள் வலது புறத்தில் தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலிருந்தும் கிளப்பக் கூடிய ஒலி விளைவுகளைக் கூறுக.
(1) ....................................
(2) ....................................





☞ பட்டியல் i இல் தரப்பட்டுள்ளவற்றுடன் இயைபத்தக்கனவான பகுதிகளை பட்டியல் ii இலிருந்து தெரிந்து அதன் எழுத்தைக் கூட்டினுள் எழுதுக.

**பட்டியல் i**

10. ஒரு நடிகர் ஒரு பாத்திரத்தை மேற்கொள்ளல் (.......)
11. மேடை அலங்காரத்தை வடிவமைப்பவர் (.......)
12. நாடகத்தின் பிரதான நோக்கம் (.......)
13. மேடை ஒளியமைப்பு (.......)
14. பண்டைய நாட்களில் நாடகாசிரியர் (.......)
15. நாடக இயக்குனர் (.......)
16. ஒரு மேடை நாடகத்தின் முதல் மேடையேற்றம் (.......)
17. நடிகர் தெரிவு (.......)
18. பக்கச் சார்பற்ற ஆக்கபூர்வமான விமர்சனம் (.......)
19. பார்ப்போர் பங்குகொள்ளல் (.......)

**பட்டியல் i**

(அ) நாடக இயக்குநரால் செய்யப்படுவது.
(ஆ) விருப்பத்துக்குரிய ஒரு சர்வாதிகாரிக்கு ஒப்பிடப்படுவர்.
(இ) புலவர், கவிஞர் எனப்பட்டனர்.
(ஈ) காட்சி வடிவமைப்பாளரின் பொறுப்பு ஆகும்.
(உ) என்பது "முதலாட்டம்" எனப்படும்.
(ஊ) வேடம் ஏற்றல் எனப்படும்.
(எ) பார்ப்போருக்கு ஒரு அழகியல் உணர்வை ஏற்படுத்துவதாகும்.
(ஏ) மேடை ஆற்றுகையின் வெற்றிக்கு அவசியமானது.
(ஐ) நாடகச் சம்பவத்தின் உணர்ச்சி நிலையையும் நேரத்தையும் காட்டும்.
(ஒ) சௌக்கியமான அரங்க வளர்ச்சிக்கு உதவும்.

# நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) III

இரண்டு மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஆகக் குறைந்தது ஒன்றையாவது தெரிந்தெடுத்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி ஆ

### பிரிவு I - நெறியாள்கை, தயாரிப்பு

1. நாடகத்தை தயாரிக்கும் நெறியாளர் ஒருவர் மேற்கொள்ளவேண்டிய பணிகளை வரன்முறையாகத் தருக.

2. ஒரு நாடகம் தயாரிப்பது என்பது இந்நாட்களில் பெரும் செலவை ஏற்படுத்துகின்றது. இப்பிரச்சினையைப் புறங்காண்பதற்கு ஒரு நெறியாளர் மேற்கொள்ளவேண்டிய வழிவகைகள் பற்றிக் கூறுக.

3. நல்ல நாடக நெறியாளருக்கு இருக்கவேண்டிய பண்புகள் யாவை?

### பிரிவு II - நடிப்பு

4. நடிகரே நாடகத்தின் பிரதான கலைஞராகக் கொள்ளப்படுகிறார். அரங்குடன் சம்பந்தப்படும் மற்றைய கலைஞர்களிலும் பார்க்க, நடிகர் ஏன் முக்கியமானவர் ஆகிறார்?

5. யதார்த்த நடிப்புக்கும் மோடி நடிப்புக்குமுள்ள வேறுபாடுகள் எவை என நீர் கருதுகிறீர்.?

6. (அ) "அபிநய" எனும் சொல்லுக்கான வரைவிலக்கணத்தைத் தந்து நான்கு வகை அபிநயங்களையும் விளக்குக.

   (ஆ) "வாசிக அபிநயத்தில்" நடிகர் கையாளக்கூடிய பல்வேறு உத்திகளை விளக்குக.

### பிரிவு III - ஆடை / ஒப்பனை / இசை/ மேடை அலங்காரம் / ஒளியமைப்பு

7. (அ) ஒரு மேடை நாடகத்தின் காட்சியமைப்பைத் தீர்மானிப்பதில் இடம் பெறும் காரணிகள் யாவை?

   (ஆ) வெகு விஸ்தாராமான மேடைக் காட்சிகளை அமைப்பதனால் ஏற்படும் பாதக அம்சங்கள் யாவை?



8. (அ) தனது நாடகத்துக்கான இசை இயக்குனர் ஒருவரை அமர்த்தும் பொழுது, நாடக நெறியாளர் கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள் யாவை?

   (ஆ) அரங்குக்கான இசையின் சிறப்பு அம்சங்கள் யாவை?

9. ஒரு நாடகத்துக்கான வேட உடுப்புக்களை வடிவமைக்கும்பொழுது, அதற்குப் பொறுப்பானவர் மனதிற் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?

### பிரிவு IV - நாடக விமர்சனமும் ரசனையும்

10. நீர் பார்த்த ஒரு பிரசித்திபெற்ற நாடகத்துக்கான விமரிசனம் எழுதுக.

11. மோடிமை நாடகங்கள் சமூகப் பிரச்சினைகளை ஆராய்வதற்குப் பொருத்தமானவையல்ல என்று கொள்ளப்படும் பொதுவான கருத்தை "சிங்கபாகு" நாடகம் தவறானது என நிருபித்தது.
அல்லது தமிழ்ப்பார்சி அரங்காம் "ஸ்பெஷல்" நாடகத்தின் அழகியல் அம்சம் அது பாட்டுக்களையும் அவற்றைப் பாடும் முறைமையையும் பயன்படுத்தியமையாகும். விளக்குக.

12. "சௌக்கியமான அரங்குக்குப் பக்கச் சார்பற்ற ஆக்கபூர்வமான விமர்சனம் அவசியம்"விளக்குக.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை 2002 ஒகஸ்ட் (புதிய பாடத்திட்டம்)

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) I

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி அ

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா √ பிழையா X என்பதனைக் குறியிட்டுக் காட்டுக. (√சரி X பிழை)

1. இசை ஆஹார்ய அபிநயத்தினுள் வரும். (.......)
2. "ரச" என்பது பார்ப்போர் நிலையில் உணரப்படுவது. (.......)
3. "கதாசிஸ்" என்பது உணர்ச்சிகளின் வெளிப்படுகை (.......)
4. சமஸ்கிருத நாடக மரபில் உபகதையின் கதைப்பின்னலுக்கான பதம் "பிராசங்கிக" (.......)

☞ சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

5. சமஸ்கிருத நாடகத்தில் வரும் கதாநாயகன்
   1) தனது இலட்சியத்தினை ஈட்டிக்கொள்வான்
   2) எப்பொழுதும் இறப்பான்
   3) விகடத்துக்கான பொருளாவான்.
   4) தோழியை மணம் புரிவான் (.......)



6. யப்பானிய அரங்கில் வேடமுகம் பெரிதும் பயன்படுத்தப்படுவது
   1) நொஹ்ஹில் 2) புன்றக்குவில்
   3) டெங்கக்குவில் 4) கபுக்கியில் (.......)
7. நாடகம் "வாழ்க்கையைப்போலச் செய்தல்" எனக் கூறிய நாடகவியல் அறிஞர் யார்?
   1) பரதமுனி 2) அரிஸ்ரோற்றில்
   3) தனஞ்சயன் 4) பிளேட்டோ (.......)
8. படத்தில் வரும் வேடமுகம் கிரேக்க அரங்குக்குரியது. அது எந்த நாடகவகை என்பதைக் கூறுக.



   1) திறஜெடி
   2) மகிழ்நெறி
   3) சற்றர்
   4) தயோனிசகவிழா (.......)
9. "குருர" அரங்குடன் தொடர்புபடுத்தப்படுபவர்
   1) பெற்றோல்ட் பிறெஃத் 2) அன்ரயோன் ஆற்றோட்
   3) பீற்றர் புறூக் 4) அல்பேட் கமூ ஆவார் (.......)
10. "முறைமை " என்னும் நடிப்பு முறையை உருவாக்கியவர்
   1) ஸ்ரனிஸ்லாவஸ்கி 2) மெயர்ஹோல்ட்
   3) குறொற்றோவஸ்கி 4) ஒகஸ்ராபோல் ஆவார் (.......)

☞ பின்வருவனவற்றுள் பொருத்தமற்றதைச் சுட்டிக்காட்டி, அதற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

11. நாடக ஆசிரியர் நாடகம் எழுதும்பொழுது
   1) பாத்திரவாக்கம் 2) இசை 3) கட்டமைப்பு பற்றிக் கவனம் செலுத்துவார் (.......)
12. இன்னொரு "ஆளாகுதல்" (Impersonation) என்பது
   1) வகிபாகத்தை ஏற்றல் 2) பாத்திரத்தைச் சித்திரித்தல்
   3) காட்சி உருவாக்கல் ஆகும். (.......)
13. நாடகம் என்பது அடிப்படையில் ஒரு
   1) வாழும் கலை 2) கூட்டுக்கலை 3)மேலோருக்கான கலை (.......)
14. "அநர்த்த" நாடகம் என்பது
   1) விளங்கிக்கொள்ள முடியாத நாடகம்
   2) வாழ்க்கையை அர்த்தமற்றதாகக் காட்டும் நாடகம்
   3) யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் நாடகம். (.......)

☞ குறுவிடை தருக.

15. ஈஸ்கிலஸ் எழுதிய நாடகங்களினுள் இரண்டின் பெயர்கள் தருக.
(1) ..........................................................................
(2) ..........................................................................

16. ஷேக்ஸ்பியரின் மகிழ்நெறி நாடகங்கள் இரண்டின் பெயர் தருக.
(1) ..........................................................................
(2) ..........................................................................

17. பகல் வேளையில் ஆற்றுகை நடத்திய இரண்டு நாடக மரபுகளின் பெயர்கள் தருக.
(1) ..........................................................................
(2) ..........................................................................

18. 1950க்குப் பின் உலகப் பெருநிலை எய்திய இரண்டு நாடக வகைகளின் பெயர்கள் தருக.
(1) ..........................................................................
(2) ..........................................................................

19. நாடகவாக்கம் பற்றி எழுதப்பட்ட இரண்டு சமஸ்கிருத நூல்களின் பெயர்கள் தருக.
(1) ..........................................................................
(2) ..........................................................................

20. தரப்பட்டுள்ள படத்திலுள்ள நாடகாசிரியர் பெயர் யாது?
..........................................................................



## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)I

இரண்டு மணித்தியாலங்கள்

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக

### பகுதி ஆ

1. "மோதுகை இல்லாது நாடகம் இல்லை" இக் கூற்றினை உதாரணம் தந்து விளக்குக.
2. கிரேக்க திறஜெடியில் "விதி" பெறும் இடம் யாது? விளக்குக.
3. மத்திய கால ஆங்கில நாடக மரபின் இயல்புகளை விளக்குக.



4. எலிசபெத் கால அரங்குக்குரிய சாதக அம்சங்களையும் வரையறைகளையும் எடுத்துக் கூறுக.
5. சமஸ்கிருத மரபில் "மகா நடகம்" எனப்படுவது யாது? உதாரணம் தந்து விளக்குக.
6. "ரச" என்பது யாது? அது எவ்வாறு அரங்கிற் பெறப்படுகிறது?
7. அநர்த்த அரங்கின் பிரதான அம்சங்களை விளக்குக.
8. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றி குறிப்புகள் எழுதுக.
   1. கதாசிஸ்
   2. கிரேக்கத் திறெஜெடியில் "கோரஸ்"
   3. நியதாப்தி
   4. பிரவேசக
   5. ஹனாமிச்சி
   6. புறொசேனியம் அரங்கு
   7. பிற்றர் புறூக்
   8. தெருவெளி அரங்கு (Street Theatre)

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)II

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி அ

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா √ பிழையா X என்பதனைக் குறியிட்டுக் காட்டுக. ( √சரி X பிழை)

1. "கோலம்" ஆடப்பெறும் வெளி "சபய" எனப்படும். (.......)
   அல்லது
   சங்க இலக்கியத்தில் கூத்து ஆடப்பெறும் இடத்தின் பெயர் "ஆடுகளம்" ஆகும். (.......)
2. புராதன இந்தியாவில், சமஸ்கிருதச் செந்நெறி நாடகங்கள் திறந்தவெளியில் அரங்கேற்றப்பட்டன. (.......)
3. "தஹ அட்டசன்னிய" என்பது கண்டிப் பகுதிக்குரிய சடங்கு ஆகும் (.......)
   அல்லது
   "தைநீராடல்" எனும் சடங்கு "திரும்வெம்பாவை" யுடன் தொடர்புடையது. (.......)

4. சங்கரதாஸ் சுவாமிகளின் அரங்கு பெரும்பாலும் "ஸ்பெஷல் நாடகம்" என்றே கூறப்பட்டது (.......)

5. சற்றர் நாடகம், திறஜெடி நாடகம் ஆற்றப்பெற்றதன் பின்னர் இடம் பெறுவதாகும். (.......)

☞ பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

6. மேனாட்டு அரங்கில் "பிரச்சினை நாடகங்கள்" எனப்படும் வகையைத் தொடக்கி வைத்தவர்
1) இப்சன் 2) மொலியே 3) ஆர்தர் மில்லர் ஆவார் (.......)

7. பேராசிரியர் சரத்சந்திரவின் முக்கியத்துவத்துக்கான காரணம் அவர்
1) சிங்களத்தில் சமூக நாடகங்களை எழுதியமை
2) சிங்களப் பாரம்பரிய அரங்கின் அடிப்படையில் ஒரு புதிய அரங்கை உருவாக்கியமை
3) நல்ல கவிதை நாடகங்களை எழுதியமை ஆகும். (.......)

8. மாணிக்கமாலை நாடகம் சமஸ்கிருத மரபில் எந்த வகைக்கு உரியது?
1) நாடக 2) பிரகசன 3) நாடிக 4) பிரகரண (.......)

9. இலங்கையில் ஆங்கில அரங்கின் முன்னோடி எனக் கருதப்படுபவர்
1) ஜுபால் 2) ஈ.எப். சி. லுடோவைக்
3) ஏணெஸ்ற் மக்கின்ரயர் 4) அழகு சுப்பிரமணியன் (.......)

10. பல்லவ சோழர் காலத்துத் தமிழ் நாடக வளர்ச்சியில்
1) கோயில் மாத்திரமே முக்கியமானது. 2) அரண்மனை மாத்திரமே முக்கியமானது.
3) கோயிலும் அரண்மனையும் முக்கியமானவை. (.......)

☞ ஒவ்வொரு பிரிவிலும் பொருத்தமற்ற ஒன்றின் பெயருள்ளது அதனைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

11. (1) பபாவதி அல்லது (1) கர்ணன் போர்
(2) பவகடத்துறாவ (2) இராவணேசன்
(3) ஹஸ்தி காந்த மத்தறே (3) வாலி வதை
(4) சுப சஹயச (.......) (4) மூவிராசாக்கள் நாடகம் (.......)



12. (1) சாமுவேல் பெக்கற் (2) யூஜீன் ஓ நீல்
(3) ஹரல்ட் பின்ற்றர் (4) கொன்ஸ்ரன்ரயின் ஸ்ரனிலாவஸ்கி (.......)

13. (1) கபுக்கி (2) நோஹ் (3) புன்றக்கு (4) பீஜிங் ஒப்பறே (.......)

14. (1) கோடியர் (2) வயிரியர் (3) கண்ணுளர் (4) பாணர் (.......)

15. (1) சொக்கறி (2) நாடகம் (3) றட்டயக்கும (4) கோலம் (.......)
அல்லது
(1) தென்மோடி (2) வடமோடி (3)குளிர்த்தி (4) மகிடி (.......)

☞ குறுவிடை தருக.

16. விஜயநகர நாயக்க மன்னர் காலத்தில் முதனிலை எய்திய நாடக வடிவங்கள் இரண்டின் பெயர் தருக.
(1) ..........................................................................
(2) ..........................................................................

17. புகழ்பெற்ற நாடகக்கீர்த்தனை ஆக்கங்கள் இரண்டின் பெயர் தருக
(1) ..........................................................................
(2) ..........................................................................

☞ கீறிட்ட இடங்களை நிரப்புக.

18. கஜமன் புவத்தா .............................................................................. ஆல் நெறிப்படுத்தப்பட்டது அல்லது "அபஸ்வரம்" .............................. .............................................. ஆல் நெறிப்படுத்தப்பட்டது.

19. ஆகாயத்துக் கோட்டை (Fortress in the Sky) எனும் ஆங்கில நாடகத்தை எழுதியவர் ..........................................................................

20. வெண்கட்டி வட்டம் என்பது எந்த மூல நாடகத்தின் தமிழ் வடிவம் ஆகும் ?...................................

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி ஆ

### பிரிவு I - உலக அரங்கு

1. நாடகவாக்கத்துக்கு முக்கியமானதென அரிஸ்ரோற்றில் குறிப்பிடும் "மூன்றின் ஒருமை நிலை" ஈடிப்பஸ் மன்னன் நாடகத்தில் புலப்படும் முறையினை விளக்குக.

2. ஒதெல்லோ நாடகத்தில் இயாகோ வகிக்கும் பாகத்தை ஆராய்க.
   அல்லது
   "வெனிஸ்நகர வணிகனில் வரும் ஷைலொக், மானுட அம்சம் கொண்ட ஒரு பாத்திரமே" இக் கூற்றினை விளக்குக.

3. செக்கோவ், தமது "செறித்தோட்டம்" நாடகத்தில் சமூகமாற்றத்தை எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார் என்பதை விளக்குக.

4. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றி குறிப்புக்கள் எழுதுக.
   (1) ஈஸ்கிலஸ் (2) பாசர் (3) ஸ்ரின்ட்பேர்க்
   (4) ரெனசிவில்லியம்ஸ் (5) காவிய அரங்கு (Epic Theatre)
   (6) குரூர அரங்கு (7) நொஹ் அரங்கு (8) கட்டியக் காரன்

### பிரிவு II - இலங்கை அரங்கு

5. "கூத்து" என்பது யாது? அது எவ்வாறு ஆற்றப்படுகின்றது?

6. சிங்கள அரங்க மரபில் "நாடகம" பெறும் இடம் யாது என்பதை விளக்குக.
   அல்லது
   இலங்கைத் தமிழ் அரங்கில் கத்தோலிக்கப் பாரம்பரியம் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

7. "சொக்கரி" எனும் ஆற்றுகையை விளக்குக.
   அல்லது



   பாண்டவர் வனவாசம் அன்றேல் அருச்சுனன் தபசு, எவ்வாறு சடங்காகவும் நாடகமாகவும் அமைகின்றது என்பதை விளக்குக.

8. இலங்கையில் 1950 - 2000 க் காலப்பகுதியில் சிங்கள அரங்கில் அல்லது தமிழ் அரங்கில் ஏற்பட்ட முக்கிய வளர்ச்சிகளை விளக்குக.

9. "முதலில் தமிழ் நாடகம் தமிழ் சினிமாவைப் பாதித்தது. பின்னர் தமிழ் சினிமா தமிழ் நாடகத்தைப் பாதித்தது". இக் கூற்றின் பொருத்தப்பாட்டை விளக்குக.

10. "இலங்கையில் ஆங்கில அரங்கு என்பது மேனாட்டுமயப்பட்ட ஒரு மேலோர் குழுவின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு விட்டது." இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியுமா? காரணம் கூறுக.

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) III

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி அ

☞ பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதற்குரிய இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

1. நாடக ஆற்றுகை என்பது
   (1) எழுத்துரு (2) நடிகர் (3) நெறியாளர்
   (4) இல்லாது நடக்க முடியாது. (.......)

2. சக நடிகரால் கேட்கப்படக்கூடாது ஆனால் பார்ப்போர் அறிய வேண்டும் என்பதற்காகச் சொல்லப்படுவதை
   (1) புறச்சொல் (aside) (2) தனிஉரை (monologues)
   (3) தற்கிளத்தல் (soliloguies) என்பர். (.......)

3. நடிப்பதற்கான "வெளி"
   (1) ஒரு மேடையில் (2) ஒரு வரையறுக்கப்பட்ட இடத்தில்
   (3) பார்ப்போர் பார்க்கக்கூடிய ஒரு இடத்தில் இருத்தல் வேண்டும். (.......)

4. ஒரு நடிகரின் பிரதான பணி
   (1) தெளிவாகப் பேசுதல் (2) பாத்திரத்தைச் சுட்டுதல்
   (3) லயத்துடன் அசைதல் ஆகும். (.......)

5. நடனத்துக்கான இசை
   (1) ரஞ்சகமான மெட்டுக்கள் கொண்டதாய்
   (2) மனநிலையை ஏற்படுத்துவதாய்
   (3) நிறைய வாத்தியங்களைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும் (.......)

☞ பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற கூற்றைத் தெரிந்தெடுத்து அதற்குரிய இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

6. மேடை முகாமையாளர்களின் பணிகள்
   (1) எடுத்துக் கூறிகளை (prompter) நெறிப்படுத்தல்
   (2) மேடை அலங்காரத்தைக் கவனித்தல்
   (3) நடிகர்களின் அசைவுகளைக் கட்டுப்படுத்தல்
   (4) காட்சி மாற்றத்தைக் கண்காணித்தல் (.......)

7. மேடை ஒளியூட்டுகையின் நோக்கங்கள்
   (1) மேடையில் வெளிச்சத்தை ஏற்படுத்தல்
   (2) உணர்ச்சிகளை ஊக்குதல்
   (3) சூழலை உருவாக்குதல்
   (4) மேடையின் பின் ஒலிகளை நெறிப்படுத்தல் ஆகும். (.......)

8. ஒப்பனை
   (1) பாத்திரத்தை அடையாளம் காண
   (2) நடிகர்களைக் கவர்ச்சிப்படுத்த
   (3) வெளிப்படுத்துகையைக் கூர்மைப்படுத்த உதவுகிறது. (.......)

9. ஒரு நாடகத் தயாரிப்பின் நோக்கம்
   (1) பார்ப்போருக்கு மகிழ்வூட்டுவது (2) ஒரு நீதியைக் கற்பித்தல்
   (3) பார்ப்போருக்கு அநுபவத்தை வழங்கல்
   (4) ஒரு எழுத்துருவுக்கு உயிர் கொடுத்தல் ஆகும். (.......)

☞ குறுவிடை தருக.

10. அரங்க இசையில் பயன்படுத்தப்படும் இரண்டு நரம்பு வாத்தியங்களின் பெயர் தருக.



   (1) ..............................
   (2) ..............................

11. சமகால அரங்கிற் பயன்படுத்தப்படும் இரு வகை மேடைகளின் பெயர் தருக.
   (1) ..............................
   (2) ..............................

12. அந்நியப் பண்பாட்டுக்குரிய நாடகத்தை நமது பண்பாட்டுக்கு அமைய ஆக்குவதன் பெயரென்ன?
   ..............................

13. ஒரு நாடகத்தின் முதலாற்றுகை .............................. .............................. எனப்படும்.

14. நடிகர் தெரிவு .............................. .............................. இன் பொறுப்பாகும்.

15. இலங்கையில் எந்த ஆற்றுகைக்கும் வேண்டிய அனுமதியை வழங்கும் சபையின் பெயர். .............................. .............................. ஆகும்.

16. விஸ்தாரமான காட்சியமைப்பினால் ஏற்படும் இடர்ப்பாடுகள் இரண்டு கூறுக.
   (1). ..............................
   (2). ..............................

17. இலங்கையின் பிரபல ஆங்கில நாடக நெறியாளர் இருவரின் பெயர் தருக.
   (1). ..............................
   (2). ..............................

18. இலங்கையில் வானொலித் தமிழ் நாடகத்தின் முதல் தயாரிப்பாளராகவிருந்தவர் .............................. ஆவார்.

19. இலங்கையின் தமிழ் நாடக இசையமைப்பாளர் இருவர்.
   (1). ..............................
   (2). ..............................

20. பக்கத்தில் தரப்பட்டுள்ள ஒளிவிளக்கு யாது?
   ..............................



## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)III

ஒரு மணித்தியாலம்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிந்தெடுத்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி ஆ

#### பிரிவு I - அரங்க நெறியாள்கை / தயாரிப்பு

1. ஒரு நெறியாளர் நாடகத்தின் எழுத்துரு நிலையிலிருந்து நாடக அளிக்கைக்கான நிலைக்கு எவ்வெம் முறைநிலைகளிற் செல்கின்றார் என்பதைத் தெளிவுபடுத்துக.
2. "நெறியாளர் சகல அதிகாரமும் கொண்டவர்" ஏற்றுக் கொள்வீரா? காரணம் தருக.
3. மரபு வழி நாடகத்தின் அண்ணாவியார் நவீன நாடக நெறியாளருடன் எவ்வகையில் ஒற்றுமைப்படுகிறார். வேறுபடுகிறார்.?

#### பிரிவு II - நடிப்பு

4. "நடிப்பு" என்பது யாது? ஒரு நல்ல நடிகருக்கான பயிற்சிகள் யாவை?
5. மேடை நடிப்புக்கும் சினிமா நடிப்புக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.
6. ஒரு நடிகர் சக நடிகருடனும் பார்ப்போருடனும் கொண்டிருக்க வேண்டிய ஊடாட்டம் பற்றி விளக்குக.

#### பிரிவு III - அரங்க அணிகள்

*(ஆடை அணி, ஒப்பனை, இசை, காட்சியமைப்பு, ஒளியூட்டு)*

7. ஒதெல்லோ பாத்திரத்திற்கான உடையமைப்பைத் தருக. அவ் உடையமைப்புக்கான காரணத்தை விளக்குக.
8. "மாணிக்க மாலை"க்கு அமைக்கப்பட வேண்டிய இசையின் தன்மையை விரிவாக " ஆராய்க.



9. "கற்பனாபூர்வமான ஒளியூட்டு இல்லாமலும் நாடகம் வெற்றி பெறும்" ஆராய்க.

#### பிரிவு IV - நாடக விமர்சனம் / நயத்தல்

10. ஒரு நாடக ஆற்றுகையை விமர்சிக்கும்பொழுது ஒரு நாடக விமர்சகர் கருத்திற் கொள்ள வேண்டியவை யாவை?
11. சிவாஜி கணேசனின் நடிப்பினை விமர்சிக்குக.
12. "தமிழில் இன்னும் நாடக விமர்சனம் வளரவில்லை" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சை 2003 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) I

ஒரு மணித்தியாலம்

பகுதிஅ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதிஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி அ

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா (√) பிழையா(X) என்பதனைக் குறியிட்டுக் காட்டுக. (√சரிXபிழை)

1. நடிப்பின் பொழுது பயன்படுத்தப்படும் ஆடைகளும் அணிகலன்களும் "ஆஹார்ய" அபிநயத்தைச் சார்ந்தவை. (.......)
2. நாடகம் பார்ப்போருக்கு மாத்திரம் கேட்கும்படியாக மேடையில் நடிகர் கூறுவது "தனிச்சொல்" (Soliloquy) எனப்படும். (.......)
3. தெருக்கூத்து என்பது இப்பொழுதும் தெருக்களிலேயே ஆடப்படுகிறது. (.......)
4. கிரேக்க நாடகத்தில் வரும் "மிமெசிஸ்" (mimesis) என்பது மேடைப் பொருட்களைக் குறிக்கும் (.......)
5. அரிஸ்டோஃபெனஸ் ஒரு தலைசிறந்த திறஜெடி நாடகாசிரியர். (.......)

☞ சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தைக்கூட்டினுள் எழுதுக.

6. கிரேக்க திறஜெடி நாடகத்தின் நாயகன் எப்பொழுதும்
   (i) விதியிலிருந்து தப்பமுடியாதவன் (ii) பரிகாரத்திற்குரிய ஒருவன்
   (iii) உடனுக்குடன் எதிர்மொழி கூறுபவன் (iv) தனது இலக்கை ஈட்டுபவன் (.......)
7. சமஸ்கிருத நாடகத்தில் நாடக நாயகன் எப்பொழுதும்
   (i) தெய்வத்தின் வரவால் மீட்கப்படுகின்றவனாய் இருப்பான்.
   (ii) போர்க் குணம் கொண்ட காட்சிகளை எதிர்நோக்குகின்றவனாய் இருப்பான்.
   (iii) விதூஷகனின் உதவியைப் பெற்றுக்கொள்பவனாய் இருப்பான்.
   (iv) நாடக நாயகியோடு சம்பந்தப்பட்ட செய்கைகளிலே ஈடுபட்டவனாக இருப்பான். (.......)
8. சமஸ்கிருத நாடகம் ஒன்றின் கதைப்பின்னல் வளர்ந்து செல்வது
   (i) இரண்டு கட்டங்களில் (ii) மூன்று கட்டங்களில்
   (iii) நான்கு கட்டங்களில் (iv) ஐந்து கட்டங்களில் (.......)
9. ஜப்பானிய அரங்கில் "டைகோ" எனக் குறிப்பிடப்படுவது
   (i) மேடை அலங்காரம் (ii) ஒரு நடன அசைவு
   (iii) ஒரு வகை மேளம் (iv) ஒரு வகை வேடமுகம் (.......)
10. ஜப்பானிய பொம்மலாட்டத்தின் பெயர்
   (i) கபுக்கி (ii) நொஹ் (iii) ஜென்பொக்கு
   (iv) புன்ரக்கு (.......)
11. நாடகம் என்பது சூழமைவுகளை "போலச் செய்வதாகும்" எனும் கருத்து
   (i) தனஞ்செயனுடையது (ii) பரதமுனியினுடையது
   (iii) விஸ்வநாத்தினுடையது (iv) அரிஸ்ரோட்டிலினுடையது (.......)
12. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பொதுவியல் என்பது
   (i) அடிநிலை மக்கள் ஆடுவதைக் குறிப்பது
   (ii) அரசவையில் ஆடப்படுவதைக் குறிப்பது.
   (iii) சடங்கு நாடகங்களைக் குறிப்பது
   (iv) நடன மாதர் ஆடும் காமக்குறிப்பு ஆட்டங்களைக் குறிப்பது (.......)

☞ குறு விடைகள் தருக.

13. இலங்கையின் கூத்து வகைகளின் இரு மோடிகளைத் தருக.
   i). ....................................................................................
   ii). ....................................................................................

14. பெண்ணிலைவாத நாடகங்கள் இரண்டின் பெயர் தருக.
i). ..................................................................................
ii). ..................................................................................

15. ஷேக்ஸ்பியர் எழுதிய இரு வரலாற்று நாடகங்களின் பெயர்களைத் தருக.
i). ..................................................................................
ii). ..................................................................................

16. பண்டைய காலத்தில் நாடக கொள்கை விளக்கம் செய்த இரு பெரியார்களின் பெயர்களைத் தருக.
i). ..................................................................................
ii). ..................................................................................

17. தற்காலத்தில் பயன்படுத்தப்படும் இரு வேறு அரங்குகளின் பெயர்களைத் தருக.
i). ..................................................................................
ii). ..................................................................................

18. சமஸ்கிருத நாடக ஆசிரியர் இருவரின் பெயர்களைத் தருக.
i). ..................................................................................
ii). ..................................................................................

19. உலக நவீன அரங்கில் பெருமாற்றங்களை ஏற்படுத்திய இருவர் பெயர்களைத் தருக.
i). ..................................................................................
ii). ..................................................................................

20. பெற்ரோல்ட் பிரெஃட்கட் எழுதிய இரண்டு நாடகங்களின் பெயர்களைத் தருக.
i). ..................................................................................
ii). ..................................................................................



# நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)I

இரண்டு மணித்தியாலங்கள்

நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி ஆ

1. "நாடகம் என்பது ஒரு செய்கையின் போலச் செய்தல் வடிவமே" - இக்கூற்றினை உதாரணம் தந்து விளக்குக.
2. யாதேனும் ஒரு கிரேக்க திறஜெடியை எடுத்து அதில் மூன்றின் ஒருமை நிலை (3unities) காணப்படும் முறையினை விளக்குக.
3. இங்கிலாந்தின் மத்திய கால நாடக வகைகளுள் ஒன்றை விளக்குக.
4. எலிசபெத் காலத்தில் நாடகங்கள் அளிக்கப்பட்ட முறையினை விளக்குக.
5. பரதநாட்டிய ஆற்றுகை ஒன்றினை நாடகமாக கொள்ளலாமா? விளக்குக.
6. ஸ்டனிஸ் லோவ்ஸ்கியின் முறைமை (System) என்பது யாது? விளக்குக.
7. தெருவெளி அரங்கின் இயல்புகளை ஆராய்க.
8. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கினுக்குச் சிறு குறிப்பு எழுதுக.
   i. மத்தியகால நாடகங்களில் தொழிற் குழாம்கள் (guilds) பெற்ற இடம்
   ii. யூரிப்பிடிஸ்
   iii. ஸ்பெசல்முறை நாடகங்களில் பாடல்கள் வகிக்கும் இடம்
   iv. சாத்வீக பாவம்
   v. பம்மல் சம்பந்தமுதலியார்
   vi. என். எஸ். கிருஷ்ணன்
   vii. சமஸ்கிருத அரங்கில் பிரகஸனம்
   viii. கிரேக்க சட்ரா (Satyr) நாடகம்

# நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி அ

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா √ பிழையா x என்பதனைக் குறியிட்டுக் காட்டுக. (√சரிx பிழை)

1. தமிழ்நாட்டில் பார்சி நாடக மரபு ஹிந்துஸ்தானி இசையையே தளமாகக் கொண்டிருந்தது. (.......)
2. கோலம் நாடகத்தில் வேடமுகங்கள் இடம்பெறும். (.......)
3. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் லண்டனில் அரங்கேற்றப்பட்டன. (.......)
4. பண்டைய கிரேக்கத்தில் நாடகங்கள் அளிக்கை செய்யப்பெற்ற இடத்துக்கு "தியட்ரோன்" என்று பெயர். (.......)
5. வேலைக்காரி நாடகம் மு. கருணாநிதியால் எழுதப்பட்டது. (.......)

☞ பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.

6. துணிவுள்ள தாய் (Mother courage) என்ற நாடகம் முதலில் எழுதப்பட்டது.
   i. லூஇஜி பிரன்டலோ ii. ஹென்றிக் இப்சன்
   iii. பெட்ரோல்ட் பிரெஃக்ட் iv. அன்ரன் செக்கோவ் (.......)
7. செர்ரி பழத்தோட்டம் (Cherry Orchard) எனும் நாடகம் முதலில் எழுதப்பட்டது.
   i. ஃபிரெஞ்சு மொழியில் ii. ருஷ்ய மொழியில்
   iii. ஜெர்மன் மொழியில் iv. இத்தாலிய மொழியில் (.......)
8. வித்தியானந்தன் தயாரித்த இராவணேசன் என்பது
   i. மரபுவழித் தென்மோடிக் கூத்து ii. மரபுவழி வடமோடிக்கூத்து
   iii. மரபுவழி நொண்டி நாடகம் iv. புத்தாக்கக் கூத்து (.......)
9. ஞானசௌந்தரி ஒரு
   i. மரபுவழி கத்தோலிக்க நாடகம் ii. நவீன நாடகம்
   iii. நவீன கிறிஸ்தவ நாடகம் iv. மொழிபெயர்ப்பு நாடகம் (.......)
10. பூம்புலியூர் நாடகம் என்பது
   i. சங்கமருவிய காலத்து நாடகம் ii. பல்லவர் காலத்து நாடகம்
   iii. சோழர் காலத்து நாடகம் iv. விஜயநகர நாயக்கர் மன்னர் காலத்து நாடகம் (.......)



☞ ஒவ்வொரு பிரிவிலும் பொருத்தமற்ற ஒன்றின் பெயருள்ளது அதனைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

11. சங்ககாலத்தில் கூத்தர்களாக இருந்தோர்
   i. கோடியர் ii. வயிரியர்
   iii. கண்ணுளர் iv. பாணர் (.......)
12. மலையகத்தில் உள்ள நாடக வடிவங்கள்
   i. காமன் கூத்து ii. அர்ச்சுனன் தபசு
   iii. பொன்னர் சங்கர் கதை iv. அரிச்சந்திரா நாடகம் (.......)
13. இப்படத்தில் தரப்பட்டுள்ள வேடமுகம்
   i. பொம்மலாட்டத்திற்கு ii. கோலத்திற்கு
   iii. சன்னியக்குமவிற்கு iv. நாடகமவுக்கு உரியது (.......)



14. என்.வி. கிருஷ்ணாழ்வாருக்குப் புகழீட்டிய பாத்திரங்கள்
   i. கிருஷ்ணர் ii. கம்பர்
   iii. சுபத்திரை iv. கோவலன் (.......)
15. குழந்தை சண்முகலிங்கம் எழுதிய நாடகங்கள்
   i. தாயுமாய் நாயுமானார் ii. யார் கொலோ சதுரர்
   iii. அன்னை இட்ட தீ iv. அபஸ்வரம் (.......)

☞ குறுவிடை

13. சி.என். அண்ணாத்துரை எழுதிய நாடகங்கள் இரண்டின் பெயர் தருக.

i). ..............................................................................
ii). ..............................................................................

17. ஐரோப்பிய மையங்கள் என்று கூறத்தக்க நாடுகள் இரண்டின் பெயர் தருக.

i). ..............................................................................
ii). ..............................................................................

☞ கீறிட்ட இடங்களை நிரப்புக.

18. கண்ணாடி வார்ப்புகள் என்ற நாடகத்தைத் தமிழில் தயாரித்தவர் ..............................................................

19. சங்காரம் நாடகத்தை எழுதியவர் .......................................... ..............................................................................

20. தமிழில் நாடகத்தோடு இயைபுடைய யாப்பு .......................................... ..............................................................

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

ஒரு மணித்தியாலம்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் இரண்டு வினாக்களைத் தெரிந்தெடுத்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக

---

### பகுதி ஆ

### பிரிவு I

### உலக அரங்கு

1. ஈடிப்பஸ் நாடகத்தை ஒரு தலைசிறந்த திறஜெடி நாடகமாக்கும் அதன் அம்சங்கள் யாவை என்பதை விளக்குக.

2. ஒதெல்லோ நாடகத்தில் வரும் டெஸ்டிமோனாவினது அன்றேல் வெனிஸ் நகர வணிகனில் வரும் போர்ஷியாவினது பாத்திரத்தின் இயல்புகளை ஆராய்க.

3. செர்ரி பழத்தோட்ட நாடகத்திற் செக்கோவ் குறியீட்டினைப் பயன்படுத்தும் முறையை ஆராய்க.

4. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கினுக்குளச் சிறு குறிப்பு எழுதுக.

i) அனர்த்த நாடகம்



ii) புரொசீனிய அரங்கு

iii) பாதல் சர்க்கார்

iv) வெளிக் கொணர்கை (Catharsis)

v) காவிய அரங்கு

vi) சமஸ்கிருத அரங்கில் பிரஸ்தாபன

vii) அற்புதச் சுவை

viii) விபாவம்

### பிரிவு II

5. (i) மன்னார் பிரதேச கத்தோலிக்க நாடக மரபின் இயல்புகளை விளக்குக.

(ii) இம்மரபு யாழ்ப்பாணம், மட்டக்களப்பிலுள்ள கூத்து மரபுகளுடன் எவ்வாறு இணைகின்றது? வேறுபடுகின்றது?

6. கூத்து ஆட்டத்தில் காணப்படும் ஆட்ட வேறுபாடுகள் யாவை? விளக்குக.

அல்லது

கோலம சடங்கின் தோற்றம் சன்னி சடங்குகளில் உள்ளதா என்பதை ஆராய்க.

7. கலையரசு சொர்ணலிங்கத்தின் அரங்கினை பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் அரங்குடன் ஒப்பிட்டு ஆராய்க.

அல்லது

சொக்கரி ஆட்டம் எவ்வாறு ஒரு கருவளச் சடங்காக அமைந்தது என்பதை விளக்குக.

8. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்களின் பொதுப்பண்புகள் யாவை?

அல்லது

சிங்கபாகு நாடகத்தின் ஆடை அணி, ஒப்பனை என்பவற்றில் நாட்டார் வழக்கு நாடகங்களின் செலவாக்குப் பற்றி ஆராய்க.

9. இலங்கைத் தமிழ் நாடகத்தில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள சமூகப் பயன்பாட்டு மாற்றங்களை ஆராய்க.

அல்லது

அண்மைக்காலச் சிங்கள அரங்கில் பால்நிலை (gender) பிரச்சினைகள் இடம்பெற்றுள்ள முறையை ஆராய்க.

10. "இலங்கையில் அண்மைக்கால ஆங்கில நாடகங்கள் காத்திரமான சித்திரிப்புக்களிலும் பார்க்க மகிழ்நெறிப் பண்புகள் உடையன-வாகவே காணப்படுகின்றன. ஆராய்க.

# நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) III

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி அ

☞ பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதற்குரிய இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

1. ஒரு நாடகத்தின் விருப்பத்திற்குரிய சர்வாதிகாரி எனப்படுபவர்?
   i) தயாரிப்பாளர் ii) நாடக ஆசிரியர் iii) நாடக நெறியாளர்
   iv) மேடைமுகாமையாளர் (.......)

2. சொக்கறி நாடகம் நடப்பது
   i) வெளியில் ii) மேடையில்
   iii) களத்து மேடையில் iv) நாடக சபையில் (.......)

3. மேடையில் நடிப்பதற்கான பல்வேறு வலயங்கள் (zones) கீறப்படுவது
   i) யதார்த்த நாடக மரபிற்குரியது ii) தொல்சீர் நாடக மரபிற்குரியது
   iii) மரபுவழியானது iv) எக்காலத்திலும் காணப்படுவது
   (.......)

4. நாடகத் தயாரிப்பின் அதிமுக்கிய அம்சமாக இடம்பெறுவது
   i) உடல்வழி சித்திரிப்பு ii) இசைவழிச் சித்திரிப்பு
   iii) சொல்வழி சித்திரிப்பு iv) மேடை ஒளி அமைப்பு (.......)

5. ஆகார்ய அபிநயம் குறிப்பது
   i) மேடை அலங்காரத்தை ii) வகிபாக நடிப்பினை
   iii) ஆடை அணிகலன்களை iv) முகபாவத்தை (.......)

☞ பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற கூற்றைத் தெரிந்தெடுத்து அதற்குரிய இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

6. மேடை ஒளி அமைப்பின் பயன்பாடு
   i) காட்சியின் நேரத்தைக் காட்டல்



   ii) ஒரு மனநிலையைத் தோற்றுவித்தல்
   iii) மேடை அசைவுகளுக்கு முனைப்புக் கொடுத்தல்
   iv) நாடகத்தின் வகையைத் தெரியப்படுத்தல் (.......)

7. ஒரு நாடகத்திற் பயன்படுத்தப்படும் ஆடை அணிகலன்கள்
   i) பாத்திரத்தின் இயல்பை அறிமுகம் செய்தல் வேண்டும்
   ii) நாடக பாணிக்கு இயையுறுவதாக இருக்க வேண்டும்
   iii) நவநாகரீகமாய் இருத்தல் வேண்டும்
   iv) நாடகத்தின் காலத்தைப் பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும்
   (.......)

8. நல்ல நாடக விமர்சகர்
   i) பக்கச் சார்பு அற்றவராக ii) ஆக்கபூர்வமான கருத்துச் சொல்பவராக
   iii) பயமற்றவராக iv) இரக்கமற்றவராக (.......)

9. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் எலிசபெத் காலத்தில்
   i) காலையில் ii) மாலையில் iii) பிற்பகலில்
   iv) இரவில் நடைபெற்றன (.......)

10. சோழர் காலத்து கூத்தர்கள்
   i) கோவில்களில் இருந்தார்கள் ii) ஊருக்கு ஊர் செல்பவர்களாக இருந்தனர்.
   iii) அரசவையில் ஆடுபவர்களாக இருந்துள்ளனர்.
   iv) பொது மண்டபங்களில் ஆடுபவர்களாக இருந்தனர் (.......)

☞ குறுவிடை தருக.

11. மேடை முகாமையாளரின் பணிகள் இரண்டினைத் தருக.
   i). ......................................................................
   ii). ......................................................................

12. நெறியாளர், நடிகர் தேர்வில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சங்கள் இரண்டினைத் தருக.
   i). ......................................................................
   ii). ......................................................................

13. யதார்த்த அரங்கின் சாதகமான அம்சங்கள் இரண்டு தருக.
   i). ......................................................................
   ii). ......................................................................

14. மோடிமை நாடகங்களின் சாதகமான அம்சங்கள் இரண்டு தருக.
i). ..........................................................................
ii). ..........................................................................

15. எதிரிவீரசரத்சந்திர எழுதிய இரண்டு நாடகங்களின் பெயர் தருக.
i). ..........................................................................
ii). ..........................................................................

16. பார்லி முறை ஸ்பெசல் நாடகங்களில் முக்கியத்துவம் பெற்ற வாத்தியம் ............................ஆகும்.

17. நொண்டிநாடகத்தின் பிரதான கதாபாத்திரம் .................................. .................................. ஆக இருப்பான்.

18. ஒரு நாடகத்தில் வரும் பாடல்களின் பயன்பாடுகள் இரண்டு தருக.
i). ..........................................................................
ii). ..........................................................................

19. வித்தியானந்தன் பதிப்பித்த இரண்டு நாடகங்களின் பெயர் தருக.
i). ..........................................................................
ii). ..........................................................................

20. பிரயோக அரங்கின் (applied theatre) இரண்டு அம்சங்கள் தருக.
i). ..........................................................................
ii). ..........................................................................

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) III

ஒரு மணித்தியாலம்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிந்தெடுத்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக

---

### பகுதி ஆ

### பிரிவு I
### அரங்க நெறியாள்கை / தயாரிப்பு

1. கூத்து மரபில் அண்ணாவியார் பணிகள் யாவை?
2. நாடக எழுத்துரு என்பது ஆற்றுகைக்கான ஒரு சட்டகமே ஆராய்க.
3. ஒரு நாடகவாக்கத்தில் நெறியாளர் வகிக்கும் இடத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.



### பிரிவு II
### நடிப்பு

4. நடிகர் ஒருவர், தனக்குத் தரப்படும் வகிபாகத்தை (role) சித்திரிப்பதற்குத் தன்னை எவ்வாறு தயார் செய்து கொள்வார்? விளக்குக.
5. "ஒரு நடிகரின் பிரதான வளம் அவரது உடலே" இக் கருத்தினை நீர் ஏற்றுக்கொள்வீரா? விளக்குக.
6. மூடிய கட்டட அரங்கிலும் பார்க்க திறந்தவெளி அரங்கு பார்ப்போர், நடிகர் ஊடாட்டத்திற்குப் பெரிதும் உதவுகிறது. விளக்குக.

### பிரிவு III

அரங்க அணிகள் (ஆடைஅணி, ஒப்பனை, இசை, காட்சியமைப்பு, ஒளியூட்டு)

7. ஷைலொக் (Shyloc) பாத்திரத்திற்கான ஆடை, அணி எவ்வாறு இருக்க வேண்டுமென விளக்குக.
8. ஒரு நாடக எழுத்துருவுக்கான ஒளியமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை ஆராய்க.
9. ஒரு மேடை நாடகத்தில் ஒப்பனை பெறும் இடத்தினையும் அது செய்யப்படுவதற்கான தொழினுட்ப அம்சங்களையும் விளக்குக.

### பிரிவு IV
### நாடக விமர்சனம் நயத்தல்

10. ஒரு ஆற்றுகையின் வெற்றி - தோல்வி பார்ப்போரின் பதிற்குறிகொண்டே (response) தீர்மானிக்கப்படும். இக்கூற்றினை மதிப்பிடுக.
11. நாடகத்தின் அழகியல் அம்சங்கள் யாவை?
12. விமர்சனம் இல்லாமல் நல்ல நாடகம் தோன்ற முடியாது இக்கூற்றை ஏற்றுக்கொள்வீரா? விளக்குக.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்)பரீட்சை 2004 ஒகஸ்ற் (புதிய பாடத்திட்டம்)

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)I

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக. பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி அ

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா √ பிழையா x என்பதனைக் குறியிட்டுக் காட்டுக. (√சரி x பிழை)

1. அபிநயம் என்பது எழுத்துருவுக்கு உரியதன்று. தயாரிப்பு நிலையிலேயே இடம் பெறுவதாகும். (.......)
2. ஊமச் சித்திரிப்பில் வாசிகாபிநயம் முக்கிய இடம்பெறும் (.......)
3. ஆடை, அணி அலங்காரத்துக்கே உரியன. (.......)
4. நாட்டிய சாத்திரத்திற் பரதர் எட்டு ரசங்களைக் குறிப்பிட்டுள்ளார். (.......)

☞ சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறியினுள் எழுதுக.

5. ஆற்றுகைக் கலை அல்லாதது ஒன்று
   1) இசை ஆகும் 2) சிற்பம் 3) நடனம்
   4) ஒப்பேறா ஆகும் (.......)
6. நடிப்பிலும் பார்க்க பாடுதல் முக்கியம் பெறுவது
   1) பலேயில் 2) நாட்டிய நாடகத்தில் 3) ஒப்பேறாவில்
   4) கூத்தில் ஆகும் (.......)



7. நாட்டிய நாடகமாக அமைவது
   1) குற்றாலக் குறவஞ்சி 2) நந்தனார் சரித்திரக் கீர்த்தனை
   3) மூவிராசாக்கள் நாடகம் 4) வேலைக்காரி ஆகும் (.......)
8. இசை முக்கியத்துவம் பெறாத ஆற்றுகை
   1) நடனம் 2) யதார்த்த நாடகம் 3) பலே
   4) நாட்டிய நாடகம் ஆகும் (.......)
9. "கதாஸிஸ்" எண்ணக்கரு மேற்கிளம்புவது
   1) சமஸ்கிருத அரங்கிலிருந்து 2) கிரேக்க அரங்கிலிருந்து
   3) சேக்ஸ்பியர் அரங்கிலிருந்து 4) அறநெறி நாடகங்களிலிருந்து (.......)
10. கலைகள் யாவற்றிற்கும் அடித்தளமாக அமைவது "போலச்செய்தல்" என்னும் கருத்தேயாகும் என்பதை முதலில் எடுத்துக் கூறியவர்
    1) பரதர் 2) தனஞ்செயன் 3) அரிஸ்ரோற்றில்
    4) ஸ்ரனிஸ்லாவ்ஸ்கி ஆவர் (.......)
11. அபிநயம் என்பதன் கருத்து
    1) போலச்செய்தல்
    2) எழுத்துருவில் உள்ளதைப் பார்வையாளரிடத்துக் கொண்டு செல்லலாகும்
    3) ஊமம் செய்தலாகும் 4) வகிபாகம் தாங்குதலாகும் (.......)
12. கூத்திலே தாளக்கட்டு குறிப்பது
    1) பாடலின் லயத்தை 2) ஆட்டத்தின் கட்டுக்கோப்பை
    3) தாளங்களின் சேர்க்கையை 4) ஆவர்த்தனத்தை (.......)
13. நவீன யதார்த்த அரங்கின் முன்னோடியாக விளங்குபவர்
    1) வில்லியம் சேக்ஸ்பியர் 2) அன்ரன் செக்கோப்
    3) இயனஸ்கோ 4) ஹென்றிக் இப்ஸன் (.......)

☞ கீழ்க்காணும் விடைகளுள்ளே பொருத்தமற்றதைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

14. நாடகம் என்பது இன்றுள்ள நிலையில்
    1) கட்புலக் கலைவடிவமாகவும் அமையும்
    2) கட்புல, செவிப்புலக் கலைவடிவமாகவும் அமையும்
    3) செவிப்புலக் கலைவடிவமாகவும் அமையும்
    4) ஆட்ட வடிவமாகவும் அமையும் (.......)

15. கிரேக்க திறஜெடி நாடகத்தின் கதாநாயகன்

1) விதியால் துரத்தப்படுபவனாக அமைவான்

2) எல்லாத் தீய குணங்களையும் உடையவனாக அமைவான்

3) உயர் பண்பின் இருப்பினும் தவறு ஒன்றினை இழைத்தவனாக இருப்பான்.

4) குடும்பத்தின் மீதுள்ள ஒரு சாபத்திற்கு பலியாகின்றவனாக அமைவான். (.......)

☞ சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

16. வலப்புறப் படத்திலுள்ள காட்சியானது



1) நாடகத்துக்கு உரியதாகும்.

2) பலேக்கு உரியதாகும்.

3) ஒப்பேறாவுக்கு உரியதாகும்.

4) ஊமத்துக்கு உரியதாகும். (.......)

17. தேசி நாடக மரபென்பது இந்தியாவில்

1) பிரதேசங்களுக்குரிய நாடகங்களைக் குறிக்கும்

2) சமஸ்கிருத அரங்குக்குரிய நாடகங்களைக் குறிக்கும்

3) பாடல் மரபுக்குரிய நாடகங்களைக் குறிக்கும்

4) நகைச்சுவை மரபுக்குரிய நாடகங்களைக் குறிக்கும் (.......)

☞ கீறிட்ட இடங்களை நிரப்புக.

18. சற்றர் என்பது ...................................................... நாடக வகைகளில் ஒன்று.

19. வலது புறத்திலுள்ள படம் கிரேக்க .......................................... வகையைச் சார்ந்தது.



20. பின்வரும் அரங்க மரபுகளைக் காலவரிசைப்படுத்தி எழுதுக. உரோமன் அரங்கு, எலிசபெத் அரங்கு, சமஸ்கிருத அரங்கு, கிரேக்க அரங்கு

1). ..........................................................................................

2). ..........................................................................................

3). ..........................................................................................

4). ..........................................................................................



# நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)I

இரண்டு மணித்தியாலங்கள்

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

## பகுதி ஆ

1. நாடக எழுத்துரு ஒன்று நாவல் இலக்கிய வடிவத்தினின்றும் வேறுபடும் முறையினை விளக்குக.

2. நிருத்த, நிருத்திய, நாட்டிய என்பவற்றுக்கான வரைவிலக்கணங்களைக் கூறி அவற்றின் பொதுப்படையான அதேவேளையில் தனித்துவமான இயல்புகளை விளக்குக.

3. சமஸ்கிருத நாடகமொன்றிலும் கிரேக்க திறஜெடி ஒன்றிலும் நாடகக் கதைப்பின்னல் வளர்த்தெடுக்கப்படும் முறைமையினை ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஆராய்க.

4. நாடக வழக்கு என்பது யாது? "யதார்த்த" நாடகங்கள்கூட நாடக வழக்குக்குக் கட்டுப்பட்டவையே -ஆராய்க.

5. கிரேக்க திறஜெடி ஒன்றினை எடுத்து அதில் கதைப்பின்னல், பாத்திரம், சொற்றிறன், சிந்தனை, பெருங்காட்சி, பாடல் ஆகிய ஆறு அம்சங்களும் எத்தகைய இடத்தினைப் பெறுகின்றன என்பதை விளக்குக.

6. பேற்றொல்த் பிறெஃற்றின் காப்பிய அரங்கு என்பது யாது? அது பார்ப்பவரிடத்தே ஏற்படுத்தும் தாக்கத்தின் தன்மைகளை அவ்வரங்குக்குரிய யாதேனுமொரு நாடகத்தினை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

7. நாடகவாக்க வடிவமொன்று எனும் வகையில் கூத்தின் நாடகவியற் பண்புகள் யாவையென நீர் கருதுகின்றீர்?

8. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(1) மூன்று "ஒருமைகள்"

(2) குரூர அரங்கு (Theatre of Cruelty)

(3) ஸ்தாயி பாவம்

(4) அறநெறி அரங்கு

(5) கபுக்கி அரங்கு

(6) பீக்கிங் ஒப்பேறாவின் ஆற்றுகை முறை

(7) கட்டியக்காரனின் நாடகநிலை முக்கியத்துவம்

# நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி இ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி அ

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா (√) பிழையா(X) என்பதை அடைப்புக் குறியினுள்யிட்டுக் காட்டுக. (√சரி X பிழை)

1. "குளுத்தி" என்பது கண்ணகி அம்மன் வழிபாட்டில் வருவது. (.......)
2. "கழுவேறி" என வரும் குறிப்பு காத்தவராயனைக் குறிப்பது. (.......)
3. "சொக்கரி" ஆற்றுகை ஒரு வேண்டுதற் சடங்காகும். (.......)
4. கிறிஸ்துவின் பாடுகள் பெரிய வெள்ளிக்கிழமை அன்று நடைபெறுவதாகும். (.......)
5. கோடியர், வைரியர் என்ற பதங்கள் ஒரே வகைக் கூத்தினரையே குறிக்கும். (.......)

☞ சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

6. கிரேக்க மகிழ்நெறி நாடகத்தில் வரும் பாடுநர் குழாம்
(1) நாடகக் கதை மாந்தரின் உறவினரைக் கொண்டிருக்கும்.
(2) மிருக, பட்சி குழாங்களைக் கொண்டிருக்கும்.
(3) சற்றர்களைக் கொண்டிருக்கும்.
(4) முற்றிலும் பெண்களைக் கொண்டிருக்கும். (.......)

7. இந்திர விழாவின்போது மாதவி ஆடியது
(1) பதினொரு ஆடல்கள் (2) கானல் வரி
(3) பிந்திய மகிழ்நெறியை (4) சற்றரை (.......)

8. மெனாண்டரின் நாடகங்கள் எவ்வகையைச் சார்ந்தவை?
(1) பழைய மகிழ்நெறியை (2) மத்திய மகிழ்நெறியை



(3) பிந்திய மகிழ்நெறியை (4) கிரேக்க மகிழ்நெறி நாடகத்தில் (.......)

9. கியோஜன் என்னும் நகைச்சுவை இடையீடு வருவது
(1) கபுக்கி அரங்கில் (2) புன்றக்கு அரங்கில்
(3) நோஹ் அரங்கில் (4) கிரேக்க மகிழ்நெறி நாடகத்தில் (.......)

10. முறைமை எனப்படும் நடிப்பியல் முறையைத் தோற்றுவித்தவர்
(1) பேற்றோல் பிறெஃற் (2) அன்ரன் செக்கோப்
(3) ஸ்ரனிவ்ஸ்லோஸ்கி (4) றயின்காரட் (.......)

11. படத்தில் தரப்பட்டுள்ள எலிசபெத் நாடகசாலை
(1) குளோப்(Globe) தியேட்டர் (2) ஹோப் (Hope) தியேட்டர்
(3) ஸ்வான் (Swan) தியேட்டர்
(4) போர்லூன் (Forlune) தியேட்டர் (.......)



12. பார்ஸி மரபு வழியில் வரும் நூர்த்தி என்னும் சிங்கள மரபின் பிரதான நாடகாசிரியர்
(1) முகைதீன் (2) ஜோன் டீ சில்வா
(3) சரத்சந்திர (4) லனறோல் (.......)

☞ இடைவெளி நிரப்புக.

13. பிரஹசன என்பது ........................................................... உப நாடக வகைகளில் ஒன்று.
14. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கட்டப்பெற்றது பற்றிய நாடகத்தின் பெயர் ........................................................... ஆகும்.
15. "கோடோவுக்காகக் காத்திருத்தல்" என்பது (Waiting for Godot) ....................................நாடக வகையைச் சார்ந்தது.

☞ குறுவிடைகள் தருக.

16. விஜயநகர நாயக்கர் காலத்தில் அடிநிலை மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு கோவில்களில் ஆடப்பெற்ற இரு வகை நாடகங்களின் பெயர்களையும் தருக.
1. ...........................................................................................
2 ...........................................................................................

17. ஷேக்ஸ்பியர் நாடகங்களுள் வரலாறு பற்றியனவாகக் கொள்ளப்படும் நாடகங்களின் பெயர்கள் இரண்டினைத் தருக.

1. ..........................................................................................
2 ..........................................................................................

18. காமன் கூத்தில் வரும் பிரதான ஆண் பாத்திரங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

1. ..........................................................................................
2 ..........................................................................................

19. மன்னார் கூத்துமுறையின் இரு வகை மரபுகளின் பெயர்களைத் தருக.

1. ..........................................................................................
2 ..........................................................................................

20. இலங்கைத் தமிழ்நாடக அரங்கில் பெரிதும் பேசப்பட்ட அரசியல் நாடகங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

1. ..........................................................................................
2 ..........................................................................................

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

இரண்டு மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் இரண்டு வினாக்களைத் தெரிந்தெடுத்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி ஆ

### பிரிவு I

### உலக அரங்கு

1. ஒரு நாடக அமைப்பினுள் அந்நாடகக் கதை நடைபெறும் காலமும் (time) அது நடைபெறும் இடமும்/ வெளிகளும் (Place/Space) அந்த நாடகத்தினுள் அமைத்துக் கொள்ளப்படும் முறைமையில் ஓர் ஒழுங்கு முறை இருக்கும். ஈடிபஸ், ரத்னாவலி ஆகிய இரு நாடகங்களிலும் காலமும் வெளியும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள முறைமையினை விளக்குக.



2. பொம்மை வீட்டுக் (Dolls House) கதாநாயகி நோரா இறுதியில் தன் இல்லத்தை விட்டு வெளியேறுகிறாள். இப்ஸன் தரும் இந்த முடிவு நியாயமானதா? உமது கருத்தினைத் தெளிவுற எடுத்துக்கூறுக.

3. "நவீன யதார்த்த வகை நாடகங்களின் உருவாக்கம், வளர்ச்சி என்பவற்றில் இப்ஸனின் பொம்மை வீடும் (Dolls House) செக்கோவேன் செரித்தோட்டமும் (The Cherry Orchard) பெருந்தாக்கத்தை ஏற்படுத்தினவென்று அறிஞர், பலர் கூறுவர்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை இயன்ற அளவு விளக்கமாக ஆராய்க.

4. பாத்திரவாக்கத்தில் ஷேக்ஸ்பியருக்கு உள்ள திறனை மேர்ச்சன்ட் ஒவ் வெனிஸில் (வெனிஸ் நகர வணிகனில்) வரும் சைலொக் என்ற பாத்திரத்தையும் ஒதெல்லோ நாடகத்தில் வரும் ஒதெல்லோவின் பாத்திரத்தையும் ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

### பிரிவு II

### இலங்கை அரங்கு

5. இலங்கையின் வடக்குக் கிழக்கில் காணப்படும் கூத்து மரபை தமிழகத்து தெருக்கூத்து மரபுடன் ஒப்பிடுக.

6. நவீன தமிழ் நாடகம் தமிழகத்தில் சினிமாவோடு ஊடாட்டம் உள்ளதாக இருந்து வந்துள்ளது. ஆனால் இலங்கையின் நவீன தமிழ் நாடகம் வேறுபட்ட முறையிலேயே வளர்ந்துள்ளது. 1930-1980 வரையுள்ள காலப்பகுதியை ஆதாரமாகக் கொண்டு இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

7. பேராசிரியர் சரத்சந்திர நவீன சிங்கள அரங்க வளர்ச்சியில் பெறும் இடத்தினை மதிப்பிடுக.

8. 1980 தொடக்கம் 2000 வரையுள்ள ஈழத்துத் தமிழ் அரங்கின் பிரதான அம்சங்களை எடுத்துக்கூறுக.

9. "பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(1) பேராசிரியர் ஓூடோ வைக்கின் அரங்கச் செயற்பாடுகள்

(2) கூத்து நவீனமயவாக்கத்தில் அண்ணாவியார் செல்லையாவின் இடம்

(3) பார்ஸி வழி அரங்கில் மேடைக்காட்சியமைப்பு

(4) பிரயோக அரங்கின் (applied theatre) அத்தியாவசியம்

(5) தமிழில் வானொலி நாடகங்கள்

(6) சிறுவர் அரங்கு

# நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) III

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி அ

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியா (√) பிழையா (X) என்பதை அடைப்புக் குறியினுள் குறியிட்டுக் காட்டுக. (√சரி X பிழை)

1. மேடை நடிகர் வலுவுள்ள குரலுடையவராக இருத்தல் வேண்டும். (.......)
2. கூத்து மரபில் இறுதி ஒத்திகையை வெள்ளோட்டம் என்பர். (.......)
3. மேடை முகாமையாளரே காட்சி விதானிப்புக்குப் பொறுப்பாக இருப்பர். (.......)
4. நாடக ஆற்றுகை ஒன்றின் போது நடிகர்கள் கொண்டு செல்லும் பொருட்கள் மேடைப் பொருட்கள் எனப்படும். (.......)
5. கூத்தில் காற் சலங்கையை ஆடை அணியின் ஒரு பகுதியாகவே கொள்ளல் வேண்டும். (.......)

☞ சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

6. பண்டைய கிரேக்க நாடக ஆற்றுகைக்கு அத்தியாவசியமானது
   (1) வேட முகமாகும். (2) ஒப்பனை ஆகும்.
   (3) மேடை ஒளி ஆகும். (4) ஆடை அணிகள் ஆகும். (.......)
7. பிறெஃற்றின் வெண்கட்டி வட்ட நாடகத்துக்கான விடயப்பொருள் எடுக்கப்பெற்றது.
   (1) சமஸ்கிருத நாடகத்திலிருந்து (2) மகாபாரத கதையிலிருந்து
   (3) சீன நாட்டார் கதையிலிருந்து (4) நோஹ் நாடகத்திலிருந்து (.......)
8. ஒன்ன கட்டா குறிப்பது.
   (1) கபுக்கி அரங்கில் வரும் பெண்களை
   (2) கபுக்கி அரங்கில் ஆண் வேடம் தாங்கும் பெண்களை



   (3) கபுக்கி அரங்கில் பெண் வேடம் தாங்கும் ஆண்களை
   (4) கியோஜினில் வரும் நகைச்சுவைப் பாத்திரத்தை (.......)

☞ பின்வருவனவற்றுள் பொருத்தமற்றதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறியினுள் எழுதுக.

9. கூத்து என்னும் எண்ணக் கருவினுள் வருவது
   (1) நடனம் (2) கதைப்பின்னல் (3) ஆட்டம்
   (4) நாடகம் (.......)
10. அரங்கப் பாடலுக்கான அத்தியாவசிய இயல்புகள்
   (1) நடிகர்களால் சுலபமாகப் பாடப்படத்தக்கனவாக இருத்தலாகும்.
   (2) சிக்கலான மெட்டு இல்லாதிருத்தலாகும்.
   (3) நடிப்போடு இயைந்து செல்வதாக இருத்தலாகும்.
   (4) புலமைக் கருத்துக்கள் உடையதாக இருத்தலாகும். (.......)
11. நல்ல மேடை நாடகத்தின் இயல்புகளெனக் கொள்ளப்படத்தக்கவை
   (1) நாடகச் செறிவு பற்றிய பெருஞ்சிரத்தையின்மை
   (2) பார்ப்பவர் கவனத்தை ஈர்க்கும் திறன்
   (3) பார்ப்போரிடையே ரச உணர்வை ஏற்படுத்துதல்
   (4) நாடகத்தில் வரும் சொல்லாடல் பார்ப்போர் யாவருக்கும் தெளிவாகக் கேட்டல் (.......)

☞ இடை வெளிகளை நிரப்புக.

12. நாடக நெறியாளன் தயாரிக்கவிருக்கும் நாடகம் பற்றிய தீர்மானத்தை எடுத்த பின்னர் .......................... தேர்வினைச் செய்வார்.
13. நாடக ஆற்றுகை இடத்தை ......................................... என்பர்.
14. "மண்சுமந்த மேனியர்" நாடகத்துக்கான இசையை ......................... ................. அமைத்தார்.
15. மோடிமை நாடகத்தின் பிரதான அம்சம் மேடையில் ........................................... இல்லாதிருப்பது தான்.
16. மேடை நாடகமொன்றினை பொது இடமொன்றில் மேடையேற்ற வேண்டுமெனில் அதற்கு .............................. சபையினது முன் அனுமதியிருத்தல் வேண்டும்.
17. வலது புறத்திலுள்ள படம் ....................................... விளக்காகும்.



☞ சரியான விடையை தெரிவு செய்த அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

18. வலது புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஹஸ்தம்



(1) பதாக ஹஸ்தம்
(2) திரிபதாக ஹஸ்தம்
(3) சம்யுக்த ஹஸ்தம்
(4) சிகர ஹஸ்தம்

19. வலது புறத்தில் உள்ள படம் குறிப்பது



(1) யக்ஷகானத்தை
(2) மணிப்புரியை
(3) பாகவத மேளாவை
(4) கதகளியை

20. வலது புறத்தில் உள்ள வாத்தியம்



(1) ஹார்மோனியம்
(2) ஹர்மோனிகா
(3) பியானோ
(4) சுருதிப்பெட்டி

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)III

இரண்டு மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒவ்வொரு வினாக்களைத் தெரிந்தெடுத்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி ஆ

### பிரிவு I

அரங்க நெறியாள்கை தயாரிப்பு

1. நாடகத் தயாரிப்பாளரை நாடக நெறியாளரிலிருந்து எவ்வாறு வேறுபடுத்துவீரென்பதை எடுத்துக் கூறி தயாரிப்பாளரின் பணிகளை விளக்குக.



2. ஒரு நாடகத்துக்கு உடுப்பு ஒத்திகை (Dress rehearsal) ஏன் அவசியமாகின்றது? விளக்குக

### பிரிவு II

### நடிப்பு

3. வெற்றிகரமான நடிகர் ஒருவரிடத்து இருக்கக் கூடிய திறன்களும் குணவியல்புகளும் யாவை? விளக்குக.

4. ஒரு நாடகம் "வெற்றியுறுவதற்கு நடிகர்கள் பார்ப்போரிடம் ஏற்படுத்தும் ஒன்றல் உணர்வு (rapport) அச்சாணியாகும்". கருத்துக் கூறுக.

### பிரிவு III

மேடை முகாமை, ஆடை அணி, ஒப்பனை, இசை, காட்சியமைப்பு, ஒளியூட்டு ஆகியன

5. மேடை நாடகத்துக்கான இசையை அமைக்கின்ற பொழுது இசையமைப்பாளர் தம் கவனத்திற் கொள்ள வேண்டியவை யாவை? விளக்குக.

6. மேடை முகாமையாளர் ஒருவரின் கடமைகளையும் செயற்பாடு களையும் விளக்குக.

அல்லது

"ஏழு நாடகங்களில்" வரும் யாதேனும் ஒரு நாடகத்தை தெரிந்தெடுத்து அதற்கான ஆடை அணிகளை வடிவமைத்துத் தருக. (சித்திர விளக்கத்துக்கு அதிக புள்ளி வழங்கப்படும்.)

### பிரிவு IV

நாடக ரசனை, நாடக விமர்சனம்

7. "பண்பாட்டுக்குப் பண்பாடு நாடகங்கள் வேறுபடினும் அவற்றிடையே பொதுவான கலை இயல்புகள் காணப்படும்" பாடத்திட்டத்திற் தரப்பட்டுள்ள நாடகங்களைக் கருத்திற் கொண்டு இக்கூற்றினை விளக்குக.

8. நாடக விமர்சகர் ஒருவருக்கு இருக்கவேண்டிய பண்புகள் யாவை? விளக்குக.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சை 2005 ஏப்ரல் (புதிய பாடத்திட்டம்)

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) I

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி அ

☞ பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்புக் குறிக்குள் அடையாளமிடுக.

1. பாவம் (bhava) புலப்படும் நிருத்தம் இல்லாத ஆற்றுகை இல்லை. (.......)
2. பண்டைய கிரேக்க நாடகத்தில் சாத்விக அபிநயம் முக்கியம் பெற்றிருந்தது. (.......)
3. பலே நடனத்திற்கு இசை மிக அவசியமானதாகும். (.......)
4. சமஸ்கிருத நாடக மரபில் கதைப்பின்னலுக்கான பதம் பிரசாங்கிக என்பதாகும். (.......)
5. நோ (NOH) எனப்படும் நாடக மரபு நாட்டிய தர்மிக்குரியது. (.......)

☞ சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் இடுக.

6. கிரேக்க திறெஜடியில் முதலாவது நாடக ஆசிரியர்
   (1) அரிஸ்ரோபேன்ஸ் (2) ஈஸ்கிலிஸ் (3) யூறிப்பிடிஸ்
   (4) சோபோகிரிஸ் (.......)



7. அபிநயம் என்னும் எண்ணக்கரு எந்த நாடக மரபிற்குரியது?
   (1) இந்திய (2) சீன (3) கிரேக்க
   (4) யப்பானிய (.......)
8. பார்த்துக்கொண்டிருப்பது ஒரு நாடகமே என்பதை அடிக்கடி நினைவுபடுத்தும் அரங்க மரபு
   (1) நோ (2) கிரேக்கம் (3) ரோம்
   (4) சமஸ்கிருதம் (.......)
9. அன்னத்தடாகம் (swan lake) எனப்படும் ஆற்றுகை
   (1) ஒப்பேறா (2) இசைநாடக (3) நாட்டிய நாடக
   (4) பலே (.......)
10. ஹாஸ்ய உணர்ச்சி மிகையான நாடகவகை
   (1) பிரகசனம் (2) மகாநாடகம் (3) பிரகரணம்
   (4) திறஜெடி (.......)
11. நாடக ஆசிரியரின் உணர்வினைப் பார்வையாளருடன் தொடர்பு படுத்துவதில் பிரதானமானவர்
   (1) நடிகர் (2) நெறியாளர் (3) தயாரிப்பாளர்
   (4) எடுத்துச்சொல்லி (.......)
12. கலையிலிருந்து மனிதன் பெற்றுக் கொள்வது
   (1) மனித சுபாவங்களை அறிதல் (2) இயற்கையை இரசித்தல்
   (3) இரசனையைப் பெறுதல் (4) மகிழ்ச்சியைப் பெறுதல் (.......)
13. கிரேக்க திறஜெடியின் கதைச் சூழ்வின் பிரதான அம்சம்
   (1) பின்னோக்கு (2) மாற்றமுடியா விதி (3) கவலை
   (4) பாடல் (.......)
14. சற்றர் நாடகம் என்பது பிரதானமாக
   (1) மகிழ்நெறிப் பண்பு ஆகும். (2) அவலச்சுவைப் பண்பு ஆகும்.
   (3) கவலை தரும் பண்பு ஆகும்.
   (4) கேலியும் கிண்டலும் கொண்ட பண்பு ஆகும். (.......)
15. பெண்கள் பாத்திரத்தைப் பெண்களே தாங்கி நடிக்கும் நாடக மரபு
   (1) யப்பான் (2) சீனா (3) சமஸ்கிருதம்
   (4) ரோம் (.......)
16. பின்வருவனவற்றுள் கால வரிசையைத் திருத்தமாகக் காட்டுவது.
   (1) தனஞ்செயன், ஸ்ரனிஸ்லவஸ்கி, பரதமுனி, அரிஸ்ரோட்டல்

(2) அரிஸ்ரோட்டல், பரதமுனி, ஸ்ரனிஸ்லவஸ்கி, தனஞ்செயன்
(3) பரதமுனி, தனஞ்செயன், அரிஸ்ரோட்டல், ஸ்ரனிஸ்லவஸ்கி
(4) ஸ்ரனிஸ்லவஸ்கி, பரதமுனி, தனஞ்செயன், அரிஸ்ரோட்டல் (.......)

17. அபத்த நாடகத்துடன் தொடர்புடையவர்
(1) ரெனசி வில்லியம்ஸ் (2) மேய கோல்ட்
(3) ஆதர் மில்லர் (4) இயனஸ்கோ (.......)

18. சேக்ஸ்பியரின் நாடகத்தில் பிரதானமான செல்வாக்குச் சக்தி எனக் கொள்ளக்கூடியது
(1) கிரேக்கம் (2) பிரெஃட் (3) ரோம்
(4) அரிஸ்ரோட்டல் (.......)

19. யப்பானிய சமூக வாழ்க்கையோடு தொடர்புடைய நாடக வகை
(1) கோவாகா (2) புன்ரகு (3) நோ (4) ஒப்றோ (.......)

20. ஹமாசிய என்பது
(1) பாவை நாடகம் (2) நாடக சம்பவம்
(3) சமஸ்கிருத நாடகம் (4) கபுக்கி (.......)

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)I

இரண்டு மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

---

### பகுதி ஆ

1. "நாடகம் என்பது போலச் செய்தல் என்றாலும் வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே காட்டி விடமுடியாது" விளக்குக.
2. "கிரேக்க திறஜெடியின் சிறப்பு பார்ப்பவரிடையே கழிவிரக்கத்தையும் பீதியையும் வெளிக்கொணர்வதிலேயே தங்கியுள்ளது." ஆராய்க.
3. (i) இயல்பு நெறிவாதம் என்பது யாது?
(ii) இது அரங்கில் வெற்றி பெறாது போனமைக்கான காரணங்கள் யாவை?
4. (i) "தொலைப்படுத்தல்" என்பது யாது?
(ii) பேட்டோடல்ற் பிறெஃற் (Bertolt Brecht) தனது காவிய அரங்கில் எவ்வாறு இதனைச் சித்திரித்துள்ளார். என்பதை விளக்குக.
5. மேல்நாட்டுப் பண்பாட்டினூடாகத் தோன்றிய"அபத்த அரங்கக் கோட்பாடு" இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளின் பண்பாட்டுக்கு இயைந்ததா? காரணங்கள் காட்டி விளக்குக.
6. (i) நாடகத்தின் "மோடி" (style) என்பது யாது?
(ii) அது எவ்வெக் காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது?
7. ஸ்ரனிஸ்லவஸ்கியின் (Stanislavsky) நாடக முறைமைக் கோட்பாட்டினை விளக்குக.
8. பின்வருவனவற்றுள் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
(i) பூர்வரங்க (ii) கிஜோஜன் (iii) கருணாரசம்
(iv) நாட்டியதர்மி (v) அரங்கவிதானம் (vi) பலே
(vii) அரிஸ்ரோட்டல் (viii) நாடிகா



## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)II

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி அ

☞ பின்வரும் கூற்றுகள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (x) எனவும் அடைப்புக் குறியினுள் அடையாளமிடுக.

1. கிரேக்க டித்திறாம் (dythramb) பாடல்களை அழகான பெண்கள் பாடினர் (.......)
2. சமஸ்கிருத நாடகத்துப் பார்வையாளர் நாடகத்தை மண்டபத்தில் நேரே இருந்து பார்ப்பர் (.......)
3. "உடக்கு பாஸ்" என்பது மட்டக்களப்புக்குரியதாகும். (.......)
4. ஒகினா (Okina) எனப்படும் பாத்திரம் கபுக்கியில் வருவது(.......)
5. சரஸ்வதி சபா மட்டக்களப்பில் இருந்த நாடகக் கம்பனியாகும். (.......)

☛ சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் இடுக.

6. சமஸ்கிருத நாடகத்தின் பிரதான நாடக வகைகள்
(1) 4 (2) 8 (3) 9 (4) 10 (.......)

7. பின்வரும் நாடக மரபில் கிறிஸ்தவம் சாரா நாடகம்
(1) எஸ்தாக்கியர் (2) கண்டியரசன்
(3) என்றிக் எம்பரதோர் (4) ஞானசௌந்தரி (.......)

8. சொக்கறி நாடகத்தோடு சமமாக வைத்துப் பேசத்தக்க தமிழ்நாடக வகை
(1) வடமோடி (2) மகிடி (3) தென்மோடி
(4) வசந்தன் (.......)

9. பின்வருவோரில் நாடக ஆசிரியர் அல்லாதவர்
(1) பேனாட்ஷா (2) இப்சன்
(3) அன்ரன் செக்கோவ் (4) பிறெஃ்ற் (.......)

10. பின்வருவனவற்றுள் இலங்கையில் எழுதப்படாதது.
(1) Fifty Fifty (2) A Fortress in the sky
(3) Senator (4) Arms and the man (.......)

☛ பொருத்தமற்றதைத் தெரிவு செய்க

11. (1) அபத்த அரங்கு (2) சற்றர் (3) திறஜெடி
(4) கொமடி (.......)

12. (1) மண்சுமந்த மேனியர் (2) ஆர்கொலோ சதுரர்
(3) வேள்வித் தீ (4) விழிப்பு (.......)

13. தட்ட சன்னிய என்பது
(1) பொழுது போக்குச் சடங்கு (2) கழிப்புச் சடங்கு
(3) கருவளச் சடங்கு (4) மழை வேண்டிச் செய்யும் சடங்கு (.......)

14. நா. சுந்தரலிங்கத்தின் நெறியாள்கைக்கு உட்படாத நாடகம்
(1) அபசுரம் (2) விழிப்பு (3) செவ்விளக்கு
(4) இருதுயரங்கள் (.......)



15. யாழ்ப்பாணத்துக்குரிய பிரதான நாடக வடிவம்
(1) வடமோடி (2) தென்மோடி
(3) காத்தவராயன் கூத்து (4) காமன் கூத்து (.......)

16. பெண்கள் பாத்திரத்தை நடித்துப் புகழ்பெற்ற சீன நடிகர்
(1) கனாமி மோட்டோ கியோ (2) மீ லாங் பாங்
(3) சியாமி மோட்டோ கியோ (4) சுவான் சென் (.......)

☛ பொருத்தமான விடைகளை எழுதிக் கீறிட்ட இடங்களை நிரப்புக.

17. யப்பானிய நாடக மரபுகள்
(1) ..........................................
(2) ..........................................

18. கூத்தில் சபை விருத்தம் என்பதைப் பாடுபவர்.......................................... ஆவார்.

19. எலிசபெத் காலத்தில் (சேக்ஸ்பியரை விடுத்து) சிறந்து விளங்கிய இரு நாடக ஆசிரியர்கள்
(1) ..........................................
(2) ..........................................

20. கோயிற் பண்பாட்டில் (பல்லவர், சோழர் காலம்) ஆற்றுகை செய்த பெண்பாற் கலைஞர் இருவர்
(1) ..........................................
(2) ..........................................

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre) II

இரண்டு மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி ஆ

### உலக நாடக அரங்கு

1. ஒதெல்லோ நாடகத்தில் ஒதெல்லோவின் பாத்திரவாக்கம் அமைந்துள்ள முறைமையை விளக்குக.

2. இப்சன் நாடகங்களில் காணப்படும் பாத்திரவாக்கம் குறியீட்டு வாதம், காட்சி என்பவற்றை "ஒரு பாவையின் வீடு" என்னும் நாடகத்தினூடாக எடுத்துக் காட்டுக.
3. அன்ரன் செக்கோவின் "செரிப்பழத் தோட்டம்" நாடகம் இன்பியல் முடிவைத் தருகிறதா? துன்பியல் முடிவைத் தருகிறதா? அந்நாடக பாடத்தினூடாக விளக்குக.
4. மாணிக்கமாலை (இரத்தினாவளி)யில் காணப்படும் சமஸ்கிருத நாடகப் பண்புகளை எடுத்துக் கூறுக.

### இலங்கை அரங்கு

5. சூரன்போர் அல்லது அர்ச்சுனன் தபசு இல் காணப்படும் நாடக அம்சங்களை எடுத்துக் காட்டுக.
6. தமிழில் பார்சி வழி ஸ்பெசல் நாடகமரபு தொடர்ந்தும் ஒரு வலுவான நாடக முறையாக இருக்க முடியாது போனமைக்கான காரணங்களை விளக்குக.
7. சொக்கரியின் முக்கியத்துவம் யாது? விளக்குக.
8. "இலங்கையின் தமிழ் நவீன நாடக வளர்ச்சியில் நா.சுந்தரலிங்கத்திற்கு மறுக்கப்பட முடியாத ஓர் இடம் உண்டு." விளக்குக.

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)III

ஒரு மணித்தியாலம்

பகுதி அ விலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ வின் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி அ

☞ பின்வரும் கூற்றுகள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்புக் குறியினுள் அடையாளமிடுக.

1. கதாசிஸ் என்பது உண்மையில் உணர்ச்சி வெளிக்கொணர்கை ஆகும் (.......)
2. நாடக இசை அமைப்பாளருக்கு லயம், ஒத்திசைவு என்பன அவசியம். (.......)



3. நடிகர் தெரிவு மேடை முகாமையாளரால் செய்யப்படுவது. (.......)
4. நடிகர் - பார்ப்போர் விளக்கத்திற்காக தனது பாத்திர அந்தரங்க உணர்ச்சியைக் கூறும் முறைமை "புறச்சொல்" எனப்படும். (.......)
5. நாடகத்தின் பிரதான நோக்கம் யாதேனும் ஒரு செய்தி சொல்லுதல். (.......)

☞ சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் இடுக.

6. நாடக "ரச" வுக்கு முதலிடம் கொடுப்பது.
   (1) கிரேக்கம் (2) சமஸ்கிருதம் (3) எலிசபெத்
   (4) ரோம் (.......)
7. நடிகர்களின் அலங்காரம் என்பது
   (1) ஆபரணம் (2) வேடமுகம் (3) வேட உடை
   (4) முடிகள் (.......)
8. ஒன்னகத்தா என்பது கபுக்கியில்
   (1) பிரதான நடிகர் (2) ஆண் ஆணுக்காக நடித்தல்
   (3) ஆண் பெண்ணுக்காக நடித்தல் (4) பெண் ஆணுக்காக நடித்தல் (.......)
9. நாடக விமர்சனத்திற்குப் பொருந்தாக் குணம்
   (1) நாடகம் பற்றி அறிந்திருத்தல் (2) பக்கச் சார்பின்மை
   (3) நேர்மை பயமின்மை (4) பயந்து பாராதிருத்தல் (.......)
10. நடிகன் பயன்படுத்தும் பிரதான மூலகம்
   (1) வேடமுகம் (2) அங்கம் (3) ஆடை அணி
   (4) ஒப்பனை (.......)
11. மேலைத்தேய நாடகத்துடன் தொடர்பில்லாதது
   (1) மூன்று ஒருமைப்பாடுகள் (2) நான்கு வகை அபிநயங்கள்
   (3) தூரப்படுத்தல் (4) இயல்புநெறி வாதம் (.......)

☞ பொருத்தமற்றதைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் இடுக.

12. உடலசைவுகள் மேடையில் இடம் பெறுவது
   (1) இசைக்கேற்ப (2) பாத்திரத்திற்கு ஏற்ப
   (3) உடலுக்கேற்ப (4) மோடிக்கேற்ப (.......)

☞ பொருத்தமானதைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் இடுக.

13. மேடை அலங்காரம் என்பது
(1) ஆடை அணிகள் கொண்டது
(2) மேடையை அழகாக வைத்திருத்தல்
(3) பார்வையாளர் பார்க்க வசதியாக இருத்தல்
(4) நாடக அளிக்கைக்கும் மோடிக்குமேற்ற வகையில் அமைத்தல் (.......)

14. இவர்களுள் வேறுபடுபவர் யார்?
(1) இப்சன் (2) ஸ்ரனிஸ்லவஸ்கி
(3) இயினஸ்கோ (4) மேயர் கோல்ட் (.......)

15. நாடகத்தின் நோக்கம் எனப்படுவது
(1) அனைவருக்கும் பார்க்க இன்பம் அளிப்பது.
(2) படித்தவர்க்கு மாத்திரம் இன்பம் அளிப்பது.
(3) மக்களுக்கு அறிவுறுத்துவது.
(4) அரசியல் பொருளாதார நிலைமையை எடுத்துக்காட்டுவது. (.......)

☞ பொருத்தமான விடைகளைக் கீறிட்ட இடங்களில் எழுதி நிரப்புக.

16. அரங்கில் பயன்படும் இரு வகைப் பொட்டொளிகள்
(1). ..........................................................
(2) . ..........................................................

17. நாடகப் பாடலின் இரு பண்புகள்
(1). ..........................................................
(2) . ..........................................................

18. இறுதி ஒத்திகையின் பெயர் ..........................................
.......................................................... ஆகும்.

19. கனாமிச்சி (Kanamichi) என்பது
..........................................................

20. கலைப்படைப்பை இரசிக்கும் ஒருவருக்குரிய பெயர்
..........................................................



## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)III

இரண்டு மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிந்தெடுத்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி ஆ

### பிரிவு I

### நாடகத்தயாரிப்பு, நெறியாள்கை

1. நாடகம் பார்வையாளரிடத்து வேண்டிய தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு நாடக ஆசிரியர், நாடக நெறியாளர் கையாள வேண்டிய முறைகள் யாவையென விளக்குக.

2. அரங்கக் கலை என்பது யாது? வெற்றிகரமான நாடகம் ஒன்று அவைக்காற்ற வேண்டியுள்ளது. நீர் ஒரு நெறியாளர் என்ற வகையில் அந்நாடகத்தை எவ்வாறு நெறியாள்கை செய்வீர்?

### பிரிவு II
### நடிப்பு

3. நடிகர் ஒருவர் ஒரு பாத்திரத்தைச் சித்திரிக்கத் தன்னை எவ்வெவ்வாறு தயார் செய்துகொள்கிறார் என்பதை விளக்குக.

4. உமது நடிப்பு அனுபவத்தை ஆதாரமாகக்கொண்டு ஒரு நடிகர் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துக் கூறுக.

### பிரிவு III

### இசை, ஒளி, ஒலி, காட்சியமைப்பு, ஒப்பனை, வேட உடை

5. நாடகம் ஒன்று தயாரிக்கப்படும்பொழுது வேட உடை, ஒப்பனை அமைப்பாளர்களின் பணிகள் யாவை?

6. சமகால நாடகங்களில் மேடை முகாமையாளர் அவசியமா? காரணங்கள் காட்டி விளக்குக.

### பிரிவு IV

### நாடக இரசனையும் மதிப்பீடும்

7. ஒரு நாடகத்தின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பவர் பார்வையாளரே. இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

8. நாடகக் கலையில் பங்காற்றும் கீழைத்தேய, மேலைத்தேய நாடகக் கொள்கையாளரிடையே காணப்பெறும் கருத்துக்கள் யாவை?

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சை 2006 ஏப்ரல் (புதிய பாடத்திட்டம்)

## நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)I

ஒரு மணித்தியாலம்

பகுதி அ இலுள்ள எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதிய பின்னர் பகுதி ஆ இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.
பகுதி ஆ இல் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி அ

☞ பின்வரும் கூற்றுகள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்புக் குறியினுள் அடையாளமிடுக.

1. எல்லாக் கலைகளையும் போன்று நாடகமும் மதச்சடங்கின் அடியாகவே தோன்றியது. (.......)
2. அரிஸ்ரோட்டில் திறஜெடியை அதன் கவிதைத் தளத்திலிருந்தே விரித்துப் பேசுகிறார். (.......)
3. ரெரன்ஸ் அற்புதமான திறஜெடிகளை எழுதியுள்ளார். (.......)
4. சீன மரபிலும் கபுக்கி, "நொஹ்" (NOH) நாடகங்கள் உள்ளன. (.......)
5. "அற்புத நாடகங்கள்" கிறிஸ்தவ மதஞ் சம்பந்தப்பட்டவை. (.......)
6. ஷேக்ஸ்பியர் காலத்தில் அவரது நாடகங்களில் பெண்களே பெண் வேடங்கள் தாங்கி நடித்தனர். (.......)
7. புரோட்வே என்பது இங்கிலாந்தின் ஜனரஞ்சக நாடக அரங்கைக் குறிக்கும். (.......)



☞ சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் இடுக.

8. பிரகசனம் என்பது
   (1) அங்கத (2) ஹாஸ்ய (3) சோக
   (4) துப்பறியும் நாடகத்தைக் குறிக்கும். (.......)
9. நாடகக் கதைப்பின்னல் என்பது
   (1) நாடகத்தின் கதையை முதலிலிருந்து முடிபு வரை கூறுவது
   (2) நாடகத்தின் தளமாக அமையும் கதையைக் கோர்வைப்படுத்தி அமைப்பது
   (3) நாடகத்தினுள் பல்வேறு கதைகளைப் பின்னிவிடுவது
   (4) நாடகத்தில் வரும் சூழ்ச்சியை எடுத்துக் காட்டுவது (.......)
10. மேல் நாட்டு நாடக மரபில் முதல் நடிகராகக் கொள்ளப்படுபவர்
   (1) அரிஸ்ரோஃபெனஸ் (2) ஷேக்ஸ்பியர் (3) செனகா
   (4) தெஸ்பிஸ் (.......)
11. கிரேக்க நாடகத்தில் கிரேக்கபூர்வ திறஜெடியில் வரும் கோரஸ் எனும் ஆடல் பாடல் குழு
